திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீ மகாவிஷ்ணுவும், தேவியும்

மலர் 7] குரோதி தை—பிப்ரவரி 1965 [மணி 5

உ

சென்னை அரசாங்க அறநிலையப்

காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் நிகழ்ந்த பாவை மா நாட்டில் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், கலந்துகொண்டு ஆசியுரை வழங்குதல்.

ஸ்ரீ புதுப் பெரியவாள் அவர்கள் குழந்தைகளுக்குப் பரிசு வழங்குதல் – (25, 26-12-64.)

பொருள் அடக்கம்

1. திருச்சந்த விருத்தம்.
2. 'திருநெறிய தமிழ்'.
3. வாழ்வியற் சொல்லோவியம்.
4. சம்பந்தரும் பட்டினத்தடிகளும்.
5. கோயில்களின் கோயில்.
6. தைப்பூசமும் தெப்ப விழாவும்.
7. 'பெரிய அன்பின் வரகுணதேவர்'
8. வாமனன் திருவிக்கிரமன்.
9. கூத்தாடு தேவர்.
10. மாதவாசாரியரும் சைவசித்தாந்தமும்.
11. பழுவேட்டரையர்.
12. களத்தூர்க் கல்வெட்டுக்கள்.
13. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை.

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "**திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34**" என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி தை–பிப்ரவரி 1965 [மணி 5

திருச்சந்த விருத்தம்

திருமழிசையாழ்வார் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்கள் இரண்டு. அவை முறையே **திருச்சந்த விருத்தம்**, நான்முகன் திருவந்தாதி என்பன. இவ்விரண்டனுள் முன்னையது முதலாயிரத்திலும், பின்னையது இயற்பா என்னும் மூன்ருவது ஆயிரத்திலுட் அமைந்துள்ளது. இனிய ஓசையால் அமைந்த விருத்தப் பாடல்கள் ஆதலின், இவற்றிற்குச் 'சந்த விருத்தம்' எனப் பெயர் வழங்குவதாயிற்று. இப்பாடல்களிலே திருமழிசைப் பிரான், இறையருளால் தாம் பெற்ற பெறலரும் பேறுகளை வியந்து, பாடி மகிழ்ந்து இன்புறுகின்ருர். இப்பாடல்களின் பொருளை ஈண்டு இயன்ற அளவு சுருங்கக் காண்போம்.

பூநிலாய ஐந்துமாய்ப்
புனற்கண்நின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச்
சிறந்தகால் இரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி
வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம்நின்னை
யார்நினைக்க வல்லரே?

(பொழிப்புரை) நிலம் தீ நீர் வளி விசும்பு எனப் பூதங்கள் ஐந்து. **நிலம்** சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்து குணங்களையுடையது. **நீர்** சப்தம் பரிசம் ரூபம் ரசம் என நான்கு குணங்கள் உள்ளது. **தீ** சப்தம் பரிசம் ரூபம் என மூன்று குணங்கள் கொண்டது. **வளி** சப்தம் பரிசம் என இரண்டு குணங்களைப் பொருந்தியது. **விசும்பு** சப்தம் என்னும் ஒன்றே அமைந்தது. இப் பஞ்ச பூதங்களுக்கும், இவற்றின் குணங்களுக்கும் நிர்வாஹகனாய் இருக்கும் எம்பெருமானே! நீ இவ்வண்டத்துக்குட்பட்டவையாய் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாய் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் ஆன்மாவாக விளங்குகின்ருய். அத்தகைய நின்னைத் தம்முடைய முயற்சியினுல் தாமே ஆராய்ந்து சிந்தித்து அறிந்து கொள்ள வல்லவர்கள் ஒருவரும் இல்லை. **(1)**

ஆறும் ஆறும் ஆறுமாய்
ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
ஏறுசீர் இரண்டும் மூன்றும்
ஏழும் ஆறும் எட்டுமாய்

வேறு வேறு ஞானம் ஆகி
மெய்யி னோடு பொய்யுமாய்
ஊரொடு ஓசை யாய ஐந்தும்
ஆய ஆயவா மாயனே.

(பொழிப்புரை) அத்யயநம் அத்யாபநம் யஜநம் யாஜநம் தானம் பிரதிக்ரஹம் என்னும் **அந்தணர் கடமைகள்** ஆறுக்கும், அக்கடமைகளைச் செய்வதற்குரிய வஸந்தம் கிரீஷ்மம் வர்ஷம் சரத் ஹேமந்தம் சிசிரம் என்னும் **பருவங்கள்** ஆறுக்கும் நிர்வாஹகனே! ஆக்நேயம் அக்நீஷோமீயம் உபாம்சுயாஜம் ஈர்ஐந்த்ரம் ஐந்த்ராக்நம் என்னும் **யாகங்கள்** ஆறினாலும் ஆராதிக்கத் தகுந்தவனே! தேவயாகம் பிதிர்யாகம் பூதயாகம் மனுஷ்யயாகம் பிரம்மயாகம் என்னும் **வேள்விகள்** ஐந்தினாலும், பிராணன் அபானன் வியானன் உதானன் ஸமானன் என்னும் **ஆகுதிகள்** ஐந்தினாலும், ஆராதிக்கப்படுபவனே! காருகபத்தியம் ஆகவநீயம் தட்சிணாக்கினி ஸப்பியம் ஆவஸத்யம் என்னும் **அக்கினிகள்** ஐந்தையும் சரீரமாகக் கொண்டவனே! ஞானம் விரக்தி என்னும் **சாதனங்கள்** இரண்டையும், அவற்றினால் விளையும் ஐச்வர்யம் கைவல்யம் பகவத் பிராப்தி என்னும் **சாத்தியங்கள்** மூன்றையும், விவேகம் விமோகம் அப்யாஸம் கிரியை கல்யாணம் அநவஸாதம் அநுத்தர்ஷம் என்னும் **நலங்கள்** ஏழையும் அளிக்க வல்லவனே! ஞானம் பலம் ஐச்வர்யம் வீரம் சக்தி தேஜஸ் என்னும் குணங்கள் ஆறுக்கும், தீவினைத் தொடக்கின்மை (அபஹதபாப்மத்வம்) மூப்பின்மை (விஜரத்வம்) இறப்பின்மை (விம்ருத்யுத்வம்) சோகமின்மை (விசோகத்வம்) பசியின்மை (விஜிகத்ஸத்வம்) விடாயின்மை (அபிபாஸம்) அன்பர்க்கினிமை (ஸத்யகாமம்) பழுதுபடா நினைவு (ஸத்ய ஸங்கல்பம்) என்னும் **குணங்கள்** எட்டுக்கும் உரிய தலைவனே! புறச் சமயங்களுக்கும் குறுஞ் சமயங்களுக்கும் எல்லாம் கூடப் பிரவர்த்தகனே! ஞானிகளுக்கு மெய்யனாயும் அல்லாதார்க்குப் பொய்யனாயும் விளங்குபவனே! பரிசம் சப்தம் முதலிய ஐந்து புலன்களுமாகத் திகழ்பவனே! இடையர்கள் நடுவே அவர்களோடொப்ப வந்து தோன்றியவனே! நின்னை நினைத்து உணர வல்லவர்கள் யாவர் உளர்? (2)

ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி
அல்ல வற்றுள் ஆயுமாய்
ஐந்தும் மூன்றும் ஒன்றும் ஆகி
நின்ற ஆதி தேவனே!
ஐந்தும் ஐந்தும் ஐந்தும் ஆகி
அந்தரத் தணைந்து நின்று
ஐந்தும் ஐந்தும் ஆய நின்னை
யாவர் காண வல்லரே?

(பொழிப்புரை) நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் **பூதங்கள்** ஐந்தும், செவி, வாய், கண், மூக்கு, உடல் என்னும் **ஞானேந்திரியங்கள்** ஐந்தும், வாய், கை, கால், குதம், குறி என்னும் **கன்மேந்திரியங்கள்** ஐந்தும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் **தன்மாத்திரைகள்** ஐந்தும், பிரகிருதி, மான், அகங்காரம் என்ற மூன்றும், மனம் என்ற ஒன்றும் ஆகிய **இருபத்து நான்கு** தத்துவங்களுக்கும் தலைவனே! **அசித்துப்** பொருள்கள் ஆகிய அவற்றைப்போல் அன்றிச் **சேதநர்கள்** என உள்ளவர்களுக்கும் அந்தரியாமியாய் எழுந்தருளி நிற்கும் முழு முதற்கடவுளே! பரமபதத்திலே பொருந்தி நின்று, அங்கேயுள்ள அப்பிராகிருதம் ஆன பூதங்கள் ஐந்துக்கும், ஞானேந்திரியங்கள் ஐந்துக்கும், கன்மேந்திரியங்கள் ஐந்துக்கும் நிர்வாஹகனே! சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் போக்யப் பொருள்கள் ஐந்துமாய், போகஸ்தானம் போக உபகரணம், வைகுந்தத்து அமரர் முனிவர் முக்தர் என்னும் ஐந்து வகுப்புகளுக்கும் நியாமகனுமாய் விளங்குகின்ற நின்னை, யாவர் தம்முடைய முயற்சியினாற் கண்டுணர வல்லவர்கள் ஆவர்? (3)

மூன்று முப்பது ஆறினோடு
ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்
மூன்று மூர்த்தி யாகி மூன்றும்
மூன்றும் மூன்றும் மூன்றுமாய்

தோன்று சோதி மூன்றுமாய்த்
துளக்கமில் விளக்கமாய்
ஏன்று என் ஆவியுள் புகுந்தது
என் கொலோ ? எம் ஈசனே !

(பொழிப்புரை) முப்பத்து மூன்று ஊல் (மெய்) எழுத்துக்களுக்கும், பதினாறு அச்சு (உயிர்) எழுத்துக்களுக்கும் நிர்வாஹகனே! இருக்கு எசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களின் வடிவமானவனே! "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்னும் பன்னிரண்டெழுத்து மந்திரத்தாற் பிரதி பாதிக்கப் படுபவனே! அ + உ + ம் என்னும் மூன்று எழுத்துக்களால் ஆகிய பிரணவத்தின் கண் சோதி மயமாக விளங்குபவனே! என்றும் அழிவு அற்ற விளக்கு ஆகிய அகாரம் என்னும் சொற்பொருளாகத் திகழ்பவனே! என்றும் எங்களுக்கு இனிய தலைவனாக இருப்பவனே! யான் செய்தற்குரிய கடமைகளை யெல்லாம் நீயே நின் தலைச்சுமையாக 'ஏறிட்டுக் கொண்டு, என் உள்ளத்தினுள்ளே நீ புகுந்து கொண்டிருப்பது, என்ன இரக்கம்! (4)

நின்று இயங்கும் ஒன்றலா
உருக்கள் தோறும் ஆவியாய்
ஒன்றியுள் கலந்து நின்ற நின்ன
தன்மை இன்னது என்று
என்றும் யார்க்கும் எண்ணிறந்த
ஆதியாய் நின் உந்திவாய்
அன்று நான்முகற் பயந்த
ஆதி தேவன் அல்லையே !

(பொழிப்புரை) நிற்பன (தாவரம்) ஆகவும், இயங்குவன (சங்கமம்) ஆகவும் உள்ள பலவகையான உடல்கள் தோறும் உயிராகப் பொருந்தி, உள்ளே கலந்து இயைந்து நிற்கின்ற நின்னுடைய இயல்பு இத்தகையது என்று, எக்காலத்திலும் எத்தகைய ஞானிகளும் எண்ணியுணர்தல் இயலாத ஆதிகாரண பூதன் ஆன எம்பெருமானே! நீ முற்காலத்திலே நின்னுடைய திருவுந்திக் கமலத்தில் இருந்து நான்கு முகங்களையுடைய பிரமதேவனைப் படைத்த முழு முதற் கடவுள் அல்லையோ! (5)

நாகம் ஏந்தும் மேரு வெற்பை
நாகம் ஏந்தும் மண்ணினை
நாகம் ஏந்தும் ஆக ! மாகம்
மாகம் ஏந்து வார்புனல்
மாகம் ஏந்தும் மங்குல் தீஓர்
வாயுஐந்து அமைந்து காத்து
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை
நின்கணே இயன்றதே !

(பொழிப்புரை) திருவனந்தாழ்வான் ஆகிய நாகமானது தாங்குகின்ற திருமேனியை யுடைய பெருமானே! தேவருலகத்தைத் தாங்குகின்ற மேரு மலையையும், எட்டுத்திக்கு யானைகள் தாங்குகின்ற பூமியையும், பரம பதத்தையும், ஆகாயமானது தாங்குகின்ற சிறந்த கங்கை யாற்றினையும், மேகக் கூட்டங்களையும் வைச்வாநரம் என்னும் நெருப்பினையும், பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என்னும் ஐந்து வாயுக்களையும் பொருந்தக் காப்பாற்றி, 'இவைகள் எல்லாவற்றையும் ஒரு பொருளே தாங்கிக் கொண்டு ஆதாரமாக நிற்கின்றது' என்று உபநிடதங்களில் சொல்லப் பட்டுள்ள சிறப்பியல்பு, நின்னிடத்தில் தான் இருக்கின்றது!

[நாகம் - தேவருலகம். நாகம் - யானை. நாகம் - பாம்பு. அனந்தாழ்வான். ஆகம் - உடம்பு. ஆக - திருமேனியை உடையவனே. மாகம்-பரமபதம். மாகம் - ஆகாயம். மங்குல் - மேகம். ஏகம் - ஒன்று, நீர்மை - இயல்பு.] (6)

ஒன்று இரண்டு மூர்த்தியாய்
உறக்கமோடு உணர்ச்சியாய்
ஒன்று இரண்டு காலம் ஆகி
வேலை ஞாலம் ஆயினாய்
ஒன்று இரண்டு தீயும் ஆகி
ஆயன் ஆய மாயனே !
ஒன்று இரண்டு கண்ணினாலும்
உன்னை ஏத்த வல்லனே ?

(பொழிப்புரை) தலைமையான ஒரு மூர்த்தியும், தலைமைபற்றபிரமன் உருத்திரன் எனும் இரண்டு மூர்த்திகளுமாய், அறியாமைக்கும் நல்லுணர்வுக்கும் நியாமகனாய், இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலங்களுக்கும் நிர்வாஹகனாய், கடல் சூழ்ந்த நிலவுலகத்திற்குப் பிரவர்த்தகனாய், ஆகவநீயம் தட்சிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினிகளுக்கும் தலைவனாய், இடையர்களோடு ஒக்க வந்து உதித்தருளிய வியத்தகு பண்பினன் ஆன பெருமானே! மூன்று கண்களையுடைய சிவபிரானும் கூட, உன்னுடைய புகழை முற்ற உணர்ந்து துதிக்க வல்லவன் அல்லன்.

[வேலை - கடல், ஞாலம் - பூமி, ஒன்றிரண்டு கண்ணினான் - முக்கண்ணன் ஆகிய சிவபெருமான்.] (7)

ஆதி யான வானவர்க்கும்
அண்டம் ஆய அப்புறத்து
ஆதி யான வானவர்க்கும்
ஆதி யான ஆதி நீ!
ஆதி யான வான வாணர்
அந்த காலம் நீயுரைத்தி.
ஆதி யான காலம் நின்னை,
யாவர் காண வல்லரே?

(பொழிப்புரை) முற்பட்டது ஆகிய ஆதி காலத்துக்கு நிர்வாஹகனே! உலகப் படைப்பு முதலியவற்றுக்குக் காரணம் ஆன பிரமன் முதலிய தேவர்களுக்கும், அண்டம் என்று பெயர் பெற்ற பரமபதத்திலுள்ள முதல்வர்கள் ஆகிய நித்ய சூரிகளுக்கும் முதல்வன் ஆன பெருந்தலைவன், நீயே ஆக விளங்குகின்றாய். வானுலகில் வாழ்கின்ற பிரமன் முதலிய தேவர்களுடைய முடிவு காலத்தை, நீ அருளிச் செய்கின்றாய். இங்ஙனம் ஆதியாக உள்ள காலத்துக்கு நிர்வாஹகன் ஆன நின்னை, யாவர்தாம் தம்முடைய அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து அறிய வல்லவர்கள் ஆவர்?

[அண்டம் - பரமபதம், அந்த காலம் - முடிவு காலம். அந்தம் - முடிவு.] (8)

தாது லாவு கொன்றை மாலை
துன்னு செஞ்சடைச் சிவன்
நீதியால் வணங்கு பாத!
நின்மலா! நிலாயசீர்
வேத வாணர் கீத வேள்வி
நீதி யான கேள்வியார்
நீதியால் வணங்கு கின்ற நீர்மை,
நின்கண் நின்றதே!

(பொழிப்புரை) தாதுகள் பொருந்திய கொன்றைப்பூ மாலையையும், நெருங்கிய சிவந்த சடையினையும் உடைய உருத்திரன், முறைப்படி வணங்குகின்ற திருவடிகளையுடையவனே! மலங்கள் இல்லாதவனே! என்றும் நிலைபெற்ற சிறப்பினையுடைய வேதங்களைப் பயின்ற வைதிகர்களும், இனிய இசை மிழற்றி வேள்விகளை நிகழ்த்துபவர்களும், முறைப்படி கேட்டல் சிந்தித்தல் முதலியவற்றைச் செய்யும் பெரியவர்களும் ஆகிய இவர்களெல்லாம் முறைப்படி வழிபடுதற்குரிய சிறப்பு, நின்னிடத்தில்தான் அமைந்துள்ளது. (9)

தன்னுளே திரைத்தெழும்
தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்து
அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து
நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற
நீர்மைநின்கண் நின்றதே

(பொழிப்புரை) தனக்குள்ளே சுருண்டு எழுந்து பொங்குகின்ற அலைகளையுடைய வெண்மையும் விசாலமும் மிக்க கடலானது, தனக்குள்ளே சுருண்டு பொங்கி எழுந்து மீண்டும் அடங்கி விடுகின்ற இயல்பினைப் போல, நிற்பனவும் திரிவனவும் ஆகிய உலகப் பொருள்களெல்லாம் நின் வடிவத்திற்குள்ளே தோன்றி, முடிவடைந்து, நின் வடிவத்திற்குள்ளேயே ஒடுங்கி வருவதற்குரிய தன்மை, நின்னிடம் தான் அமைந்துள்ளது. (10)

—தொடரும்

திருநெறிய தமிழ்

'திருநெறிய தமிழ்' என்பது திருஞான சம்பந்தர் வழங்கியருளிய ஒரு சிறந்த தொடர். இத் தொடர், ஒரு வகையில் தமிழ் மொழியின் சிறப்பினைக் குறிப்பதோடு, திருஞான சம்பந்தர் முதன் முதலாகப் பாடியருளிய '**தோடுடைய செவியன்**'' என்னும் திருப்பதிகத்தை யுணர்த்தும் பெயராகவும் அமைந்துள்ளது. 'திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே' எனவரும் அத் திருப்பதிகத்தின் ஈற்றடியினால், அத் திருப்பதிகத்திற்குத் திருஞான சம்பந்தர் 'திருநெறிய தமிழ்' எனப் பெயர் வழங்கியருளினர் என்பது புலனாகின்றது. **இராமலிங்க அடிகளார்**, 'அன்புறு நெறியால் **திருநெறித் தமிழ்** கொண்டு ஐயம் நீத்தருளிய அரசே' என இச் சொற்றொடரினைப் பெரிதும் போற்றி எடுத்து வழங்கியுள்ள சிறப்பு, அறிந்து இன்புறற்பாலது. இத்தகைய திருநெறிய தமிழ்த் திருப்பதிகத்தின் பாடற் பொருளை, ஈண்டு இயன்ற அளவு ஒரு சிறிது காண்போம்.

தோடுடைய செவியன் விடையேறி ஓர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப்பொடி பூசி என்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே

(பொழிப்புரை) தோட்டினை அணிந்த திருச்செவியையுடையவன்; இடப வாகனத்தின் மீது ஏறி வருபவன்; ஒப்பற்ற தூய வெண்மையான பிறைச் சந்திரனைத் தலையில் தரித்திருப்பவன்; சுடுகாட்டில் உள்ள திருநீற்றுப் பொடியினைப் பூசுபவன்; என் உள்ளத்தினை யான் அறியாமலே கவர்ந்து, தன் வயப் படுத்திக் கொண்டவன்; இதழ்களை யுடைய மலர்களினால் முற்காலத்தில் வணங்கித் துதித்ததனால், இன்று என்னை ஆட்கொண்டு அருள்புரிந்த, பெருமை பொருந்திய பிரமாபுரம் என்னும் சீர்காழியில் எழுந்தருளியிருக்கும் பெருமான் ஆகிய இவன் அன்றோ, எம்மை இது செய்தான்!

[விடை ஏறி - மதி சூடி - பொடிபூசி என்பன வற்றை வினை எச்சங்கள் எனவும் கொள்ளலாம். அங்ஙனம் கொண்டால் பாடலின் முதல்வரியின் இறுதியில் மதி **சூடி(க்)** என வல்லொற்று மிகுந்து வரும்.

"ஏடுடைய மலரான் முனைநாள் . ." என்னும் தொடரை மலரால் எனப் பிரிக்காமல் மலரான் எனப் பிரித்துத் 'தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன்' எனவும் சிலர் பொருள் கொள்ளுவர்.]

இத்திருப்பாடல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், முதல் திருமுறையின் முதல் திருப்பாடலாக விளங்குவது. மூன்றாண்டுச் சிறுகுழந்தையாக இருந்த திருஞான சம்பந்தர், சீர்காழிப் பிரம தீர்த்தக் கரையில் அம்மையப்பரால் அருள் ஞானப்பால் ஊட்டப்பெற்ற நிலையில், அவர்தம் தந்தையார் ஆகிய **சிவபாத இருதயர்** 'எச்சில் மயங்கிட இதனை உனக்குக் கொடுத்தவர் யார்?' என்று சினந்து வினவ, அவருக்கு விடையாக அடையாளங்கள் சாற்றி, இசைத் தருளிய திருப்பாடல் இது!

'ஒரு சிறந்த கவிதையானது, தோட்டனைத் தூறும் மணற்கேணி போல், ஆராயுந்தோறும் அரிய பல நுண் பொருட் குறிப்புக்களை யுணர்த்தவல்ல தாகத் திகழும். கவிதையின் சிறப்பினை யுணர்வதற்கு அதுவே ஓர் அடையாளம்' என அறிஞர்கள் கூறுவர் (1). அதனை ஒட்டி, இத்திருப்பாடலின்கண் அமைந்துள்ள ஒரு சில பொருள் நுட்பங்களை மட்டும் காண்போம்;

---

(1) "The proof of **the purest poetry** is that its meaning is **inexhaustible.**"

—Prof. A. C. Bradley,
Oxford Lectures on Poetry.

(1) தேவாரம் தமிழ் வேதம். சம்பந்தர் தமிழ் வேதத்தினை அருளிச் செய்ய முதன் முதலாகத் தலைப்படுகின்றார். வேதம் ஓதத் தலைப் படுவோர், ஓம் என்னும் பிரணவ மந்திரத்தினைக் கூறியே தொடங்குவர். '**ஓம்** என்று மறை பயில்வார் உறையும் பிரமபுரம்' எனச் சம்பந்தரே பிறிதோர் இடத்திற் குறிப்பிடுகின்றார். ஆதலின் ஓங்கார மந்திர ஒலி முதற்கண் அமையத் தமிழ் வேதத்தினைத் தொடங்கி யருள்கின்றார் சம்பந்தர்.

(2) உயிரும் மெய்யும் சேர்ந்ததே உலகம். உயிராகிய சிவமும், மெய்யாகிய சத்தியும் சேர்ந்து இயைந்து நின்ற வழியே, உலகம் இயங்கத் தலைப்படும். ஆதலின் சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் பிரமப் பொருளையும், காயத்திரி மந்திரங்களில் சிவ சத்தியின் உண்மை நிலையையும் குறிப்பதாக வழங்கி வரும் '**த்**' என்னும் மெய்யெழுத்துடன், ஓங்கார மந்திர ஒலியைச் சேர்த்து, **த் + ஓ – தோ** எனத் தமிழ் வேதம் இப் பாடலினால் தொடங்கப் பெற்றது. இந் நுண் பொருட் குறிப்பினை,

> " எல்லையிலா மறைமுதல் மெய்யுடன்
> எடுத்த எழுதும்மறை
> மல்லல்நெடுந் தமிழால்இம்
> மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப "

எனச் சேக்கிழார் சுவாமிகள் விளக்கி யருளி யிருத்தல் காணலாம்.

(3) தாம் அருளிச் செய்யத் தலைப் படும் தமிழ் வேதம் ஆகிய தேவாரத்தினை, இறைவன் தன் இரு செவிகளாலும் கேட்டு இனிது உவந்து ஏற்றுக் கொண்டு அருள்புரிதல் வேண்டும் என விரும்பி, அவனது திருவடிகள் முதலிய பிற உறுப்புக்களைக் குறிப்பிடாமல், திருச் செவிகளையே முதற்கண் சிறப்பித்துச் '**செவியன்**' என்று சுட்டி யருளினார் சம்பந்தர்.

(4) இறைவனின் இரு செவிகளிலும் முறையே **அசுவதரன் கம்பளன்** என்னும் கந்தருவர்கள் இருவர் தோடும் குழையுமாக இருந்து இசைபாட, அதனை ஏற்று இறைவன் மகிழ்வுறுகின்றான் என்பது வரலாறு. அம் முறையில் தமிழ் வேதம் ஆகிய தம்முடைய பாடல்களையும் இறைவன் ஏற்றுக் கொண்டு அருளுதல் வேண்டும் என்னும் விண்ணப்பக் குறிப்பு உணர்த்த, வறிதே 'செவியன்' என்று கூறி அமையாமல் "**தோடுடைய செவியன்**" என்று சிறப்பித்துக் கூறினார். இதனை,

> " பல்லுயிரும் களிகூரத்
> தம்பாடல் பரமர்பாற்
> செல்லும்உரை பெறுவதற்குத்
> திருச்செவியைச் சிறப்பித்தார் "

எனவரும் பெரிய புராணப் பாடற் பகுதி கொண்டு தெளியலாம்.

(5) 'உரைநடையில் சொற்களின் முதன்மையான வேலை, செய்தி கூறுதல்; கவிதைகளில், செய்தி கூறுதல் மட்டுமேயன்றி, ஒரு சில சமயங்களில் முதன்மையாகப் பல நுட்பக் குறிப்புக்களைப் புலப்படுத்திக் கொண்டு நிற்றலும் ஆகும்' (2) என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம் முறையில் 'தோடுடைய செவியன்' என்னும் சொற்றொடரில் வேறு பல நுட்பக் குறிப்புக்களும் அமைந்துள்ளன.

முதலில் தாயை அறிந்து கொண்டு, பின்னர் அவள் வாயிலாகவே நாம் தந்தையை உணர்தல் வேண்டும். அம்பிகையின் அருள் பெற்ற பின்னரே, இறைவனின் அருள் இனிது எய்தும். பெண்களின் காதணி ஆகிய '**தோடு**' குறிக்கப் பெற்றதனால், தாயின் வாயிலாகத் தந்தையை உணர்தலும், அம்பிகையின் அருள் பெற்று ஆண்டவன் அருளில் தலைப் படுதலும் ஆகிய உண்மைகள் உணர்த்தப் பட்டன.

---

(2) " The business of words in prose is primarily **to state**; in poetry, not only to state, but also, and sometimes primarily, **to suggest**". — JohnLivingston Lowes, *Convention and Revolt in Poetry.*

(6) பெண்களின் காதணி ஆகிய 'தோடு' பற்றிக் குறித்தும், 'தோடுடைய செவி**யன்**' என அன் ஈற்றில் ஆண் பாலாகக் கூறியமை, இறைவன் தன்னியல்பில் ஆணுருவமும் பெண்ணுருவமும் ஒருங்கே கலந்த **அர்த்த நாரீசுவரத் திருமேனி** யுடையனுதலையும், அத்தகைய அருளுருவத் திருமேனி கொண்டு போந்தே தமக்குக் காட்சி நல்கி ஆண்டு கொண்டருளின னுதலேயும், உணர்த்துதற் பொருட்டாகும். இது பற்றியே சீர்காழிப் பதிகங்களின் பாடல்களிற் பெரும்பாலும் அம்மையாரையும் உடன் சுட்டியே இறைவனைச் சம்பந்தர் பாடியருளி யிருக்கின்றார்.

(7) இப் பாடற்கண் இறைவன் இயற்றும் ஐந்தொழில்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. **'விடை ஏறி'** என்பது படைப்பைக் குறிக்கும்; ஊழி முடிவில் உலகுயிர்கள் யாவும் அழிந்தொழியவும், அறக் கடவுள் அழியாது இறைவன்பால் விடையாய் நின்று மீளவும் உலகப் படைப்பில் உளதாதலால். 'தூவெண் **மதி சூடி**' என்பது காத்தலை யுணர்த்தும்; தக்கனின் சாபத்தால் அழிந்து படாமல் இறைவன் சந்திரனைக் காத்தருள் புரிந்ததனுல். 'காடுடைய சுடலைப் **பொடிபூசி**' என்பது அழித்தலைக் குறிக்கும்; ஊழி முடிவில் உலகங்களெல்லாம் முடிந்து அழிவு எய்திச் சுடுகாடாகி நிற்க, அங்கே யுளதாகும் சாம்பற் பொடியினைத் தன் திருமேனியிற் பூசிக்கொண்டு மகிழ்தலால். 'உள்ளங்கவர் **கள்வன்**' என்பது மறைத்தலை யுணர்த்தும். '**பணிந்தேத்த அருள் செய்த**' என்பது அருளலைச் சுட்டும்.

(8) இறைவனின் எட்டுக் குணங்களும் இப் பாடற்கண் சுட்டப் பெற்றுள்ளன என்பதும் ஒரு கருத்து. **'தோடுடைய செவி'** பேரருளுடைமை. **விடையேறி** தன்வயத்தனுதல், தூயவுடல். **மதிசூடி** முற்றறிவுடைமை, **பொடிபூசி** வரம்பிலின்பமுடைமை, **உள்ளங்கவர் கள்வன்** இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், இயற்கை யுணர்வு. **பிரமாபுரம்** அளவிலாற்றலுடைமை.

(9) இறைவனை அருவம் என்று சில சமயங்கள் கூறும்; உருவம் என்று சில சமயங்கள் கூறும், ஆனுற் சைவ சித்தாந்தம் இறைவனை உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளை யுடையவனுகக் குறிப்பிடும். அக் குறிப்பும் இப் பாடலின்கண் அமைந்துள்ளது. விடையேறி, மதிசூடி என்பன **உருவம்,** பொடி பூசி, பிரமாபுரம் என்பன **அருவுருவம்,** உள்ளங்கவர் கள்வன் என்பது **அருவம்** என மூன்றும் காண்க.

(10) இப்பாடலில் செவியன் - விடையேறி - மதி சூடி - பொடி பூசி - கள்வன் - பெம்மான் என்னும் ஆறு பெயர்களைக் கூறி, அவற்றிற்கெல்லாம் முடிக்குஞ் சொல்லாக **இவன்** என்பதனைக் கூறியமை, இறைவன் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் விரவி நின்றே, அவற்றின் வேருய் மேம்பட்டு நிற்கும் சிறப்பியல்பை உணர்த்தும் என்பதும் ஒரு கருத்து.

(11) இப்பாடல் தோடு முதலிய 36 சொற்களால் அமைந்துள்ளதனுல் 36 **தத்துவங்களும்**; நான்கு அடிகளாக இயன்றதனுல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வகை **நெறிகளும்**; அடிதோறும் ஐந்து சீர்கள் கொண்டிருத்தலால், **திருவைந்தெழுத்து**- இறைவனின் ஐந்து தொழில்கள்-ஐந்து சத்திகள்-ஐந்து மலங்கள் முதலியனவும்; ஒற்று நீக்கி 18 எழுத்துக்களே அடிதோறும் எண்ணி வருதலால், **பதினெண் வித்தை**களின் இயல்பும் உணர்த்தியருள்கின்றது எனவும், அறிஞர்கள் நுனித்தாய்ந்து கூறுவர்.

முடிவுரை ;

இன்னேரனைய பல அரும்பெரும நுண்பொருட் குறிப்புக்கள் அமைந்த இத்திருநெறிய தமிழ்த் திருப்பதிகத்தினை நாம் அனைவரும் பலகாலும் பயின்றோதிப் பயன்பெற்று உய்வோமாக!

வாழ்வியற் சொல்லோவியம்

முன்னுரை :

ஓவியமும் காவியமும் ஒன்றற்கொன்று மிகவும் தொடர்புடைய கலைகள் என்பர். மிகப் பழங் காலத்தில் மக்கள் தம்முடைய எண்ணங்களை ஓவிய எழுத்துக்கள் (Pictograph) மூலமாகவே வெளியிட்டு வந்தனர். பின்னர் நாளடைவில் நாகரிகம் வளர வளரப் பல்வேறு மொழிகளும், அவற்றின்கட் பற்பல காவியங்களும் தோன்றலாயின.

இயற்கைக் காட்சிகளையும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளையும், ஓவியம் எழில்மிக்க வண்ணங்களினால் அழகுற வரைந்து காட்டுகின்றது. அங்ஙனமே காவியமும் அவற்றை அழகிய பற்பல சொற்களினால் நிரல்படத் தொகுத்துப் பாடி விளக்குகின்றது. இவ்வகையில் இரண்டற்கும் இடையே மிகமிக நெருங் கிய தொடர்பும், ஒப்புமையும் அமைந் திருத்தல் வெள்ளிடைமலை. ஓவியம் காவியம் என்னும் இரண்டுமே நம்மனோர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சிறந்த கலைகள். இவ்விரு கலைகளுமே நம்முடைய மனித வாழ்வியலை ஆராய்ந்து, சிந்தைக்கு இனிய முறையில் செவ்விதின் விளக்கிக் காட்டுகின்றன.

அருணகிரிநாதர் :

'**திருப்புகழ்**' என்னும் அழகிய தெய் வத் தமிழ்ச் சந்தப் பாடல்களை அருளிச் செய்த **அருணகிரிநாதர்** என்னும் அருட் பெருஞ் சான்றோரைப் பற்றி அறியாத வர்கள், தமிழ் நாட்டில் ஒருவரும் இரார். "ஐயா ! **அருணகிரி அப்பா !** உனைப் போல் மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?" என்று வியந்து, தவஞானப் பெருஞ் சான்றோர் ஆகிய **தாயுமான சுவாமிகள்** அருணகிரிநாதரைப் பாராட்டி யிருக்கின்றார் !

அத்தகைய பெருஞ்சிறப்பினர் ஆகிய அருணகிரிநாதப் பெருமான், தமது **திருப் புகழ்ப் பாடல்** ஒன்றில், நம் மனித வாழ் வியலின் தன்மைகள் அனைத்தையுமே, முதலில் இருந்து முடிவு வரையில், ஒரு சிறந்த பதிவுத் திரைப்படக் காட்சிச் சுருள் (Documentary-film-reel) போன்று, அழ கியதொரு சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டி யருள்கின்றார்.

சொல்லோவியம் :

"நம்முடைய மனித வாழ்வு அறுகம் புல்லின் நுனியில் உள்ள பனித்துளியைப் போன்று, மிகச் சிறிய அளவில் முதன் முதலில் தொடங்கு கின்றது. தந்தையின் விந்து, தாயின் சுரோணி தத்துடன் கலந்து கருப்பையைச் சென்று சேர் கின்றது. அங்கே அது பத்துத் திங்கள் தங்கி யிருந்து, பெரிய உடலாக வளர்ந்து குழந்தை யாகப் பிறக்கின்றது.

அக் குழந்தையினைப் பெற்றோர்களும் உற்றோர் களும் மிகவும் அன்புடன் எடுத்து வளர்க் கின்றனர். குழந்தை குதலை மொழிகள் பேசு கின்றது. அது கேட்டுத் தாயும் தந்தையும் மகிழ்ந்து, மோகங் கொள்கின்றனர். அருமை யினில் அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றுகின்றனர். குழந்தையின் உடல் மொளு மொளு என வளர்கின்றது. ஆளும் பெரியவன் ஆகி வாலிபப் பருவம் அடைகின்றான்.

பின்னர்ப் பெரிய மனிதனாகி, அழகிய நாகரிக நடையிற் பயிலுகின்றான். கிருதுபடும் மொழி கள் பழகுகின்றான். உயிர் போலும் தேவிமார் கள் பலருடன் தொடர்பு கொள்ளுகின்றான். நிலையற்ற உலகியல் வாழ்வினை நிலைபேறு உடை யது என எண்ணி மயங்குகின்றான். வீடு வாச லும் மாட கூடங்களும் தேடுகின்றான்.

பொருள் சேர்ப்பதிற் பேராசை கொண்டு, அணுவளவு தவிடு கூடக் கீழே விழுந்து சிதறி விடக் கூடாது என்று எண்ணும் இரக்கமற்ற கல்நெஞ்சனாய்ப் பரமலோபியாய் மாறுகின்றான். நூலுக்கு மட்டுமே நுழைய இடந்தரும் ஊசி யினைப்போன்று, தன் மனைவி மக்களை மட் டுமே யன்றி, மற்றைப் பிறரெவரையும் தன் பால் அணுக விட மாட்டான்.

ஸ்ரீ கன்னியாகுமரி அம்மன்

அவிந்து போவதற்கு முன்னர் ஒளிவிட்டு எரியும் சுடர் போல, இனிப் பின்னர்த் தனக்கு நேரக்கூடிய இன்னல்களைப் பற்றி எண்ணுமல், செருக்குற்று இறுமாந்து நிற்பான். ஓர் ஏழை இரவலனே, அன்றி ஒரு துறவியோ, தன் வீட்டின் முன் வந்து 'சிறிது சோறு போடுங்கள்' என்று கேட்டால், 'அதோ! மேற்கேயுள்ள வீட்டிற்குப் போய்க் கேள்' 'இதோ! கிழக்கிலேயுள்ள வீட்டிற்குச் சென்று கேள்' என்று சொல்லி விடுவான். அவர்கள் திரும்பிச் செல்லுவதற்கு முன்னரே, திடுதிடு என அவர்களின் எதிரே வேகமாக முடுகிச் சென்று, நாய் போலச் சீறிப் பாய்ந்து மேலே விழுவான்.

பின்னர்ச் சின்னளில், முன்னே அவன் பல தீய வழிகளிலும் முயன்று சேர்த்த பொருள் வளம் குறைந்து, வறண்டு போகத் தலைப்படுகின்றது. நல்லவர்களின் சொற்களை அவன் கேட்பதில்லை. வீணர்களின் பேச்சையே விரும்பி ஏற்று நடக்கின்றன். நீதி நெறிமுறைகள் பற்றியெல்லாம் அவன் நினைப்பதேயில்லை. இறைவனையும் அடியார்களையும் அறவே புறக்கணித்து, வீணர்களுக்கே விரும்பிச் சேவை பூண்டு பாவியாகிப் பழிவழிகளிற் படர்ந்து நிற்பான்.

அதனால் மினுகு மினுகு எனச் செழித்துச் சிறந்திருந்த உடம்பு, முழுவதும் வளைந்து கூனுகி விட, மெலிவுற்று வருந்துவான். 'பாவ புண்ணியங்கள் உண்டு. தீய செயல்கள் புரிந்தால், தீங்குகளே நேரும். மறு பிறவி என்பதொன்று உண்டு. இப்பிறவியிற் செய்த பாவங்களை மறு பிறவிகளில் அனுபவித்தே யாகல் வேண்டும். எனவே இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து நடந்து கொள்ளுதல் நலம்' என்று பெரியவர்கள் யாரேனும் கூறினல், அவர்களை ஏளனம் செய்து இகழ்வான். துறவிகளையும், பெரியவர்களையும், கற்றவர்களையும், வெடுவெடு எனக் கடுமையாகப் பழித்துப் பேசுவான். விலைமகளிரையும், பரத்தையரையும் புணர்ந்து காலங் கழிப்பான்.

இந்நிலையில், அவனுக்கு வறுமை மிகுதிப்படுகின்றது. வருதற்குரிய பொருள்களும் நழுவி விடுகின்றன. வாதநோய், ஊதுகாமாலை, சோகை, மகோதரம், வயிற்றுவலி, புண் கட்டி (படுவன்) முதலிய நோய்கள் பலவும் வந்து, அவனைத் துன்புறுத்துகின்றன. இரண்டு கண்களிலும் பீளை ஒழுகுகின்றது. ஈளை வழ வழ என மேலிடுகின்றது. அதனைத் துப்பவும் அவனல் முடியவில்லை. துப்ப முயன்றல், கொழ கொழென ஒழுகி அவன் மேலேயே விழுகின்றது. சதையெல்லாம் வாடி வதங்கி விட்டது. நாடிகள் கணந்தோறும் வேறுபடுகின்றன. அதனல் 'இனி இவன் பிழைப்பது அரிது' என்று மனைவி மனம் மாறுபடுகின்றள்.

வீட்டில் உள்ளவர்கள் கலக்கம் அடைகின்றர்கள். பெண்களும் குழந்தைகளும் அவனை அருகிற் சென்று காணவும், அருவருப்புக் கொண்டு சீ என வெறுக்கின்றர்கள். மரணம் நெருங்கிக் கொண்டு இருப்பதற்கு அடையாளமாகத் தேர் வருவது போலவும், குதிரை வருவது போலவும் கனவுக் காட்சிகள் தோன்றுகின்றன. சுடுகாடு 'வா வா' என அழைக்கின்றது. வீடு 'போபோ' எனத் துரத்துகின்றது. இந் நிலையில் இவன் செருக்கு அழிகின்றது. சூழ்ச்சித்திறன் தொலைகின்றது. பேச்சு குழறுகின்றது. விழிகள் சொருகுகின்றன. மேல் மூச்சு எழுகின்றது. உயிர் உடலில் ஊசலாடுகின்றது.

உறவினர்கள் 'இவரோடு நம்முடைய வளமும் அற்றுவிடுமே' என்று எண்ணிக் கலங்கிக் கதறியழுகின்றர்கள். இவனை நம்பியிருந்த மாதர்கள் மோதி மேலே விழுந்து புலம்புகின்றனர். 'என்னுடைய பொருள்' 'என்னுடைய அடிமையாட்கள்' என்று எண்ணிச் செருக்குற்றிருந்த உணர்வு, நிலைதடுமாறி மழுங்கி ஒடுங்கி விடுகின்றது. ஈக்கள் மொலேல் என்று மொய்க்க, வாயை ஆ என்று திறந்துகொண்டு, உயிர் நீங்கிப் போகின்றது இடுகுபறை, சிறுபறை, திமிலை, தவில் முதலிய மேளங்கள், மரணத்தையுணர்த்தும் முறையில் ஒலிக்கின்றன. கடைசியாக இவனுடைய பிணம், பேய்கள் சூழ்கின்ற சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று நெருப்பில் இட்டுப் பொசுக்கப் பெறுகின்றது. இது தான் எம்முடைய மனித வாழ்வின் நிலை!

இத்தகைய இழிந்த மனித வாழ்வையும், இதன் அவலமான முடிவையுமே, உன்னுடைய இரண்டு திருவடிகளையும் பரவித் துதிக்கின்ற உன் அடியவர்கள் தாமும் பெறவேண்டும் என்றல், அதனை உலகத்தவர்கள் இகழ மாட்டார்களா? பாசங்களை நாசம் செய்ய வல்ல பெருமானே! நல்வினை தீவினை என்னும் இருவினைகளும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்கவும், இறப்பும், பிறப்பும் அற்று ஒழியவும், ஏகபோகமாய் நீயும் நானுமாய் ஒன்றுபட்டு அழுந்திக் கலக்கும் வண்ணம் மேலான பேரின்ப நிலையை எனக்கு அளித்தருள்வாயாக! திருவிடை மருதூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஏக நாயகனே! லோகநாயகனே! தேவர்கள் பெருமாளே!" என்பது அத் திருப்புகழ்ப் பாடலின் திரண்ட பொருள். அப்பாடல் வருமாறு :

ஓவியக் காவியம் :

"அறுகுநுனி பனி யனைய சிறியதுளி
பெரியதொரு

ஆகம் ஆகி, ஓர் பால ரூபமாய்

அருமதலை குதலைமொழி தனில் உருகி,
அவருடைய

ஆயி தாதையார் மாய மோகமாய்,
அருமையினில் அருமையிட மொழுமொ
ளென உடல் வளர,
ஆளும் மேளமாய் வால ரூபமாய்,
அவர் ஒரு பெரியோராய்—;
அழகுபெறு நடையடைய கிருதுபடு
மொழி பழகி,
ஆவி யாயலர் தேவி மாருமாய்
விழுசுவரை அரிவையர்கள் படுகுழியை
நிலைமை என
வீடு வாசலாய் மாட கூடமாய்,
அணுவளவு தவிடும்இக பிதிரவிட
மனம் இறுகி
ஆசையாளராய் ஊசி வாசியாய்,
அவியுறு சுடர்போலே—,
வெறுமிடியன் ஒருதவசி அமுதுபடை
எனும் அளவில்,
'மேலைவீடுகேள்' 'கீழை வீடுகேள்'
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி,
அவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்,
கிரகிறெடு வருபொருள்கள் சுவறிவிட
மொழியும்ஒரு
வீணி யார்சொலே மேல தாயிடா
விதிதனை நினையாதே—;
மினுகுமினு கெனும்உடலம் அறமுறுகி
நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்,
மறுமையுள தெனும்அவரை, விடும்விழலை
யதனின் வரு
வார்கள் போகுவார் காணு மோ?எனு
விடுதுறவு பெரியவரை மறையவரை
வெடுவெடென

மேள மேசொலாய், ஆளி வாயராய்,
மிடையுற வரும் நாளில்—;
வறுமைகளும் முடுகிவர, உறுபொருளும்
நழுவ, சிலே
வாதம் ஊதுகா மாலை சோகைநோய
பெருவயிறு வயிறுவலி படுவன்வர,
இருவிழிகள்
பீளை சாறிடா, ஈளை மேலிடா,
வழவழென உமிழும்அது கொழகொ
ழென ஒழுகிவிழ
வாடி ஊன்எலாம், நாடி பேதமாய்,
மனையவள் மனம்வேறாய்—;
மறுகமனை யுறும்அவர்கள் நணுகுநணு
கெனும் அளவில்
மாதர் சீயெனு, வாலர் சீயெனு,
கனவுதனில் இரதமொடு குதிரைவர
நெடியசுடு
காடு வாவெனு, வீடு போவெனு,
வலதழிய விரகழிய உரைகுழறி
விழிசொருகி,
வாயு மேலிடா, ஆவி போகும்நாள்,
மனிதர்கள் பலபேச—;
இறுதியதொ டறுதியென உறவின்முறை
கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா,
எனதுடைமை எனதடிமை எனும்அறிவு
சிறிதும் அற
ஈ மொலேல்எனு, வாயை ஆஎனு,
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு
தவில் அறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்,
எரிதனில் இடும் வாழ்வே—;

இணையடிகள் பரவும்உன தடியவர்கள்
பெறுவதுவும்
ஏசிடார்களோ? பாச நாசனே!
இருவினையும் மலமும்அற இறவியொடு
பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்!
இடைமருதில்
ஏக நாயகா! லோக நாயகா!
இமையவர் பெருமாளே!"

ஷேக்ஸ்பியரின் கவிதை :

உலகப் புகழ் பெற்ற பெருங் கவிஞர் ஆகிய **ஷேக்ஸ்பியர்** "நீங்கள் விரும்புவது போலவே" (As you Like It) என்னும் நாடகத்தில், "உலகமே ஒரு நாடக மேடை. ஆண்களும் பெண்களும் அதன் கட் போதரும் வெறும் நாடக மாந்தரே யாவர். அவர்கள் பிறப்பு என்னும் நுழை வாயிலையும், இறப்பு என்னும் வெளி வாயிலையும் பெற்றுள்ளனர். ஒரு மனிதனே தனக்குரிய நேரத்திற் பற்பல வேடங்களை ஏற்று நடிக்கின்றான். அவனுடைய நடிப்பு ஏழுவகைப் பருவங்களாக அமை கின்றது * அவைகள் முறையே குழந்தை (The infant), பள்ளிப் பிள்ளை, (The whining school-boy), காதலன் (The lover). வீரன் (The soldier), அறவோன் (The justice), நகுதகுமுதுவன் (The pantaloon), மறு மகவுமை (The second childishness) என்பன" என்று பாடியிருக்கும் கவிதைப் பகுதியினை மிகவும் சிறந்த தொன்றாக, உலகின் பல பகுதிகளிலும் உள்ள அறிஞர்கள் அனைவரும் ஒருமுகமாக உவந்து போற்றுவர்!

முடிவுரை ;

அதனை ஒத்த அல்லது அதனினும் சிறந்த அழகிய இனிய உயர்ந்த பாடல் இது! இத் திருப்புகழ்ப் பாடலின் சொற் சிறப்பு-சந்த நலம்-கருத்து வளம்-உருக்கத் திறன்-உபதேச மாட்சி-நிலையாமையுணர்வு முதலிய பண்புகள் பலவும் எவருள்ளத்தையும் கவர வல்லன. இதனையும், இதுபோன்ற ஏனைய பல பாடல்களையும் பயின்றேறி, நாம் அனைவரும் இறைவனை வழிபட்டு நலம் பெற்று உய்வோமாக!

— ஆசிரியர்.

" All the world's a stage,
And all the men and women merely players;
They have their exits and their entrances;
And one man in his time plays many parts;
His acts being seven ages.........".

— **William Shakespeare,**
As you like it.

செய்திச் சுருக்கம் :

மகாபாரத விரிவுரை : சென்னை சைதாப்பேட்டை திருக்காரணி ஸ்ரீ காரணீசுவரர் கோயில் திருக்குளத்தின் திருப்பணியின் பொருட்டு, அருண்மொழியரசு **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்** அவர்களால், 3-2-65 முதல் 35 நாட்கள் வரை சிறப்புற நடைபெறும். தமிழக முதலமைச்சர் திருமிகு **M. பக்தவத்சலம், B.A., B.L.,** அவர்கள் விரிவுரையைத் தொடங்கி வைக்கவும், நமது அறநிலைய ஆணையர் திருமிகு **M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L.,** அவர்கள் கலந்து கொள்ளவும், இசைந்துதவி யிருக்கின்றனர். அன்பர்கள் அனைவரும் விரிவுரைகளைக் கேட்டுப் பயன்பெற்று மகிழ்க.

சம்பந்தரும், பட்டினத்தடிகளும்

முன்னுரை :

'தோடுடைய செவியன்' என்னும் தேவாரத் திருப்பாடலைத் **திருஞானசம்பந்தர்**, சீர்காழிப் பிரம தீர்த்தக் கரையில், 'எச்சில் மயங்கிட உனக்குப் பால் கொடுத்தவர் யார்?' என்று **சிவபாத இருதயர்** ஆகிய தம் தந்தையார் அச்சுறுத்தி வினவிய போது, அதற்கு விடையாக 'எனக்குப் பால் கொடுத்தருளியவர் இவர்தான்' என்று தம்முடைய கையினுற் சுட்டிக் காட்டிப் பாடியருளினுர் எனப் பெரிய புராணத்திற் சேக்கிழார் சுவாமிகள் தெளிவுறப் பாடியுள்ள செய்தியினை, நாம் நன்கறிவோம்.

பேரறிஞர் சுந்தரம் பிள்ளை :

ஆனுல் ஒரு சில ஆராய்ச்சியாளர்கள், 'இந் நிகழ்ச்சியைக் குறிக்கும் அகச்சான்று ஒன்றும் அப்பாடலிலோ, அன்றி அத்திருப்பதிகத்திலோ காணப்படவில்லை' எனக் கூறித் தமது ஐயப்பாட்டுணர்வைப் புலப்படுத்திக்கொள்ளுகின்றனர் மிகச் சிறந்த பேரறிஞரும், சமய உணர்வில் தலை சிறந்த சான்றோரும், தத்துவ வித்தகரும் ஆக விளங்கிய பேராசிரியர் மனோன்மணீயம் **சுந்தரம் பிள்ளை** அவர்கள்கூட, 'இவ்வருள் நிகழ்ச்சியினை வலியுறுத்தும் அகச் சான்று எதுவும் இத்திருப்பதிகத்திற் காணக் கிடைத்திலது' எனத் "திருஞானசம்பந்தர் காலம்" என்னும் தம்முடைய ஆராய்ச்சி நூலிற் குறித்திருக்கின்றுர் (1).

---

(1) "The hymn still exists, and is the very first of the compilation called **Devaram,** but, it seems to give **no** support to the miracle narrated. Probably, **Sambandha's** was one of those cases of marvellous precocity now and then puzzling psychologists."

—Prof. **P. Sundaram Pillai,** M A.,
The Age of Thirugnana Sambandha.

சேக்கிழார் ஆராய்ச்சித் திறன் :

ஆதலின் சேக்கிழார் சுவாமிகள், அகச்சான்று புறச்சான்றுகள் (Internal and external evidences) பற்றி ஒன்றும் ஆராயாமலே, தம் மனஞ் சென்றவாறு கற்பனையாக இவ்வருள் நிகழ்ச்சியினைக் குறித்துப் பாடி விட்டனர் போலும் என ஒரு சிலர் மனந்தடுமாறி மயங்கிக் குழம்புவர். ஆனுல் மிகச் சிறந்த ஆராய்ச்சியறிஞரும், அருட்பெருஞ் சான்றோரும் ஆக விளங்கிய சேக்கிழார் சுவாமிகள், ஆராயாதும் சான்றின்றியும் எதனையும் பாடும் இயல்பினர் அல்லர். தக்க சான்றுகள் பலவற்றையும் நுட்பமாக ஆராய்ந்த பின்னரே, இவ்வருள் நிகழ்ச்சியினைச் செவ்விதின் விவரித்துப்பாட அவர் தலைப்பட்டனராதல் வேண்டும்.

சேக்கிழார் சுவாமிகள் கி. பி. 12-13-ஆம் நூற்றுண்டினர். திருஞானசம்பந்தரோ கி.பி. 7ஆம் நூற்றுண்டில் விளங்கியவர். தமக்கு முன்னே 600 ஆண்டுகட்கு முற்பட்ட ஒருவரின் வரலாற்றை விளக்கிப் பாடமுற்படும் சேக்கிழார் பெருமான், அவ்வரலாற்றை யுணர்த்தும் சான்றுகளையும் வாயில்களையும் ஒருங்கு தொகுத்து வைத்துக் கொண்டு, நெறி முறைகளிற் பிறழாமல் நன்கினிது ஆராய்ந்து செவ்விதில் தெளிந்த பின்னரே, அதனை விவரித்துப் பாடுதலில் தலைப்பட்டிருக்கின்றுர்!

பட்டினத் தடிகளார் :

'தோடுடைய செவியன்' என்னும் திருப்பதிகம் தோன்றிய சூழ்நிலையினைச் சேக்கிழார் சுவாமிகள் உணர்ந்து கொள்ளத் துணைபுரிந்தவர், ஒப்பற்ற துறவியும் நற்பெருங் கவிஞரும், சிறந்த சிவஞான அனுபவச் செல்வரும் ஆகிய **பட்டினத்தடிகளார்** ஆவர் எனலாம்!

சீர்காழிக்கு மிக அணித்தேயுள்ள காவிரிப்பூம் பட்டினம் என்னும் பூம்புகார் நகரில் வாழ்ந்தருளிய பெருமகனுர் ஆகிய பட்டினத்தடிகளார், சீர்காழித் தலத்தின் பாலும், அங்கு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தோணிபுரநாதர்பாலும், மிக்க பற்றும் பக்தியும் கொண்டவராக விளங்கினர். சீர்காழியில் தோன்றியருளிய திருஞான சம்பந்தப் பெருமான்பாலும், அவர் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களின் மாட்டும், எல்லையில்லா ஈடுபாடும் பயிற்சியும் பட்டினத்தாருக்கு இருந்தன. "**திருக்கழுமல மும்மணிக் கோவை**" எனச் சீர்காழிப் பெருமான் மீது பட்டினத்தார் இயற்றியுள்ள சிறந்த நூல், இவ்வுண்மைகளை இனிது விளக்கும்.

திருக்கழுமல மும்மணிக்கோவை:

இங்ஙனம் திருஞானசம்பந்தர்பாற் பேரன்பு பூண்டு ஈடுபட்டுப் பெரிதும் பண்புற்ற நிலையில், கி.பி. 10ஆம் நூற்றுண்டில் வாழ்ந்திருந்த பட்டினத்தடிகளார் தான், முதன்முதலாகத் 'தோடுடைய செவியன்' என்னும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் தோன்றிய சூழ்நிலையையும் வரலாற்றினையும், ஈடு இணையற்ற முறையில் பின்வருமாறு இனிது விளக்கியருளினுர்.

"தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னுயோ! என்றழைப்ப, முன்னின்று
ஞான போனகத்து அருள்அட்டிக் குழைத்த
ஆனுத் திரளை அவன்வயின் அருள,
அந்தணன் முனிந்து, தந்தார் யார்? என
அவனைக் காட்டுவன் அப்ப! வாஞர்
தோடு டுடைய செவியன் என்றும்
பீடு டுடைய பெம்மான் என்றும்,
கையிற் சுட்டிக் காட்ட;
ஐய! நீ வெளிப்பட்டு அருளினை ஆங்கே."

நம்பியாண்டார் நம்பிகள்:

இவ்வாறு பட்டினத்தார் விளக்கியிருப்பது கண்டு, அதனை ஒட்டியே கி.பி. 11ஆம் நூற்றுண்டில் விளங்கியவரும் திருமுறைகளைத் தொகுத்து ஒழுங்கு செய்து வழங்கியவரும் ஆகிய **நம்பியாண்டார் நம்பிகள்**, "செஞ்சடைவெண் மதியணிந்த சிவன் எந்தை திருவருளால், வஞ்சியன நுண் ணிடையாள் மலையரையன் மடப்பாவை நற்கண்ணி, அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப் பொற்கிண்ணத்து அருள்புரிந்த போனகம் முன் நுகர்ந்தனையே" எனவும்,

"தோடணி காதினன் என்று
தொல்லமரர்க்கு எஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச்
செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை
அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காண அரன்
உவனும்என் றுரைத்தனையே"

எனவும், "வேதத் தலைவனை மெல்விரலால் '**தோட்டியல் காதன் இவன்**' என்று தாதைக்குச் சூழ் விசும்பிற் காட்டிய கன்று" எனவும் அருளிச் செய்வாராயினர்!

இங்ஙனம் தமக்கு முற்பட்ட நம்பியாண்டார் நம்பிகளும், அவருக்கும் முற்பட்ட பட்டினத்தடிகளும் விளக்கியிருக்கும் செய்திகளை ஆதரவும் சான்றுமாகக்கொண்டே, சேக்கிழார் சுவாமிகள் 'தோடுடைய செவியன்' பதிக வரலாற்றினைப் பெரிய புராணத்தில் விளக்கிப் பாடினுர். எனினும் இவ்விருவர் கூற்றுக்களை மட்டுமே முழுவதும் ஆதரவாகக்கொண்டு, சேக்கிழார் சுவாமிகள் பாடிவிட்டனர் அல்லர்.

அகச்சான்று:

தாம் நம்பியாண்டார் நம்பிகளைப் பின்பற்ற, நம்பியாண்டார் நம்பிகள் பட்டினத்தடிகளைப் பின்பற்றியது போலவே, பட்டினத்தடிகளும் தமக்கு ஏதேனும் ஓர் ஆதரவும் பற்றுக்கோடும் கொண்டுதான், மேலே காட்டிய **திருக்கழுமல மும்மணிக் கோவை**யின் பாடலை அருளிச் செய்தனராதல் வேண்டும் எனச் சேக்கிழார் சுவாமிகள் தெளிவுறத் துணிந்திருந்தார். பிற

பலரெல்லாம் கூறுவன ஒருபுறம் இருக்க, இதுபற்றித் திருஞானசம்பந்தர், தாமே ஏதேனும் எங்கேனும் குறிப்பிட்டுள்ளனரா? எனத் திருமுறைகளையெல்லாம் சேக்கிழார் கூர்ந்து நோக்கித் துணிந்து ஆராய்ந்தார்.

திருஞானசம்பந்தர், தமக்கு "இறைவன் **தோடு அணிந்த காதினன் ஆகவும்**, அம்மையப்பராகவும் காட்சி கொடுத்தான்; பொற் **கிண்ணத்தில் அடிசில்** (பால்) அளித்தான்; அதனைத் தம் **தாதையார்** ஆகிய சிவபாத இருதயர் கண்டு **பொல்லாது** என முனிவுற்றார்; இந்நிலையில் தம்மை இறைவன் ஆட்கொண்டு அருளினன்" எனப் பிறிதோரிடத்தில், வேறொரு திருப்பதிகத்தில்,

> போதையார் பொற்கிண்ணத்து
> அடிசில்பொல் லாதுஎனத்
> தாதையார் முனிவுறத்
> தான்எனை ஆண்டவன்
> காதையார் குழையினன்
> கழுமல வளநகர்ப்
> பேதையாள் அவளொடும்
> பெருந்தகை இருந்ததே

என்னும் திருப்பாடலாற் கூறி வெளியிட்டிருப்பதனைச் சேக்கிழார் சுவாமிகள், பட்டினத்தடிகளார் கூற்றுக்களோடு ஒப்பு நோக்கியுணர்ந்து, உண்மை தெளிந்து நின்றார். தம்முடைய ஆராய்ச்சிக்குச் செம்மையான புறச்சான்றும், அகச் சான்றும் உண்டு எனக் கண்டு தெளிந்ததன் பின்னரே, அதனை விவரித்துப் பெரிய புராணத்திற் கூறியருளினார்.

முடிவுரை:

இவ்வாற்றால், நாம் அனைவரும் சம்பந்தரின் முதற்றிருப்பதிக வரலாறு முழுவதும் பழுதின்றி உணர்ந்துகொண்டு மகிழ்தற்கு, முதன் முதலாக அதனை விவரித்து விளக்கம் செய்தருளிய பெருமை பட்டினத்தடிகளார்க்கே யுரியதென்பதும்; சம்பந்தர் ஞானப்பால் உண்ட அருள் நிகழ்ச்சிக்கு அவர்தம் பாடலிலேயே அகச்சான்று உள்ளது என்பதும், நம்மால் ஐயமின்றிச் செவ்விதில் தெளியப்படும்.

— ஆசிரியர்.

பாவை மாநாடு:

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில், சென்னைத் **திருவேட்டீசுவரர்** கோயிலில், நமது அறநிலைய ஆணையர் திரு. M. S. **சாரங்கபாணி முதலியார்**, B.A., B.L., அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. டாக்டர் திரு. T M. P. மகாதேவன், M.A.Ph.D. அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். திரு. அ. மு. பரமசிவானந்தம், M.A., திரு. B. R. புருஷோத்தம நாயுடு, திரு காஞ்சி கோ. சாரங்கபாணி செட்டியார், வித்துவான் H. வைத்தியநாதன், 'மதுரமித்திரன்' ஆசிரியர் திரு. N. சுப்பிரமணிய ஐயர், அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார், J. P. ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டனர். 'தியாகராஜ விலாசம்' திரு.க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், ஆதீனத்தின் சார்பில் இவற்றைச் சிறப்புற ஏற்பாடுகள் செய்து நடத்தி வைத்தார்கள் (7-1-65—10-1-65).

கோயில்களின் கோயில்

கோயில்கள் :

தமிழ்நாடு கோயில்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. தமிழ்நாட்டைப்போல, மிகமிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த ஏராளமான கோயில்களையுடைய நாடு, வேறு பிறிது எதுவும் இல்லை எனலாம். தமிழ் மக்களின் பண்டை நாகரிகப் பண்பாட்டின் பெருமைகளையெல்லாம் இன்றும் உலகுக்கு உணர்த்திக்கொண்டு இருப்பவை, இக்கோயில்களேயாகும். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் முதலிய கலைகள் பலவற்றிற்கும் நிலைக்களமாகத் தமிழ்நாட்டுக் கோயில்கள் விளங்கி வருகின்றன.

பயன்பட்ட முறை :

தமிழ் மக்களின் சிறந்த சமுதாய வாழ்க்கை, கோயில்களையே அடிப்படையும் மையமும் ஆகக்கொண்டு இயங்கி வந்துள்ளது. கோயில்களே பழங்காலத்தில் நம் தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்களாகவும், கலைக் கழகங்களாகவும், நூல் நிலையங்களாகவும், அறங்கூறு அவையங்களாகவும், மருத்துவ மனைகளாகவும், பேணுநர் இல்லோர்க்கு ஊனுடை நல்கிக் காக்கும் புகலிடங்களாகவும், பொது மக்கட்குத் தொழில்தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் கொண்டும் உதவிபுரியும் நிதி நிலையங்களாகவும், போர்க் காலங்களிற் படை வீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன(1).

(1) "Above all, temples became centres of religious and social life.. As **land holder, employer** and **consumer** of goods and services, as **bank, school** and **museum,** as **hospital** and **theatre,** in short, as a nucleus which gathered round itself all that was **best** in the arts of **civilised** existence and regulated them with the humaneness born of the spirit of Dharma, the mediaeval **South Indian temple** has few parallels in the annals of mankind "

— Prof. **R. Sathianathaier,** M.A., L.T., *History of India, Vol. I, P. 402.*

கோயில் அமைப்பு :

இவ்வாற்றால் தமிழ்நாட்டுக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஓர் அழகு - சிறப்பு - வியத்தகு நலன் - மகிழ்தகு செய்தி - அரிய மரபு - பழைய வரலாறு - பண்பாடு என்பன அமைந்திருத்தல் காணலாம். இவ்வகையில் திருவிடைமருதூர் என்னும் புகழ் மிகுந்த சிவத்தலத்துக் கோயிலின் அமைப்பிலும் சூழலிலும், சிறந்ததோர் அரும்பெறல் நுட்பக் குறிப்பு இயல்பாகவே அமைந்துள்ள தன்மை, அறிந்து இன்புறத்தக்கது.

சிவபிரான் திருக்கோயில்களில், விநாயகர், முருகர், சண்டேசுரர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, நந்திதேவர், வைரவர், நவக்கிரகங்கள் என்னும் மூர்த்திகளுக்குத் தனித்தனியே சிறு சிறு கோயில்கள் அமைந்திருக்கும். இச் சிறு கோயில்களைப் பரிவாரச் சுற்றாலயங்கள் எனக்கொண்டு, இவற்றிற்கெல்லாம் நடுவே கருப்பக்கிரகம் என்னும் கருவறை அமைந்து திகழ, அதன்கண் சிவலிங்கத் திருமேனி எழுந்தருளி விளங்கும்.

கருவறைக் கோயில் :

இப் பொதுவான சிறிய அமைப்பினை, மிகவும் சிறப்பு நிலையில், பெரிய அளவில், யாவருக்கும் உணர்த்தும் வகையில், திருவிடைமருதூர்க் கோயிலின் அமைப்பும் சூழலும் இயல்பாகவே அமைந்திருக்கும் மாட்சி, யாவரும் உணர்ந்து வியந்து போற்றற்பாலதாகத் திகழ்கின்றது.

புகழ்பெற்ற சிறந்த பல கோயில்களைத் தனக்குப் பரிவாரச் சுற்றுலயங்களாகக் கொண்டு, அவற்றிற்கெல்லாம் நடு நாயகமாக அமைந்து, கருவறைபோற் சிறந்து விளங்கும் மேம்பாடு மிக்கதாகத் திருவிடைமருதூர்க் கோயில் திகழ்கின்றது.

பரிவாரக் கோயில்கள் :

திருவிடைமருதூர்க் கோயிலைத் தமிழகம் அல்லது சோழநாடு என்னும் ஒரு பெருங் கோயிற் பரப்பின் கருவறையாகக் கொண்டால், **திருவலஞ்சுழி** விநாயகர்க்கும், **சுவாமிமலை** முருகர்க்கும், **திருச்சேய்ஞலூர்** ஆப்பாடி சண்டேசுரர்க்கும், **தில்லைச்** சிதம்பரம் நடராசர்க்கும், **திருவாரூர்ப்** பூங்கோயில் சோமாஸ்கந்தர்க்கும், **திரு ஆலங்குடி** தட்சிணாமூர்த்திக்கும், **திருவாவடுதுறை** நந்திதேவர்க்கும், **சீர்காழி** பைரவர்க்கும், **சூரியனார்கோயில்** நவக்கிரகங்களுக்கும் முறையே யுரிய பரிவாரச் சுற்றுலைக் கோயில்களாக அமைந்திருத்தலை, யாவரும் அறிந்து கண்டு இன்புறலாம்,

மூர்த்திகள் :

இதனை "அணிமருவும் இடைமருதீசருக்கு **நந்தி** ஆவடுதண்துறை; **சோமாக்கந்தர்** ஆரூர்; திணிபுகழ் ஆலங்குடியிற் **குருமூர்த்தி**; **ஆனைத் திருமுகத்தோன்** வலஞ்சுழி; ஏரகத்திற் **செவ்வேள்**; கணி தரும் ஆப்பாடியிற் **சண்டீசன்**; தில்லைக் கதிர்ப்பொதுவில் **நடக்கடவுள்**; **வடுகன்** காழி; பணைமருவும் மாந்துறையின் **இரவி** ஆகும்; பரமன் எழிற் பதமலருக்கு அன்பு செய்வாம்" எனச் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய திருவிடைமருதூர்த் தலபுராணச் செய்யுள் விளக்கியிருத்தல் உணர்தற்குரியது,

மகாலிங்கம் :

இங்ஙனம் புகழ்பெற்ற பெரிய பல தலங்களைப் பரிவாரக் கோயில்கள் எனக் கொண்டு, அவற்றிற்கு நடுவே அமைந்தோங்கித் திகழும் திருவிடைமருதூர்க் கோயிலினைக் **'கோயில்களின் கோயில்'** என்று குறிப்பிடுவது மிகமிகப் பொருந்தும். இவ்வகையில் பிறகோயில் இலிங்கங்களுக்கெல்லாம் மூல முதல்வராகச் சாலவும் மாட்சிமையுற்று விளங்கும் காரணம்பற்றியே, திருவிடைமருதூர்ப் பெருமானுக்கு மகாலிங்கம் எனப் பெயர் வழங்கி வருகின்றது. இச் சிறப்பினை யுணர்ந்து, நாம் அப் பெருமானைச் சென்று கண்டு அன்புடன் வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் அனைத்தும் எய்தி உய்வோமாக!

— ஆசிரியர்,

பாவை மாநாடுகள்

போளூர் :	இலட்சுமி நரசிம்ம சுவாமி, கைலாசநாதர் கோயில்
காஞ்சிபுரம் :	குமரகோட்டம்
இராமநாதபுரம் :	சமஸ்தானத்துக் கோயில்கள்
திருப்பெண்ணாகடம் :	பிரளயகாலேசுவரர் கோயில்
திருவெண்காடு :	சுவேதாரண்யேசுவரர் கோயில்
சிவகங்கை :	சமஸ்தானத்துக் கோயில்கள்
மதுரை :	இம்மையே நன்மை தருவார் கோயில்
நெற்குப்பை :	மனமொத்த கண்டீசுவரர் கோயில்
பண்ணுருட்டி :	வரதராஜப் பெருமாள் கோயில்

முதலிய எல்லாக் கோயில்களிலும் ஏற்றபெற்றி சிறப்புற நடத்தப்பட்டன.

CONNEMARA PUBLIC LIBRARY
10 JAN 1966
MADRAS



ஸ்ரீ மகாலிங்கப் பெருமான், திருவிடைமருதூர்

10 JAN 1966
MADRAS

வரகுண பாண்டியர், திருவிடைமருதூர்

தைப்பூசமும், தேப்ப விழாவும்

முன்னுரை :

ஒரு நாட்டின் நாகரிகம் பண்பாடு என்பனவற்றை யுணர்தற்கு, அந்நாட்டு மக்களாற் கொண்டாடப்பெறும் விழாக்கள் பெரிதும் துணை செய்வன ஆகும். "நாகரிகம்பெற்ற ஒரு சமுதாயம், உண்மை, அழகு, அருஞ்செயல், கலைத் திறன், அமைதிநலம் ஆகிய ஐந்து பண்புகளைச் சிறப்புறக் காட்டிக்கொண்டு திகழும்' என அறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். ("A civilized society exhibits the five qualities of Truth, Beauty, Adventure, Art and Peace."—Adventure in Ideas, A. N. Whitehead.) அவர் குறிப்பிட்ட ஐந்தனோடு, ஆறாவதாகத் திருவிழாக்களையும் (Festivals) கூட, நாம் சேர்த்துக்கொள்ளுதல் பொருந்தும்.

தைப்பூசம் :

தைப்பூச நாள், தமிழ் மக்களாற் சிறப்பாகப் போற்றப்பெறும் நாட்களுள் ஒன்று. "**தைப்பூசம்** காணாதே போதியோ பூம்பாவாய்" என்பது திருமயிலைக் கபாலீச்சரத்துத் தேவாரம். எனவே, இற்றைக்கு 1300 ஆண்டுகட்கும் மிகமிக முன்னரே, தைப்பூசநாள்விழா தமிழகம் எங்கணும் சிறப்புற நிகழ்ந்து வந்தமை அறியலாம்.

திருவிடைமருதூர் :

எல்லாத் தலங்களிலும் கோயில்களிலுமே தைப்பூச விழா சிறப்பாகக் கொண்டாடப்பெறினும், திருவிடைமருதூர் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலத்திற்கே, அது மிகவும் சிறப்புரிமை நிகழ்ச்சியாக இருந்து வந்தது எனத் தெரிகின்றது. **இறையனார் களவியல்** என்னும் அரிய நூலுக்கு உரைவகுத்த ஆசிரியர் **நக்கீரர்,** மதுரை ஆவணி யவிட்டம்—உறையூர்ப் பங்குனியுத்திரம்—கருவூர் உள்ளிவிழா என்பன மிகவும் சிறந்த விழாக்கள் என்று குறிப்பிடுகின்றார். அம்முறையில் திருவிடைமருதூர்த் தைப்பூச விழா, திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் வாழ்ந்திருந்த காலத்திலேயே மிகவும் சிறப்புடையதொன்றாக நிகழ்ந்து வந்தது போலும்!

அப்பரும் சம்பந்தரும் :

அதனாலேயே திருநாவுக்கரசு சுவாமிகள் "பாசம் ஒன்றிலராய்ப் பல பத்தர்கள் வாச நாண்மலர் கொண்டடி வைகலும், ஈசன் எம்பெருமான் இடைமருதினிற் **பூசம்** நாம் புகுதும் புனல் ஆடவே" என்றும்; திருஞான சம்பந்தப் பெருமான் "**பூசம்** புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ" என்றும், "வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்து ஈண்டிப் பொருந்திய **தைப்பூசம்** ஆடி உலகம் பொலிவெய்தத் திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில் பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே" என்றும் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருக்கின்றனர்.

பட்டினத்தடிகள் :

இவ்வாறே இவ்விருவரையும் பின்பற்றிப் பட்டினத்தடிகளும், தாம் இயற்றிய "திருவிடைமருதூர் மும்மணிக் கோவை" யின்கண்,

> தேவ தேவ! திருவிடை மருத!
> மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
>
> பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
> அயிரா வணத்துறை ஆடும் அப்ப!
>
> கயிலாய வாண! கவுரி நாயக!

எனவரும் பாடற் பகுதியில் **பூசத் தீர்த்தம்,** அயிராவணத் துறை என்பன

பற்றிக் குறிப்பிட்டருளியிருக்கக் காண் கின்றோம்.

மாணிக்கவாசகர் :

தைப்பூச நாளிற் புனல் ஆடுதலால் **உலகம் பொலிவெய்தும்** எனவும், தேவர்களும் முனிவர்களும் தைப்பூச நாளிற் புனலாடுவதற்காகப் பெருந்திரளாக ஈண்டி வந்து திருவிடைமருதூரிற் கூடுகின்றனர் எனவும், திருஞான சம்பந்தர் பாடியிருத்தலை மேலே கண்டோம். இங்ஙனம் நிகழும் தைப்பூசப் புனலாடு விழாவின் தத்துவ நுண்பொருள் யாதோ எனின், அஃது இறைவனின் பெருங் கருணை ஆகிய தடங்கடலில் நம்மனோர் அனைவரும் சென்றுபடிந்து, மகிழ்ந்து திளைத்து இன்புறுதல் வேண்டும் என்பதன் அறிகுறியே யாகும்.

மருவினிய மலர்ப்பாதம்
மனத்தில்வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத்
தடங்கடலிற் படிவாமாறு
அருள் எனக்கிங்கு ; இடைமருதே
இடங்கொண்ட அம்மானே

எனவரும் திருவாசகப் பாடலில், மணிவாசகப்பெருமான் இதனைக் குறிப்பிட்டிருத்தல் அறிந்து போற்றுதற்குரியது.

தெப்பத் திருவிழா :

தைப்பூசத் திருநாளை ஒட்டித் தெப்பத் திருவிழா நிகழ்த்துவது, சிவாலயங்களிற் பெரிதும் வழக்கமாக இருந்து வருகின்றது. பிறவிக்கடலில் விழுந்து அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கும் சிற்றுயிர்களாகிய நமக்கெல்லாம் ஒரு தெப்பம்போல இருந்து உதவி புரிந்து, இறைவன் நம்மை வீடுபேறு ஆகிய கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்தருள்கின்றான் என்னும் உண்மையினை யுணர்த்தும் ஓர் அடையாளமே (Symbolism), **தெப்பத் திருவிழா** எனலாம்.

" துன்பக் கடலிடைத்
தோணித் தொழில் பூண்டு
தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந்து
ஏற்றும் திறத்தன . . ."

எனவரும் திருநாவுக்கரசர் திருவிருத்தம், இங்கு நாம் நினைந்து மகிழ்வதற்குரியது.

சிறந்த உருவகம் :

பிறவி என்பது ஒரு பெருங் **கடல்!** அதன்கண் மக்களாகிய நாம், உடம்பு என்னும் கப்பலில் அறியாமை, தீய நடத்தை, பொய், பிணி, இடும்பை என்னும் பல **சரக்குகளை** மிகுதியாக ஏற்றிக் கொண்டிருக்கிறோம் வினை என்னும் மீகாமன் (Admiral), கருப்பம் என்னும் துறைமுகத்தினின்று, அக் கப்பலை ஓட்டிச் செல்கின்றான். வழியில் ஐம்புலன்கள் ஆகிய திமிங்கலங்கள் (whales) நம்மை எதிர்ந்து மோதித் தொடர்ந்து வந்து துன்புறுத்துகின்றன. துயரம் என்னும் **அலைகள்** கடுமையாகப் பொங்கி எழுந்து தாக்கி அலைக்கழிக்கின்றன, குடும்பம் என்னும் பாரம் மிக்க ஒரு பெரிய பாறுங்கல் மேலே வந்து விழுந்து, நிறை என்னும் கூம்பு (Mast) முரிந்து போகவும், நல்லுணர்வு என்னும் வளிவழங்கு பாய் (sail)கிழிந்து சிதறவும் செய்கின்றது இவற்றால் உடம்பு ஆகிய கப்பல் கவிழ்ந்து விடுமோ என்னும் கவலை நிலை ஏற்படுகின்றது. அங்ஙனம் நேராமல், இறைவனே தன் அருள் ஆகிய கயிறு கொண்டு சேர்த்துக் கட்டி, தன்னுடைய திருவடி என்னும் கரையில் நம்மையெல்லாம் சேர்த்துக் காத்தருள்கின்றான்.

" அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பல சரக்கு ஏற்றி, வினைஎனும்
தொல்மீ காமன் உய்ப்ப, அங்கிலைக்

கருஎனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலன்எனும் கோள்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனுங் பெருங்கடல் உறப்புகுந்து அலைக்குந்
துயர்த்திரை உவட்டில், பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறைஎனுங் கூம்பு முரிந்து, குறையா
உணர்வுஎனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குப் கவிழா முன்னம், அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையரவு அணிந்த தெய்வ நாயக!
தொல்எயில் உடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை அம்பல வாண! நின்
அருள் எனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே"

முடிவுரை :

இது பட்டினத்தடிகள் "கோயில் நான்மணிமாலை" என்னும் நூலில் பதினொன்றும் திருமுறையிற் பாடியிருக்கும் சிறந்த இனிய உருவக அணியியற் பாடல்.

தெப்பத் திருவிழாவின் நுட்பக் கருத்தை ஒருவகையில் விளக்குவது, இப்பாடல் எனக் கொள்ளலாம். இத்தகைய சிறந்த தைப்பூசத்துத் தெப்பத் திருவிழாவினைத் தரிசித்து வழிபட்டு, நாம் அனைவரும் இறைவனின் திருவருளைப் பெறுவோமாக!

—ஆசிரியர்

தைப்பூசம்—தெப்பவிழா

திருவிடைமருதூர் மகாலிங்கப்பெருமான், **திருவானைக்கா** ஜம்புகேசுவரர், **திருமயிலைக்** கபாலீச்சுவரர், **திருவேற்காடு** கருமாரியம்மன், **அரசலூர்** தாயுமானசுவாமி, **காந்தீசுவரம்** ஏகாந்தலிங்கசுவாமி, **அரியநாயகிபிரம்** கைலாசநாதர், **திருப்புடைமருதூர்** நாறும்பூநாதர், **மருதமலை** முருகன், **எண்கண்** முருகன், **வடலூர்** திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையங்கள், **திருப்புகலூர்** அக்கினீசுவரர், **பன்பொழி** திருமலைக்குமாரசுவாமி, **பழநி** தண்டாயுதபாணி சுவாமி, **சென்னிமலை** முருகன், **இராஜேந்திரம்** மத்தியார்ச்சுன ஈசுவரர், **இராமநாதபுரம்** சமஸ்தானம் நயினார்கோயில், **தொட்டியம்** அனலாடீசுவரர், **செட்டிக்குளம்** ஏகாம்பரேசுவரர் முதலிய பற்பல கோயில்களிலும் சிறப்புற நடைபெற்றன.

வாமனன் - திருவிக்கிரமன்

(திரு K. R. இராஜகோபாலன், B.Sc. (Hons.), தாம்பரம்.)

திருமாலின் அவதாரங்களில் மிகப் பெருமை வாய்ந்தவைகளுக்குள் இந்த அவதாரமும் ஒன்ருகும். இவ்வவதாரத்தில் பற்பல விசேஷங்கள் உண்டு — அவற்றில் ஒன்று, இது **இரட்டை** அவதாரமாக இருத்தலாகும். **வராகம், நரசிம்மம்** இவ்வகைகள் எல்லாம் ஒரு கொடிய அரக்கனை ஒழிப்பதற்காக என்றே எடுக்கப்பட்டவை என்றும், இதுதான், முதலாவதாக மக்களினத்தாரின் நல் வாழ்வுக்காகவே எடுக்கப்பெற்றதென்றும் கூறுவது மற்ருெரு சிறப்பு. வாமனன் உருவத்தில் மிகச் சிறியவன் (வயதிலும் தான்!) — ஆனுல், திருவிக்கிரமனே, வானும் மண்ணும் ஒன்ருகிவிட்டனவோ என்று ஐயுறுமாறு வளர்ந்த நெடியோன்! எனவே, வேதத்தில் கூறப்பட்டுள்ள — "**அணோரணீயான் மஹதோ மஹீயான்**" (சிறியதான அணுவிற்கும் சிறியவன், பெரிதில் மிகப் பெரியவன்)— என்ற வாக்கிற்கு இலக்கணமாக அமைந்தாற்போலுள்ளது மற்றுமொரு சிறப்பாகும்.

மஹாபலி என்ற அரசன் மிக நன்ருக அரசுபுரிந்து வந்தான். அவன் ஆட்சியில் கொடுங்கோல் இல்லை; செங்கோலே செலுத்தப்பெற்று வந்தது. மக்கள் நல் வாழ்வு வாழ்ந்தனர்; அரசனும் மக்களிடத்து அன்பாகவே ஆட்சி செலுத்தினன். ஆனுல், இந்தப் பரந்த பூவுலகம் தன் சொந்தமென்றும், தானே அரசுரிமை செலுத்தவேண்டுமென்றும், இறுமாந்தான். உலகமே தனதாகையினுல், வந்து, "தா" என்று கேட்போருக்கு "இல்லை" என்னுது வாரி வழங்கி வந்தான்.

எனினும் அவன் ஈகையில் கனிவு இல்லை; அகம்பாவமும் அகந்தையுமே இடம் பெற்றிருந்தன. "தானல்லவோ கொடுக்கவல்லவன்; மற்றெவரும், பெற்றுப் போகவல்லவோ வாழ்கின்றனர்" என்ற வீம்பிலேயே கர்வமுற்றிருந்தான். இவன் அகந்தையை ஒழிக்கவும், உலக மனைத்தும் கடவுளின் சொத்துதான் — அதைத் தனதென்று கூறிக்கொள்வதோ, அதை மற்றவர்க்கு தானமாக அளித்துக் கர்வம் கொள்வதோ தகாத செயல் என்று நிரூபிக்கவும், பெருமாள் இந்த அவதாரத்தை மேற்கொண்டார் என்று கூறுவர்.

வாமனனின் ஜயந்தியானது புரட்டாசி மாதம் சுக்கில பட்சம் திருவோண நட்சத்திரத்தன்று ஆகும். திருவோண நட்சத்திரம் இதனுல் பெருமை அடைந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும். கலிகாலக் கடவுளான வேங்கடமுடையானின் திருநட்சத்திரமும் திருவோணமேதான். அவர் பெயரையே தாங்கி, சம்ஸ்கிருதம், தமிழ் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்று, அவைகளின் மூலமாக வைணவ சமுதாயத்திற்குப் பல தொண்டுகள் ஆற்றியுள்ள வேதாந்த தேசிகரின் திரு நட்சத்திரமும் திருவோணமே. கேரள நாட்டினர் இன்றும் சிறப்பாகக் கொண்டாடும் "ஓணம்" பண்டிகையும், இந்தப் புரட்டாசித் திருவோணத்தில் தான் என்பதைக் குறிப்பிடலாம்.

வாமனன் கதை யாவரும் அறிந்ததே. அரக்க சக்கிரவர்த்தியான பலி என்பவன் பிரஹலாதனின் பேரன். தன் தோள் வலிமையால் நாட்டை விஸ்தரித்து, அன்போடும் நெறியோடும் அரசாண்டு வந்தான். ஆனுல் அகந்தையினுல் தனக்குச் சமமானவர்கள் எங்கும் கிடையாது என்ற இறுமாப்புடன் இருந்தான். எனவே, திருமால், இவன் அகந்தையை அடக்க, சிறு பிரம்மசாரியின் வேடம் தாங்கி—குறள் வடிவாகி—பலியின் யாக சாலைக்கு வந்து நின்ருர். அவரைக்கண்ட பலி — "உமக்கு என்ன வேண்டும்" என்று வினவ, "மூன்றடி மண் தா"

CONNEMARA PUBLIC LIBRARY
10 JAN 1966
MADRAS

திருக்கோவலூர்

வாமன திரிவிக்ரமப் பெருமாள்

என்று இரந்தாராம், மூவுலகத்திற்கும் முதல்வனான விஷ்ணு! "பக்தர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் அன்புடன் அளிக்கும் இறைவன், தான் பலியிடம் யாசிக்கவேண்டியதாயிற்றே என்று தன் மேனியைக் குறுக்கிக்கொண்டாற்போல் இருக்கிறது"—என்று வியக்கிறார் ஒரு ஆழ்வார்! பலியின் குருவான சுக்கிராச்சாரியார் "இவன் மாயவேடம் புனைந்த திருமால், இவன் கேட்பதும் பிச்சை இல்லை, உனக்குக் கேடு விளைவிக்கவே வழி செய்வான்; ஆதலால் இவன் கேட்பதைத் தராதே" எனத் தடுக்கிறார். ஆனால் பலியோ—'திருமாலே நம்மிடம் வந்து இறைஞ்சுங்கால் நான் ஏன் இல்லை என்று சொல்லவேண்டும்? இது எனக்குப் பெருமைதானே!' என அகந்தையுடனேயே பதில் தந்து "தந்தேன்" என்று வாமனனின் கையில் நீரைத் தாரையாக வார்க்கக் கிண்டியைச் சாய்க்கிறான். அந்நிலையிலும் தன் அரசனைக் காக்க எண்ணிய சுக்கிரன் ஒரு வண்டு ரூபமெடுத்துக் கிண்டியின் வாயை அடைத்து நீரை வெளிவராமல் தடுக்கிறாராம். அதுகால் குறளன் ஒரு துரும்பால் இந்த இன்னலை நீக்குகிறார். சுக்கிராச்சாரியார் தம் கண்ணையும் இழக்கிறார். இதனை ஆழ்வாரின் பாடல் அழகுறச் சித்தரிக்கிறது.

> மிக்கபெரும் புகழ் மாவலி வேள்வியில்
> தக்கது இதுஅன்று என்று தானம்
> விலக்கிய
>
> சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய
> சக்கரக்கையனே அச்சோ! அச்சோ!
>
> (முதலாயிரம் 1—8—7)

இதற்குப் பிறகு நடப்பது மற்றும் விசித்திரமாயுள்ளது! கையில் தாரை நீரை வாங்கியவுடனே, குறள் வடிவாய், சிறுமையுடன் நின்ற வாமனன், நெடிதுயர்ந்து மூவுலகனைத்தையும் தான் ஒருவனே நிறை செய்யுமளவுக்கு வளர்கிறார்! இதனை மனக் கண்ணாலேயே எல்லா நுண்ணிய விவரங்களுடனும் (in all its details) பார்த்து மகிழும் ஆழ்வார், அக்காட்சியின் பயனை நாமும் பெறுவதற்காகப் பாடலையும் அருளியுள்ளார்.

> கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன்
> வேள்விக்
> களவுஇல் மிகுசிறு குறள்ஆய் மூவடி
> என்று இரந்திட்டு
> அண்டமும், இவ்வலைகடலும், அவனிகளும்,
> எல்லாம்
> அளந்தபிரான் . . . .
>
> (பெரிய திருமொழி 3—10—5)

மிகப்பெரிய உருவாக வளர்ந்த வாமனன்—திருவிக்கிரமன், தன் ஒரு அடியால் வானுலகத்தையும் அளந்து, மூன்றாமடிக்கு இடம் எங்கே என்று பலியையே கேட்கிறார்! தானே உலகத்தின் சிறந்த ராஜா; தன்னிடம் யாசிப்பவர்க்கு இல்லை என்னாது வழங்குவதற்கான வசதியனைத்தும் உள்ளவன்—என இறுமாந்திருந்த பலியின் ஆணவம் இருந்த இடம் தெரியால் போனதில் வியப்பென்ன! தெய்வமே மனிதனின் சிறுமையை உணர்த்த முற்பட்டால் இதைவிடப் பதியும்படியாகச் செய்யக் கூடிய வழி வேறு இருக்காது எனத் துணியலாம். சென்ற வினாடிவரையிற் குறள்; தன்னிடம் கூனிக் குறுகி கேவலம் மூன்றடி மண் யாசித்து நின்றவன்; இப்பொழுதோ "இருநிலனும், பெருவிசும்பும் எய்தாவண்ணம் கடந்த" வாறு [பெரிய திருமொழி 2-5-6] கம்பீரமாய் நின்று, தன்னிடம் "நீ தந்தாயே மூன்றடி! அதில் மூன்றாமடிக்கு இடமெங்கே!" என்று கேட்கும் இறைவனின் திருவிளையாடல்களைக் கண்ட பலியின் அகந்தை ஒழிந்தது. கண்ணீர் பொங்க, "இறைவா! என் தலையுள்ளதே" என்று தலை வணங்கி நிற்கிறான். பெருமான், அவனைப் பாதள லோகத்திற்கு அனுப்ப, அங்கு அவன் இன்றும் அரசு செலுத்துவதாகக் கொள்வது மரபு. [சப்த சிரஞ்சீவிகள் என வழங்கப்படுமவர்களில் பலியும் ஒருவன்:—அசுவத்தாமா, பலி, வியாசர், அனுமான், விபீஷணன், கிருபன், பரசுராமன்—என்ற எழுவரும் சாகா வரம்

பெற்றவர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.]

கோவில்கள், சிற்பங்கள்

தமிழ் நாட்டில், காஞ்சியிலும், திருக்கோவலூரிலும், திருவிக்கிரமனுக்கென்றே தனிக்கோயில்கள் உள்ளன. "**ஊரகம்**" என்று பாடல்களில் இடம் பெற்ற முதல் ஸ்தலத்தில், பெருமாள் மேற்கு நோக்கிய முகமண்டலத்துடன் உலகளந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். தாயார் பெயர் **அமுதவல்லி**; விமானம்—**ஸாரஸ்ரீகரம்**; சேஷதீர்த்தம் ஆதிசேஷனுக்கு பிரத்யட்சம். ஒரு ஆகாயத்தை அளக்கும் தோற்றத்தில் நெடிதுயர்ந்துள்ளது. இரு கைகளும் நன்கு நீட்டப்பெற்றுத் திண்மையுடன் காட்சியளிக்கின்றன. ஒரு கையில் இரு விரல்கள் நீட்டியவாறு உள்ளன—இரண்டு அடி ஆயிற்று என்ற கணக்கைக் காட்டுவதுபோல். மற்றொரு கையில் ஒரே ஒரு விரல், இன்னமும் ஒரு அடி பாக்கியுள்ளது என்பதைக் குறிக்கிறது. மற்றொரு கால், வணங்கிய பலியின் தலைமேல் அமைந்தவாறுள்ளதைக் காண காணலாம். அர்ச்சகரின் தனி விளக்கின் உதவியின்றி இறைவனின் முழு உருவத்தையும் காண்பது இயலாது! திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பொய்கையாழ்வார்கள் மங்களா சாஸனம் செய்துள்ளனர். கல்வெட்டுகளும் உள்ளன.

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவலூரிலும் உலகளந்தான் ஸன்னிதி உள்ளது. இக்கோயிலில் சுமார் 13-ம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. '**கோவல்**' "**மதுராந்தக சதுர்வேதி மங்கலம்**" என்று புகழ் வாய்ந்த இடம், பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்கள் என்று வழங்கிவருபவைகளுள் இதுவும் ஒன்று. முதலாழ்வார்கள் மூவரும் சந்தித்து இறைவனின் தரிசனம் பெற்ற இடமும் இதுதான் என்பதால் இது வைஷ்ணவர்களுக்கு உகந்த யாத்திராத்தலம் ஆகிறது. **ஸ்ரீகரவிமானம்**; மிருகண்டு முனிவருக்கு பிரத்தியக்ஷம். முதலாழ்வார்கள் மூவரும், திருமங்கை மன்னனும் மங்களா சாஸனம் செய்துள்ள இடம். வலது திருவடியைத் தூக்கியும், இடது திருவடியை பூமியில் வைத்தும், வலது கையில் சங்கும், இடது கையில் சக்கரமும் மாறி அமைந்துள்ள கம்பீரமான தோற்றம்.

மகாபலிபுரத்தில் வராக மண்டபம் என்று அழைக்கப்பெறும் குகையில் பலியை அடக்கும் திருவிக்கிரமகோலத்தைக் காணலாம். மிக அழகான சித்திரம். 8-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட எல்லோரா தசாவதாரக் கோயிலிலும், வாதாபியிலும், காஞ்சி வரதர் நூற்றுக்கால் மண்டபத்திலும், திருநீர்மலையிலும் பற்பல வாமன - திருவிக்கிரம சிற்பங்களைக் காணலாம்.

பாடல்கள் முதலியன.

வ்ரீடானித்தவதான்ய தானவயசோ
நாஸீர தாடீபட :

த்ரய்யக்ஷம் மகுடம் புனன்னவது ந :
த்ரைவிக்ரமோ விக்ரம : !

யத்ப்ரஸ்தாவ ஸமுச்சீரித த்வஜபடீ
வ்ருத்தாந்த ஸித்தாந்திபி :

ஸ்ரோதோ பிஸ்ஸுரஸிந்துரஷ்டஸு திசா
ஸௌதேஷு தோதுயதே ll

(தசாவதார ஸ்தோத்திரம்)

திருமாலின் ஆகாயத்தை அளக்கும் திருவடிவைப் பிரம்மா தன் கமண்டலுவின் தீர்த்தத்தால் அர்ச்சித்தாராம்; அத்தீர்த்தத்தைத் தம் தலைமேல் தாங்கினாராம் முக்கண்ணன்; அஃது பிறகு ஆகாச கங்கையாக எட்டு திசைகளிலும், பகவான் பலியை ஜயித்ததற்கு அறிகுறியாகப் பறக்கும் கொடிகளைப்போல்—பரவிச் சென்றதாம். அத்தகைய திருமாலின் திருவடி—மூவுலகத்தையும் அளந்த திருவடி — நம்மைக் காக்கட்டும் என்று துதிக்கிறார் **வேதாந்த தேசிகர்** மேற்கூறப்பட்ட பாட்டில்.

வாமன — திருவிக்கிரம அவதாரங்களின் பெருமையினை ஆசிரியர் திருவள்ளு-

வரும் தம்முடைய திருக்குறளில், "மடி யிலா மன்னவன் எய்தும் **அடியளந்தான்** தாஅயது எல்லாம் ஒருங்கு" எனக் குறிப் பிட்டுப் போற்றியிருக்கின்ருர்,

சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தை இயற்றியருளிய ஆசிரியர் இளங்கோவடிகளும், "மூவுலகும் ஈரடி யால் முறை நிரம்பா வகை முடியத் **தாவிய சேவடி**" என்றும்; "திரண்ட மரர் தொழுதேத்தும் திருமால் நின் செங்கமல **இரண்டடியால் மூவுலகும்** இருள் தீர நடந்தனையே" என்றும் திரி விக்கிரமாவதாரம் பற்றிச் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார்.

வாமனன் என்மரகத வண்ணன்
தாமரைக் கண்ணினன்
காமனைப் பயந்தாய் என்றென்றுன்
கழல் பாடியே பணிந்து
தூமனத்தனனுய்ப் பிறவித்
துழதி நீங்கி என்னைத்
தீமனங் கெடுத்தாய் உனக்கேன்
செல்கேன் என் சிரீதரனே (1)

திருவிக் கிரமன் செந்தாமரைக்கண்
அம்மான்என் செங்கனிவாய்
உருவிற் பொலிந்த வெள்ளைப் பளிங்கு
நிறத்தனன் என்றென் றுள்ளிப்
பரவிப் பணிந்து பல்லூழியூழிநின்
பாதபங் கயமே
மருவித் தொழும் மனமே தந்தாய்
வல்லைகாண்என் வாமனனே. (2)

என்று நம்மாழ்வார் நலந்திகழப் பாடி யருள்கின்ருர். இவ்வாறே இவ்வாமன திரிவிக்கிரமாவதாரங்களைப்பற்றி ஏனைய ஆழ்வார்களும் பாடியிருத்தல் காண லாம்.

பற்பல ஆழ்வார்கள், கம்பன், இளங்கோ முதலானவர்கள், சம்ஸ்கிரு தத்தில் ஜயதேவர், க்ஷேமேந்திரர், புரந் தரதாஸர், ஸ்வாதித் திருநாள் முதலிய வர்கள் போற்றிப் பாடியுள்ள இத் திருவ வதாரத்தின் விவரங்களைச் சிறிதேனும் அறிந்து நாம் இன்புறுவோமாக!

பந்தணை நல்லூர்ப் பசுபதீசுவரர்
கோயில் திருப்பணியைத்
தஞ்சைத் துணை ஆணையர்
திரு. A. மார்க்கண்டவேல்ராஜன்
அவர்கள் தொடங்கி வைத்தல்.
(3—12—64)

'பெரிய அன்பின் வரகுண தேவர்'

முன்னுரை :

உலக வரலாற்று நூல்களில் உரோம நாட்டு **நீரோ** (Nero), பிரெஞ்சு நாட்டு **லூயி** (Louis XIV), மங்கோலியத்து **ஜெஞ்சிஸ்கான்** (Genghis Khan), துருக்கியத்துத் **தாமர்லேன்** (Tamerlane) முதலிய பற்பல தீய கொடுங்கோல் அரசர்களைப் பற்றிப் படிக்கின்றோம், ஆனால் தமிழ் நாட்டை ஆண்டுவந்த சேர சோழ பாண்டிய மன்னர்களுள் ஒருவரேனும், ஒரு சிறிதாவது நீதிநெறி தவறிய கொடுங்கோலர்களாக இருந்ததில்லை. அவர்கள் அனைவருமே அறநெறி வழாமல் அரசோச்சிச் செங்கோல் செலுத்தி வந்தனர்; தமிழக வேந்தர்கள் அறிவு திரு ஆற்றல்களிற் சிறந்து விளங்கியதுடன், நீதி, நேர்மை, பக்தி, ஒழுக்கம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் நிகரற்றுத் திகழ்ந்திருந்தனர்.

பேரறிஞர் பிளேட்டோ :

"அரசியற் பெருந்திறனும், தத்துவவுணர்வின் ஆற்றலும் ஒருங்கே யுடனியைந்து கலந்த நிலையில், **ஞானிகள்** அரசர்கள் ஆகவோ — அல்லது **அரசர்கள்** ஞானிகள் ஆகவோ மாறி நின்றால்தான், உலகம் உய்ந்து வாழ்வும் வளமும் பெறுதல் இயலும். அரசியல் ஆள்வினைத் திறனும், அருள் ஞான மெய்யுணர்வும் ஒருங்கு இயைந்து கலந்து நின்றாலன்றி, உலக மக்களுக்கு உய்தி இல்லை. இவை இரண்டினுள் ஏதேனும் ஒன்றைப் புறக்கணித்துவிட்டுப் பிறிதொன்றினை மட்டுமே கைக்கொள்ளும் இழிகுண மாக்களை ஆட்சிப் பொறுப்பினின்று ஒதுக்கித் தடுத்து நிறுத்தினாலன்றி, மனித குலத்திற்கு உய்வே இல்லை" — என மேலை நாட்டுப் பேரறிஞர் ஆகிய **பிளேட்டோ**(1) என்பவர் குறிப்பிட்டிருப்பதுபோல, நம் தமிழக அரசர்கள் தத்துவவுணர்வில் தலைசின்ற வித்தகர்களாகவும் விளங்கியிருந்தமை, வியந்து மகிழ்தற்குரியது.

பராந்தகன் நெடுஞ்சடையன் :

அத்தகைய தமிழ் வேந்தர்கள் பலருள், ஜடில பராந்தகன் நெடுஞ்சடையர் (கி.பி. 765—815), மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவராவர், தமிழக வரலாற்று ஆராய்ச்சித் துறையில் மிகவும் புகழ்பெற்றுத் திகழும் **வேள்விக்குடிச்** செப்பேடுகளை வழங்கியவர் இவ்வேந்தரே யாவர் (2). இச் செப்பேடுகளின் துணைகொண்டே சங்க காலத்திற்குப் பின்னர்க் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் விளங்கி இருந்த பாண்டிய வேந்தர்களைப் பற்றிய குறிப்புக்களை, ஓரளவேனும் நாம் தெரிந்துகொள்கின்றோம். இடைக் காலத்துப் பாண்டிய மன்னர்களுள் மிகச் சிறந்த ஒரு பேரரசராக விளங்கியவர், இவ்வேந்தரே எனலாம். பல்லவரையும் சேரரையும் பிற சிற்றரசர்களையும் போரில் வென்று புறங்கண்ட வீரப் பெருவேந்தராக, இவர் விளங்கி யிருந்தார். பாண்டி நாடு மட்டுமேயன்றிச் சோழ நாடு

(1) "Until **philosophers** become kings, or the kings and princes of this world have **the spirit and power of philosophy,** and **political greatness** and **wisdom** meet in one, and those commoner natures who pursue either to the exclusion of the other are compelled to stand aside, cities will never have rest from their evils; no, nor the human race, as I believe, — and then only will this our State have a possibility of life and behold the light of day".

— **Dialogues of Plato,**
The Republic.

(2) Prof. R. Sathianathaier, M.A., L.T.
History of India, P. 326.

கொங்கு நாடு, தென் திருவிதாங்கூர் நாடு, தொண்டை மண்டலம் என்பவைகளும். இவரது ஆட்சிக்கு உட்பட்டு அடங்கியிருந்தன.

இவருடைய **ஆஞ்ஞாபதி**யாக இருந்த **மாறன்காரி** என்னும் **மதுரகவி** என்பவரே, **ஆனைமலைப்** பெருமாள் கோயிலைக் கட்டியவர் ஆவர். (கி.பி. 770). இவ்வரசர் 'காஞ்சிவாய்ப் பேரூரிற் குன்றம் அன்னதோர் கோயில்' எடுத்ததாகவும் தெரிகின்றது. ஆடுதுறை, கும்பகோணம். செந்தலை, திருவெள்ளறை, அம்பாசமுத்திரம், திருவிடைமருதூர் முதலிய பல இடங்களில், இவர்தம் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

திருவிடைமருதூர் :

இத்தகைய சிறந்த பேரரசராகிய **ஜடில பராந்தகன் நெடுஞ்சடையன்** என்பவர், மிகவும் சிறந்த ஒரு சிவ பக்தராகவும் விளங்கியிருந்தார். தம்மை எதிர்த்துப் போர் தொடுத்த சோழ மன்னனை வென்று, சோழ நாட்டைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திய இவர், தமது தலைநகரம் ஆகிய மதுரையிற் போலச் சோழ நாட்டுத் திருவிடைமருதூரிலும் ஒரு மாளிகை அமைத்துக்கொண்டு, சில காலம் தங்கியிருந்தார். திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கப் பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். திருவிடைமருதூர்க் கோயிலின் மேற்குக் கோபுரமும், கொடுமுடிப் பிராகாரமும் பிறவும் இவரால் அமைக்கப்பட்டனவேயாகும்,

பட்டினத்தடிகள் :

திருவிடைமருதூர்ப் பெருமான்பால் இவ்வரசர் கொண்டிருந்த அன்பின் திறம் எல்லையற்றது. இவ்வாறும் உண்டோ என வியக்கத் தக்கது. அதனைப் பட்டினத்தடிகள், தாம் இயற்றியருளிய "திருவிடைமருதூர் மும்மணிக்கோவை" யிற் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்து கூறுகின்றார்.

(1) ஒரு நாள், கொடிய கள்வன் ஒருவனைத் தேடிப் பிடித்து, அவன் செய்த குற்றங்களுக்காகக் கடுந் தண்டனை தருதற்பொருட்டு, ஊர் காவலர்கள் அவனுடைய இரு கைகளிலும் விலங்கிட்டுப் பல வகைகளில் துன்புறுத்தி இழுத்துச் செல்லுதலையும், அக்கள்வன் நெற்றியில் **திருநீறு** அணிந்து பொலிதலையும், இவ்வரசர் கண்டார். உடனே இவருடைய உள்ளம் உருகிவிட்டது. ஊர் காவலர்களை அழைத்து, அக்கள்வனை மன்னித்து, கட்டுக்களை அவிழ்ப்பித்து, இன்சொற்கள் கூறி, விடுதலை செய்து அனுப்பிவிட்டார்.

(2) மற்றொரு நாள், ஊரின் புறத்தே நரிகள் இரவில் ஊளையிட்டன. அவ்வொலியைக் கேட்ட இவர், தாம் வழிபடும் திரு ஆலவாய்ச் சோமசுந்தரப் பெருமானையும், திருவிடைமருதூர் மகாலிங்கப் பெருமானையுமே, அந் நரிகள் அன்புடன் அழைத்துப் போற்றிப் பாடுகின்றன என்று, தம்முடைய மன நலத்தின் சால்பாற் கருதி மகிழ்ந்தார். அதனால் வேட்டைக்காரர்கள் அவைகளைப் பிடித்துக் கொல்வதற்காகக் கொண்டு வந்தபொழுது, அவற்றைக் கொல்ல மனம் வராமல், "இறைவனைப் பாடி வழிபட்ட இவற்றிற்கு ஓர் ஊறும் செய்தலாகாது" என்று சொல்லி, அவற்றிற்கு நல்லாடைகள் பலவற்றை முறைப்படி போர்த்திச் சிறப்புச் செய்து, காட்டிற்கே கொண்டுபோய் விட்டுவிடும்படி செய்தருளினர்.

(3) ஒரு சமயம், மழைக் காலத்தில் திருவிடைமருதூர்த் திருக் குளத்தில் தவளைகள் மகிழ்ச்சி மேலீட்டாற் பேரொலி செய்தன. அது கேட்ட இவர், தவளைகள் இறைவனின் திருப் பெயர்களைக் கூறித் துதித்து வழிபடுகின்றன என்று, தம்முடைய சிவ பக்திச் சிறப்புக்கு ஏற்பக் கொண்டு, அத்தவளைகளைப் பாராட்டிப் பரிசு நல்கும் முறையில், நவமணிகளையும் பொற் காசுகளையும் அத் திருக்குளத்தில் வாரி வீசி மகிழ்ந்தார்.

(4) மற்றொரு சமயம், இவர் திருவிடைமருதூர்க் கோயிலிற்குச் சென்று வழிபட்டு வலம் வந்து கொண்டிருக்கும்

போது, பிராகாரத்தில் உலரப் பரப்பியிருந்த கோயிலுக்குரிய எள்ளினைப் பணிவிடைக்காரன் ஒருவன் நிரம்ப எடுத்துவைத்துத் தின்று கொண்டிருத்தலைக் கண்டார். 'சிவாலயத்திற்குரிய இதனை நீ இங்ஙனம் திருடித் தின்னுதல் முறையா?' என்று அவனை வினவினார். அகப்பட்டுக்கொண்ட அவன் தப்பித்துக் கொள்ளுவதற்கு வேறு வழியின்மையால், 'அரசர் பெரும! **உண்ட கடனைத் தீர்த்தேயாதல் வேண்டும்** என்று பெரியவர்கள் சொல்லப் பலகாலும் கேட்டிருக்கின்றேன். அதனால் இப்போது இந்த எள்ளினையுண்டால், மறு பிறவியிலும் மகாலிங்கப் பெருமானுக்கு மீண்டும் மீண்டும் பணிவிடை செய்துவரும் நற்பேறு வாய்க்கும் என்ற பெருவிருப்பத்தினாலேயே இங்ஙனம் செய்தேன்' என்று அரசரின் மனங்கொள்ளும்படி அஞ்சிப் பணிவுடன் கூறினான். அது கேட்டதும் அரசர் மனமகிழ்ந்தார். 'அவ்வாறாயின், எனக்கும் அதிற் சிறிது கொடு' என்று கூறி, அப் பணிவிடைக்காரனின் எச்சில் எள்ளினை வற்புறுத்தி வாங்கியுண்டு, மகாலிங்கப் பெருமானுக்குப் பணிவிடைகள் செய்யும்பேறு மறுபிறவிகளிலும் தமக்கு மீள மீளக் கிடைத்து வருதல் வேண்டும் என விரும்பி வழிபட்டுச் சென்றார்.

(5) வேறொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலின் அருகில் புறத்தே ஓரிடத்தில் ஒரு மண்டையோடு விழுந்து கிடந்தது. அதனைக் கண்ணுற்றார் இவ்வரசர் பெருமான். இறந்து போயும் கூட, மகாலிங்கப் பெருமானைப் பிரிவதற்கு மனமின்றி, அக்கோயில் அருகே வந்து விழுந்து கிடக்கின்ற நும் அன்பின் திறம் எத்தகையது! என்று வியந்து, இத்தகைய பேறு உம்மைப்போல எனக்கும் வாய்த்தல் வேண்டும் என்று விரும்பி, அத் தலையோட்டினைத் தம் தலையுற வணங்கி நின்றார்.

(6) பிறிதொரு சமயம், திருவிடைமருதூர்க் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, அடுத்துள்ள பிராகாரங்களை வலம் வந்து கொண்டிருந்த பொழுது, அங்கே ஓர் இடத்தில் நாயின் மலம் விழுந்து கிடக்கக் கண்டார். அதனை அன்பர்களில் ஒருவராவது கவனித்து அப்புறப்படுத்தித் துப்புரவு செய்யாதிருத்தல் கண்டு, தாமே சென்று அப்புறப்படுத்தித் துப்புரவு செய்து உள்ளம் பூரித்தார்.

(7) ஒருகால் இவ்வரசர் பெருந்தகை திருவிடைமருதூர்த் திருவீதியை வலம் வரும்பொழுது, வேப்ப மரங்கள் யாவும் நன்றாகப் பழுத்திருத்தலைக் கண்டார். சிவம் பழுத்த அவர்தம் திருவுள்ளத்திற்கு, அவ்வேப்ப மரங்களின் பழங்கள் யாவும் சிவலிங்கங்கள் போலக் காட்சியளித்தன. அதனால் அவர் உடனே அம் மரங்களுக்கு எல்லாம் அழகிய விதானம் கட்டுமாறு கட்டளையிட்டு, உவகை பூத்தார்.

(8) இவைகளை யெல்லாம் காட்டிலும், இவர்தம் அன்பின் திறனை யுணர்த்தும் அரியதொரு நிகழ்ச்சியும் உண்டு. சோழ அரசனின் மகள் ஒருத்தி, இவ்வரசரை மணந்து கொள்ள விரும்பினாள். இவரும் அவளைப் பாராமலே மணந்துகொள்ள இசைவு தெரிவித்திருந்தார். பின்னர் அவளை இவர் பார்க்க நேர்ந்தது. அவளுடைய ஒப்பற்ற பேரழகினைக் கண்டு இவர் வியந்தார். 'சிறந்த பொருள்கள் எதுவும் இறைவனுக்கே உரியது' என்று எண்ணி வழங்கிவிடும் இயல்புடைய இவர், 'இவ்வளவு சிறந்த பேரழகுடைய இப்பெண்ணும் இறைவனுக்கே உரிமையாகத் தக்கவள்' என்று எண்ணி, அவளை அழைத்துக்கொண்டு சென்று மகாலிங்கப் பெருமான்பால் ஒப்படைத்து விட்டார் என்பது வரலாறு.

வரகுண தேவர் :

இத்துணைச் சிறந்த எல்லையற்ற பேரன்பும், இனிய குணங்களும் நிறைந்த இவரை **வரகுண மகாராஜன்** என்று மக்கள் அனைவரும் வாழ்த்திப் போற்றினர். பட்டினத்தடிகள் இவரைப் **''பெரிய அன்பின் வரகுண தேவர்''** என்று குறிப்பிட்டு, இவருடைய இணை

யற்ற பேரன்பினையும், இறைமைத் தன்மையினையும் இனிதெடுத் துரைத்துப் பாராட்டிப் பின்வருமாறு பாடியருள் கின்றார்.

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டு அவிழ்ப் பித்தும் (1);

ஓடும் பல்நரி ஊளைகேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும் (2);

குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும் (3);

வழிபடும் ஒருவன் மஞ்சனத்து இயற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும், அவன் இப் பிறப்புக்கு என்ன,
இடித்துக் கொண்டு அவன் எச்சிலை நுகர்ந்தும்
(4)

மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி,
உம்மைப் போல எம் இத் தலையும்
கிடத்தல் வேண்டும்என்று அடுத்தடுத்து
இரந்தும் (5);

கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன என்று நாய்க்கட்டம் எடுத்தும் (6);

காம்புகுத்து உதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
(7);

விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர் (8);

—திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, 28

நம்பியாண்டார் நம்பிகள் :

இவ்வாறே ' கோயில் திருப்பண்ணியர் விருத்தம்'' என்னும் நூலில், பதினொன்றும் திருமுறையில்,

பொடியேர் தருமே னியன் ஆகிப்
பூசல் புக அடிக்கே

கடிசேர் கணைகுளிப் பக்கண்டு,
கோயிற் கருவியில்லா

வடியே பட அமை யுங்கணை
என்ற வரகுணன்றன்

முடியே தருகழல் அம்பலத்
தாடிதன் மொய்கழலே

என நம்பியாண்டார் நம்பிகளும், வரகுண மகாராஜன் என்னும் இப் பாண்டிய மன்னரைப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

— ஆசிரியர்.

பாவை மாநாடு:

செங்கற்பட்டுக்கு அடுத்த **பொன் விளைந்த களத்தூர்** உயர்நிலைப் பள்ளியில், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. தமிழக முதலமைச்சர் **திருமிகு. M. பக்தவத்சலம்,** B.A., B.L., அவர்கள் கலந்து கொண்டு, பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். வித்வான் திரு. நரசிம்மாசாரியார், தொல்பொருள் துறை மேற்பார்வையாளர் திரு. கே. வி. சௌந்தரராஜன், M.A., ' திருக்கோயில்' ஆசிரியர் திரு. N.R. முருகவேள், M.A.,M.O.L. ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள், திருவாளர்கள் யு. இராஜகோபாலன், எம். மாணிக்கம், பண்டிட் K. S. V. ஸ்ரீநிவாஸாச்சாரியார், கே. ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார், கே. ஏ. கோபாலசுவாமி ஐயங்கார் முதலிய பெருமக்கள் பலரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (13 . 1 . 65).

கூத்தாடு தேவர்

கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

இயற்கையில் ஒவ்வொரு பொருளும் அசைந்துகொண்டே இருக்கிறது. அசைந்தால் உயிர்; அசையாமல் போகின் இறப்பு, அணு முதற்கொண்டு பெருங் கதிரவன் வரை எல்லாம் அசைந்துகொண்டே இருக்கின்றன. அந்தக் காரணத்தினால்தான் பிரபஞ்சம் இயங்குகிறது. பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் இழுப்புச் சக்தி உண்டு. அச்சக்தியினால் ஒன்றை ஒன்று வெளியே போகாமல் இழுத்துப் பிடித்து ஆட்டுகிறது. ஒரு கடியாரத்தில் பெரிய சக்கிரத்திற்கு சிறு சக்கிரங்கள் இணைந்திருக்கின்றன. பெரிய சக்கரம் அசைந்தால் சிறிய சக்கரங்கள் அசைகின்றன, நின்றால் எல்லாம் நின்றுவிடும். அதுபோல் பிரபஞ்சத்தை ஆட்டும் பெரிய சக்தி ஒன்று உண்டு. அது ஆடினால் எல்லாச் சிறியவைகளும் ஆடும். இந்தக் கோட்பாட்டைத்தான் கூத்தாடு தேவரின் திருவுருவத்தில் காண்கிறோம். இதனைத் தற்கால விஞ்ஞானமும் ஒத்துக் கொள்கிறது. முழுமுதல் கடவுள் பிரபஞ்சத்திற்கெல்லாம் முதல்வன். அவன் அசைந்தால்தான் எல்லாம் அசையும். மேலும் அவன் அசைவிப்பான் எல்லாம் அசையும். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது நுண்பொருள். மேலும் அவன் அசைவினால் எல்லாவற்றையும் ஆட்டுவிப்பான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்பது அப்பர் வாக்கு. இந்த சித்தாந்தத்தை உருவமாக விளக்குவது கூத்தாடுதேவர் ஓவியம். இதனை நமது நாட்டுச் சமய சித்தாந்தமே விளக்கிக் காட்டுகிறது. வேறெந்த சமயக் கொள்கையும் ஓவியமாகக் காட்டவில்லை. இறைவன் நடுநாயகமாக நின்று ஆடுகிறான். அவன் ஆட, மற்றப் பொருள்கள் எல்லாம் அணுமுதல் பேரொளி வரையில், ஆடிக்கொண்டே இயங்குகிறது. இதனை உணர்த்தும் ஓவியம் உலகிலேயே மிகச் சிறந்ததென்று மேல்நாட்டுச் சிற்பிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். சிவ மகா புராணம் நடராஜத் திருவுருவத்தை வெகு சிறப்பாக வருணிக்கிறது. அப்படியிருந்தும் வடநாட்டில் அத்திருமூர்த்தம் சிறந்து வழங்கவில்லை. நடராஜத் திருவுருவம் தென்நாட்டில்தான் எங்கும் போற்றப்படுகிறது. சிவன் திருக்கோயில்களில் அந்தத் திருவடிவம் இல்லாத கோயிலே இல்லை எனலாம். எல்லாச் சிவாலயங்களிலும் கனக சபை என்ற ஒரு அழகிய மண்டபம் இருக்கும். அது தெற்கு நோக்கி இருக்கும். அதன் நடுப்பீடத்தில் கூத்தாடும் நிலையில் பெருமான் காட்சி அளிப்பார். மண்டபம் வெகு திருவுருவங்களைக் கொண்ட தூண்களால் அமைக்கப் பெற்றிருக்கும். கோயில்களில் வேறு பகுதிகளில் சிற்பக் கலை சிறக்காவிடினும், நடராஜரின் முன்னிலையில். தேவர்களின் அருட்செயல்களும், மக்களின் விளையாடல்களும், விலங்குகளின் ஆடல்களும் நிரம்பப் பார்க்கலாம், இப்படிப்பட்ட தனி மண்டபங்கள் பாரதநாட்டில் தென் நாட்டைத்தவிர பிற பகுதிகளில் காணக் கிடையா. ஆகவே கூத்தாடு தேவர் தமிழ்நாட்டிற்குகந்த கடவுளுருவம் எனக்கூறலாம்.

கூத்தாடும் திருவுருவத்தில் பலகலைகளும் பல உண்மைகளும் இருக்கின்றன. இறைவனுடைய ஐந்து தத்துவச் செயல்கள் அதில் அமைந்திருக்கின்றன. அவைகள் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகும். இதனை

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தே உற்றதிரோ தம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

—(மெய்கண்ட சாத்திரம்)

என்ற வெண்பா உணர்த்துகிறது. மேலும் இறைவன் கூத்தாடுகையில் அவன் கையில் ஒலிக்கும் உடுக்கை இருபத்தைந்து எழுத்துக்களை ஒலிக்கின்றது. இதனை வடமொழிச் சுலோகம் ஒன்று உணர்த்துகிறது.

இந்த இருபத்தைந்து ஒலிகள்தான் எழுத்துக்களுக்கெல்லாம் மூலம். அவைகளிலிருந்தே எல்லாக் கலைகளும் பெருகின. இதில் கூத்தாடுதேவரை நடராஜர் என்ற சொல்லால் வடமொழி கூறுகிறது. அச்சொல்லே நமது நாடு முழுவதும் வழங்குகிறது. கூத்தாடுதேவரின் திருவுருவச் சிறப்பைப்பற்றித் தமிழ் இலக்கியம் நிரம்பக் கூறுகிறது. சங்க காலச் செய்யுள் முதல்கொண்டு தற்காலச் செய்யுள் வரையில் அச்சிறப்பு நன்ருகப் போற்றப்பட்டிருக்கிறது. அம்மையோடு அப்பர் கூத்தாடும் செய்தியைச் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. தேவாராதி புனிதப் பாடல்கள் அத்திருவுருவத்தை நிரம்ப வருணிக்கின்றன, நால்வர் பெருமக்களும் கோயில்களுக்கு எழுந்தருளின காலத்தில் அத்திருவுருவத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கின்றனர். அருட்பாடல்களிலே அவ்வுருவத்தைப் போற்ருத இடமேயில்லை. ஆகவே பல்லவர் காலத்திற்கு முந்தியே அத்திருவுருவம் கோயில்களில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று அறியலாம். தெய்வீகச் சரித இலக்கியத்திலே திருத்தொண்டர் புராணத்தில் அவ்வுருவம் வெகு அழகாகக் கூறப்பட்டுள்ளது. மூவர்களிலே சுந்தரமூர்த்திகள் தில்லையைத் தரிசித்தபோது அத்திருவுருவத்தின் அழகிலே ஈடுபட்டதை, ஆசிரியர் சேக்கிழார் மிகவும் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்கின்ருர்.

மேலும் சுந்தரமூர்த்திகள் கொங்கு நாட்டிற்குச் சென்றபோது பேரூர் தரிசித்தார். அப்போது பெருமான் கூத்தாடும் கோலத்தைக் கண்டு அதில் ஈடுபட்டார். அவர் ஈடுபட்ட அற்புதத்தைச் சேக்கிழார் சுவாமிகள் பல செய்யுட்களில் கூறுகின்ருர். இவ்வாறு வருணித்திருப்பதைக் கண்டால் அந்தக் கூத்தின் திருவடிவத்தழகு எவ்வாறு இருக்கும் என்று நம்மால் கூறவும் ஆகுமோ? திருப்பேரூர் நடராஜவுருவம் இன்றும் அப்படியே இருக்கிறது. அதன் வடிவம் யாவராலும் மெச்சப்படுகிறது. முழுதும் ஓரே வார்ப்படம், காலில் சிலம்பும் சலங்கையும்கூட ஒரே வார்ப்படம். அந்த முறையில் இந்நாளில் வார்க்க முடியுமோ என்பது ஐயம். அதன் பிறகு சுந்தரமூர்த்திகள் பல தலங்களையும் தரிசித்துவிட்டுத் தில்லை சென்ருர். அப்போது பெருமானைத் தரிசித்தபோது தாம் பேரூரில் தரிசித்த கூத்தை நினைவுபடுத்திக்கொண்டு கோயில் திருப்பதிகத்தில் அதனை நினைவு கூர்கிருர். அதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

> மடித்தாடும் அடிமைக்கண் என்றெடுத்து
> மன்னுயிர்கட் கருளும் ஆற்ருல்
>
> அடுத்தாற்று நன்னெறிக்கண் நின்ருர்கள்
> வழுவிரக ணையா வண்ணம்
>
> தடுப்பானைப் பேரூரிற் கண்டமிலை
> சிறப்பித்துத் தனிக்கூத் தென்றும்
>
> நடிப்பானை நாம்மனமே பெற்றவா
> றெனும்களிப்பால் நயந்து பாடினுர்

என்று அருமையாகக் கூறுகிருர். ஆகவே பேரூர்க் கூத்தாடுதேவர் உருவமும், தில்லைக் கூத்தர் உருவமும் ஒருமைப்பாடு உடையவை என்று நினைக்கலாம் அல்லவா?

> "மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரர்
> பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே
> பெற்ரும் அன்றே"

என்று தேவாரத்தில் கூறியிருப்பதும் காண்க. இந்த இலக்கியச் சான்றுகளால் தென் நாட்டில் கூத்தாடு தேவரின் திருவுருவம் 6-வது நூற்றுண்டு முதல் 12-வது நூற்ருண்டு வரையில் வெகு புகழோடு போற்றப்பட்டதென்று காணலாம். பிற்காலத்தில் அது மிகப் புகழ் பெற்றதை இங்கே கூற வேண்டியதில்லை. யாவரும் அறிவர்.

திருப்பேரூரில் திருக்கோயிற் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் நடராசப் பெருமானைக் கூத்தாடுதேவர் என்றே கூறுகின்றன. அவைகள் கொங்குச் சோழன் காலத்தவை. 10 முதல் 12 நூற்றுண்டினளவில் தஞ்சைச் சோழர் காலத்துக் கல்வெட்டுகளும் அப்பெயரையே வழங்கி இருப்பதும் காணலாம். நடராச வடிவங்கள் பல வகைப்படும். பிரபாவளியோடும், பிரபாவளி இல்லாமலும் காணலாம். மிகப் பெரிய வடிவங்களாகவும் சிறிய வடிவங்களாகவும் காணலாம். பஞ்சலோகத்திலும், கல்லிலும் இருக்கக் காணலாம். சோழ நாட்டில் பெரும்பாலும் பஞ்சலோகத்தினுல் செய்தவையே. தஞ்சையில் இராசராசன் செய்த நடராசர் மிகப் புகழ் பெற்றது. பல நடராச உருவங்களை வெள்ளைக்காரர் மறைவிற் கவர்ந்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். அது நமது பொல்லாத வேளை.

பாண்டிய நாட்டில் உள்ள நடராசர்கள் பதினன்கும், கருங்கல்லால் செய்யப்பட்ட பெரிய உருவங்களே. இவைகளை இன்றும் பதினன்கு பாடல்பெற்ற தலங்களிலும் காணலாம். இவைகள் கருங்கல்லால் ஆக்கப்பட்டபடியால் திருவுலாக்களுக்குச் சப்பரங்களில் எடுத்துச் செல்ல முடியாது. பாடல் பெருத சங்கரநயினர்கோயிலிலும் மிகப் பெரிய சிலையாக நடராசர் இருக்கிருர். **நல்லம்** என்ற கோனேரி ராஜபுரத்தில் உள்ள இரண்டு நடராசர்களில் பெரியது எடுக்க முடியாத அளவில், கனகசபையில் கருவறை கட்டப்பெற்றிருக்கின்றது. ஏனே தெரியவில்லை. மேலும் ஐந்து தாண்டவத்தலங்கள் இருக்கின்றன. அவைகளில் கூத்தப்பெருமான்கள் உண்டு. நடனங்களின் பெயர்களும் வெவ்வேறு. அந்த ஐந்து சபைகள் — சிதம்பரம். மதுரை, திருநெல்வேலி, குற்ருலம், திருவாலங்காடு என்பன, தாண்டவங்கள் எழுவகை என்பர். அவைகளின் விவரங்களை "எழுவகைத் தாண்டவம்" என்ற நூலில் காணலாம்.

நடராசப்பெருமானின் திரு உருவத்தில் பாதத்தின்கீழ் முயலகன் இருக்கக் காணலாம். **முயலகன்** என்ற கொடியவனை வெல்லும் நிலையில் இது காணப்படும். முயலகன் ஏன் தண்டிக்கப்படுகிருன் என்று பொதுமக்கள் அறிவதில்லை. சிலர் கண்டபடி கதைகள் கூறுகிருர்கள். உண்மையான செய்தி, திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாற்றில் அறியலாம். சம்பந்தர் திருப்பாச்சிலாச்சிரமத்திற்குச் சென்ருர். அங்கே கொல்லிமழவன் என்ற தலைவனுடைய புதல்வி ஒரு நோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். நோயை எவராலும் தீர்க்க முடியவில்லை. ஞானசம்பந்தர் வந்தவுடன் அவரை நன்கு வரவேற்று அவர் திருமுன் புதல்வியைக் கொண்டு வந்துவிட்டான். சம்பந்தர் இறைவனைக் குறித்து "மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே" என்று பாட, அப்பிணி தீர்ந்தது. இந்நோய்க்கு முயலகன் என்று பெயர். இவ்வாறு திருத்தொண்டர் புராணத்தில் இருக்கிறது. ஆனல் முயலகன் என்ற நோயின் விவரம் அதில் காணப்படவில்லை. திருப்பாச்சிலாச்சிராமம் திருச்சி மாவட்டத்தில் காவேரிக்கு வட கரையில் உள்ள பாடல் பெற்ற தலம். இந்தத் தலத்தில் உள்ள நடராசப் பெருமானின் திருவுருவத்தில் முயலகன் உருவம் இல்லை. சம்பந்தர் மழவன் மகளுக்கு அந்நோய் தீர்த்தவுடன் அந்த முயலகன் உருவமும் மறைந்துவிட்டதென்று கர்ண பரம்பரை கூறும். இதனுல் முயலகன் என்பது ஒரு நோயின் பெயர் என்றும், அதனை இறைவன் திருக்கூத்து ஆடும்போது நசுக்கிவிட்டார் என்றும் ஊகிக்கலாம் அல்லவா? மனிதர்களுக்கு வரும் நோய்களை எல்லாம் இறைவனை வழிபட்டால் அவன் நசுக்கிவிடுவான் என்ற உண்மை இதனுல் தெரியவருகிறது. அசுரர்கள் நோயின் உருவகங்கள் என்றும் அறியலாம்.

பண்டைப் பொருட் கலை ஆராய்ச்சிப் பகுதியார் எத்தனையோ பண்டைப் பொருள்களைச் சேகரித்தும் ஆராய்ந்தும் எழுதி வைத்திருக்கிருர்கள். அவைகளில் நடராச உருவங்கள் இருக்

கின்றன. அவைகளின் காலமும் ஆராய்ந்திருக்கிறார்கள். பொதுவாக நடராச உருவங்களைத் தொகுத்துப் படங்களில் வெளியிடப்பட்டிருக்கும் நூல் கோபிநாதராவ் வெளியிட்டிருக்கும் "Indian Iconography" இந்திய விக்கிரகக்கலை என்பது ஆகும். எந்தெந்தக் கோயில்களில் எந்தெந்தச் சிலைகள், வெண்கலப் பிரதிமைகள், தந்தச் சிற்பங்கள், மரப்பதுமைகள் முதலிய செய்தியை எல்லாம் அந்தத் தொகுதியில் காணலாம். இந்த ஆராய்ச்சியும் தொகுப்பும் மிகச் சிறந்த பணிகள். இந்த நூல் தற்போது கிடைப்பதரிது. இதனை அரசியலார் மறுபடியும் பதிப்பித்தால் ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகமிக நலமாக இருக்கும். ஒன்றிரண்டு குறிப்புக்களை இங்கே தருவோம்.

பெருமான் கூத்தாடினது தில்லையில் பதஞ்சலி வியாக்கிரபாதர்களுக்காகவும், பேரூரில் கோமுனி பட்டிமுனிகளுக்காகவும் ஆம் என்று புராணங்கள் கூறும். அதேகோலத்தை மற்ற சிவனடியார்களுக்கும் சிறப்பாக மாணிக்கவாசகருக்கும் காட்டியுள்ளார். அது தில்லைச் சிற்றம்பலத்திலும் திருக்கழுக்குன்றத்திலும் என்று அவரே கூறியிருக்கின்றார். ஆகவே திருவாதிரைத் திருநாளில் மாணிக்கவாசகருக்குக் காட்டிய கோலத்தைத் திருவிழாவாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்தத் திருவிழாவிற்காகச் சோழர் காலத்தில் பல கோவில்களில் பல தானங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆகவே அந்த இடங்களில் மிக அற்புதமான வேலைப்பாடுள்ள திருவுருவங்களைக் காண்கிறோம். சிதம்பரம் கோபுரத்தில் 108 விதங்களான தாண்டவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. விருத்தாசலம் கோபுரத்திலும் இவ்வாறான நடனபேதங்களைக் காண்கிறோம். இன்னும் அனேக கோயில்களில் விதம் விதமான கோலங்கள் பார்க்கலாம். அவைகளில் சிறப்பானது சிதம்பரத்து ஆனந்தத் தாண்டவம் ஆகும்.

திருச்சிவட்டம் கோவந்தபுத்தூர் விஜயமங்கல தேவர் ஆலயத்தில் சோழன் இராசகேசரிவர்மன் ஏழாவது ஆண்டில் அம்பலவாணன் என்ற ஒரு அன்பன் கூத்தாடும் பெருமானுக்கும் உமர்பட்டாரகிக்கும் பொன் நகைகள் அளித்து அத்திருமேனிகளைத் தாபிதம் செய்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. செங்கற்பட்டுப் பொன்னேரித் தாலுக்காவில் திருப்பாலைவனத்தில் மார்கழித் திருவாதிரை விழா நடத்துவதற்காகக் குலோத்துங்க சோழ மகிபாலன் என்றவன் சோழன் இராசாதிராசனின் 6வது ஆண்டில் ஒரு நிபந்தம் ஏற்படுத்தினன். வெண்கலத்திருமேனிகளில் மிகச் சிறந்ததாகத் தஞ்சை மாவட்டம் தாண்டான் தோட்டத்து நடராசர் உருவம் கருதப்படுகிறது. அவ்வுருவத்தில் விரிந்தாடும் சடாமுடி மிகச் சிறந்ததாம். இது முன்னைச் சோழர் காலத்தது. சென்னைக் காட்சிச்சாலையில் உள்ள புங்கனூர் நடராசர் பின்னைச் சோழர் காலத்தது என்றும், படிமானம் குறைந்துவிட்டதென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். இந்தவகையில் கூத்தாடு தேவரின் திருமேனிகள் நமது ஆராய்ச்சிக்கும் பெருமைக்கும் அன்பிற்கும் உரியவைகள் என்க. *

(நல்லுபதேசம்)

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யான்உளன் நாம்உளோம்
எற்றுக் கோநம னல்முனிவு உண்பதே?"

—திருநாவுக்கரசர்

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

25-12-64	காஞ்சிபுரம் குமரகோட்டம்	—பாவை மாநாடு
27-12-64	மாயூரம் வள்ளலார் கோயில்	— ,,
,,	திருவாய்மூர் தியாகராஜசுவாமி கோயில்	— ,,
28-12-64	நாகபட்டினம் சௌந்தரராஜப் பெருமாள் கோயில்	— ,,
29-12-64	சிக்கல் நவநீதேசுவரர் கோயில்	—திருப்பணித் தொடக்க விழா
,,	தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயில்	—பாவை மாநாடு
30-12-64	திருக்காட்டுப்பள்ளி அக்னீசுவரர் கோயில்	— ,,
31-12-64	மாயூரம் ஸ்ரீ மாயூரநாதர் கோயில்	— ,,
,,	சீர்காழிச் சட்டைநாதர் கோயில்	— ,,



காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் நிகழ்ந்த பாவை மாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் அவர்கள் தலைமையில், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றுதல்.

—(25-12-64)

மாதவாசாரியரும் சைவ சித்தாந்தமும்

திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள், M.A.,
வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

பதினைன்காம் நூற்றாண்டில் **மாயணர்** என்பவருக்கும் **ஸ்ரீமதி** என்ற அம்மையாருக்கும் சாயணகுலத் தோன்றலாக அவதரித்தவர் **மாதவாசாரியர்** என்பவர். இவர் துங்கபத்திரை நதிக் கரையில், பம்பா சரஸின் அருகில் அமைந்துள்ள விஜய நகரத்தில் வசித்து வந்தார். **புக்கவீரர்** எனும் ஆந்திர வேந்தரிடமும், அவர் புதல்வரான **ஹரிஹரர்** என்பவரிடமும் அமைச்சராகச் சிறப்புறப் பணியாற்றிய பெருமை உடையவர். ஆந்திர நாட்டுச் சேக்கிழார் என இவரை அழைப்பது பொருந்தும். வேத சாஸ்திரங்களை விரிவாகப் பயின்ற இவர் முதுமைப் பருவத்தில் துறவு பூண்டு வித்யாரண்யர் என்ற பெயருடன் ஆதிசங்கரரால் நிறுவப்பட்ட சிருங்கேரி பீடத்தில் அமர்ந்து அருட் செங்கோல் நடத்திய அத்வைத வாதி. அவர் இயற்றிய சம்ஸ்கிருத நூல்கள் பல. அவற்றுள் '**சர்வதர்சன சங்கிரஹம்**' என்பது ஒன்று. அதில் சார்வாகம், பௌத்தம், ஜைனம், விசிஷ்டாத்வைதம், துவைதம், பாசுபதம், **சைவம்**, காஷ்மீர சைவம், ரஸேசுவரம், வைசேஷிகம், நியாயம், மீமாம்சை, வியாகரணம், சாங்கியம், யோகம், அத்வைதம் ஆகிய சமயங்களின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந் நூலில் கூறப்பட்டுள்ள சைவம் தமிழ் நாட்டில் வழங்கும் சைவசித்தாந்தமே என்பது, இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள E. B. Colwell என்பாரின் கருத்து. இந்நூலைப் பயின்றவர் ஒப்ப முடிந்த கூற்று இது. ஆகமங்களின் அடிப்படையில் இச் சமயத்தின் உண்மைகளை மாதவாசாரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கின்றார். '**சைவதர்சனம்**' என்ற பிரிவில் சமயச் சான்றோரான மாதவாசாரியர் எங்ஙனம் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார் என்பதை விளக்க எழுந்தது இக் கட்டுரை.

பதி, பசு, பாசம், என்ற முப்பொருள் உண்மை இச் சமயத்தின் அடிப்படை. சமய நூல் வித்யை (ஞானம்), கிரியை, யோகம், சரியை, என்ற நான்கு பாதங்களை உடையது. முப்பொருள் உண்மையை அறிவதற்கு ஞானம் இன்றியமையாதது. பல விதமான தீட்சை முறைகளைக் கூறுவது கிரியை. தீட்சை பெறுவதற்குரிய தகுதிகளைக் கொடுப்பது ஜபம், தியானம் முதலான யோக நெறிகள். விதித்தலைச் செய்தலும் விலக்கியதை ஒழித்தலும் சரியை. இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

'**பதி**' என்ற சொல் சிவனைக் குறிக்கும். முக்தியடைந்த வித்யேசுரர்கள் சிவமாம் தன்மையைப் பெற்ற போதிலும், சிவனைப்போன்று முழு முதற்றன்மை பெற்றவரல்லர். சிவனே முழுமுதல், அவன் முதற்றே உலகு என்பதற்குச் சான்று யாதெனின், ஒரே படித்தான ஒழுங்கு முறையோடு உலகம் இயற்றப்பட்டிருப்பதே ஆம் எனக் கொள்க. குடம் செய்யப்படுவதற்குக் காரணனாகக் குயவன் காணப்படுவது போல உடல், கரணங்கள், உலகு ஆகிற காரியப் பொருளுக்குக் காரணனாக இறைவன் உளன் என்னும் உண்மை அனுமானத்தால் அறியப்படுவது. உலகில் ஒரு சிலர் இன்பத்தையும், ஒரு சிலர் துன்பத்தையும் ஒரொருகால் நுகர்வதால் இறைவன் நடுநிலை பிறழ்ந்தவனோ எனின், அன்று. உயிரினங்கள் ஒவ்வொன்றின் வினைக்கேற்ப இறைவன் இன்பதுன்பங்களை ஊட்டுகின்றான். வினையின் விளைவால் இறைவனின் முழுமுதற்றன்மையோ அவனது நடுநிலைமையோ பழுதுபடுவதில்லை. இக்கருத்து சித்தக்குரு. பிருஹஸ்பதி போன்றோரின் வாக்கியங்களிலிருந்து அறியப்படுகின்றது. எல்லாவற்றையும் ஆக்குவோன்

எல்லாவற்றையும் அறிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். இதை மிருகேந்திராகமம் கூறுகின்றது—'கருவி, செயல், பயன் அனைத்தையும் அறிந்தவனே கருத்தாவாக இருத்தற்கியலும்'. இறைவன் கருத்தாவெனில் குயவனைப் போல் உறுப்புக்களின்றி உலகத்தை எங்ஙனம் உற்பத்தி செய்ய முடியும் என்ற வினா எழலாம். நமது உடல் தொழிற் படுவதற்கு உருவமற்ற உயிர் காரணம் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். அப்படி உருவமற்ற இறைவன் படைத்தல் தொழிலைச் செய்ய வல்லவன் என்பதில் ஐயம் எழுவதற்கில்லை, கருத்தாவுக்கு உருவம் இன்றியமையாதது என்பதை ஒப்புக் கொண்டு பேசினாலும், நமது உடல் போல் கன்மவசத்தால் ஏற்பட்ட உடலன்று, அனாதி முக்தனான இறைவனது உடல். அது ஈசானம் முதலான மந்திரசக்தி உருவில் அமைந்துள்ளது. ஈசானம் தலை, தத்புருஷம் முகம், அகோரம் இதயம், வாமதேவம் குஹ்யம், சத்யோஜாதம் பாதம். பஞ்ச கிருத்யங்களைச் செய்வதற்கு இறைவன் தானே நியமித்துக் கொண்ட அங்கங்கள் இவை. இது மிருகேந்திரத்தில் கூறப்பட்டுள்ளது, ஐந்து முகங்கள், பதினைந்து கண்கள் என்று ஆகமங்கள் கூறுவதெல்லாம் அருவ வழிபாட்டின் அருமை கருதிச் சாதகர்கள் தியானம் செய்வதற்கு உதவும் முறையில் அமைந்தவே எனப் பௌஷ்கரம் கூறுகிறது. சுத்தாத்வாவில் பஞ்சகிருத்யங்களைச் செய்பவன் சிவன், கிருச்சிராத்வாவில் அனந்தன் முதலான மாகேசுவரர்கள் வாயிலாக இவை செய்யப் படுகின்றன என்று கூறுகிறது காரணாகமம். சிவ சம்பந்தம் உடையவர்கள் மந்திரங்கள் எனப்படும் ஜீவராசிகள், மந்திரேசுவரர்கள், மகேசுவரர்கள், முக்தாத்மாக்கள் ஆகியோர்.

'பசு' என்பது ஜீவாத்மா. அது வியாபகமானது. நித்தியமானது. அவ்வாத்மா பல. ஆகவே பிறமதங்களில் கூறப்படும் ஆத்ம சொரூபத்தினின்றும் மாறுபட்டது. இவ்வாத்மா மூன்று வகைப்படும். அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவாகும்.

விஞ்ஞானகலர்: பரமேசுவர சொரூபத்தைப் பற்றிய அறிவு விஞ்ஞானம். யோகம் என்பதில் ஜபம், தியானம் ஆகியவை அடங்கும். சந்யாசம் என்பது துறவு. போகம் என்பது சுகதுக்கானுபவம். இவை அனைத்தும் சேர்ந்த விடத்து வினை தேயும், மாயாகாரியம் நீங்கும். மலம் மட்டுமே எஞ்சி நிற்கும். அந்நிலையில் உள்ளவரே விஞ்ஞானகலர், விஞ்ஞானகலரில் இரு பிரிவினர் உண்டு. ஒரு சாரார் மலபரிபாகத்தினால் மலம் முற்றிலும் களையப்பட்டவர். அவர்கள் சிவனருளால் வித்யேசுவரர் பதத்தைப் பெறுவர். அவர்கள் எண்மர்: அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்திகர், ஸ்ரீகண்டர், சிகண்டி என்பவராவர். இரண்டாவது பிரிவினர் ஏழு கோடி ஜீவராசிகள். அவற்றை 'மந்திரங்கள்' என்ற பெயரால் தத்துவப்பிரகாசம் என்ற நூல் குறிக்கின்றது. இவை சரீரம், வினை ஆகிய தளைகளினின்றும் விடுபட்டுக் கேவல மலத்தோடு நிற்பவை.

பிரளயாகலர்: மலமும் கன்மமும் எஞ்சி நிற்கும் ஆத்மா பிரளயாகலர் எனப்படுவர். இவர்களிலும் இரு வகையினர் உண்டு. முதல் வகையினர் ஆணவம் கன்மம் என்ற இருவகைப் பாசங்கள் உடையராயினும் அவை செயலிழந்து காணப்படுவதால் முத்தி பெறுதற்குரியராகின்றனர். இரண்டாவது வகையினர் எல்லாத் தத்துவங்களுக்கும் உட்பட்டவராய் பல யோனிகளில் பிறந்துழல்வர். இதுபற்றிய விரிவு தத்துவப் பிரகாசத்திலும், அகோரசிவாச்சாரியார் விவரணத்திலும், தத்துவசங்கிரஹத்திலும், காலோத்தரத்திலும் காணப்படுகின்றது. 'புர்யஷ்டகம்' என்ற சொல் காலோத்திரத்தின்படி சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், புத்தி, மனம், அகங்காரம் என்பவற்றைக் குறிக்கும் எனவும், ராமக(ா)ண்டரின் கூற்றின்படியே முப்பது தத்துவங்களையும் உடையதே அச்சொல் எனவும் மாதவாசாரியார் சுட்டு

கிறார். பின்னையதைப் பின்பற்றுவார் போல, தத்துவங்களனைத்தையும் எட்டு பிரிவுகளில் அடக்கிக் காட்டுகிறார் ஆசிரியர். அவையாவன (1) ஐம்பூதங்கள் (2) ஐந்து தன்மாத்திரைகள் (3) ஐந்து ஞானேந்திரியங்கள் (4) ஐந்து கன்மேந்திரியங்கள் (5) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் நான்கு மனோ நிலைகள் (6) முக்குணச் சேர்க்கை (7) பிரகிருதி (8) கலை, காலம், நியதி, வித்யை, அராகம் என்ற நான்கு தத்துவங்களின் தொகுதி.

சகலர் : மலம், மாயை, கன்மம் என்ற மூன்றுடன் கூடி நிற்கும் ஆத்மா சகலர் எனப்படுவர். இவருள்ளும் இரு வகையினர் உண்டு. ஒருசாரார் மலபரிபாகம் உற்றவர், மற்றொரு சாரார் உறாதவர். முதல் வகையினரின் மலபரிபாக முதிர்ச்சிக்கேற்பப் பரமேசுவரன் சக்தி நிபாதம் அருளி, நூற்றுப்பதினெட்டு மந்திரேசுவரர் நிலையில் அவர்களை அமர்த்துகிறார். இவர்களுள் மண்டலிகள் எண்மர். குரோதாதியர் எண்மர். வீரேசர், ஸ்ரீகண்டர் இருவர். ருத்திரர் நூற்றுவர். பரிபாகத்தின் தரத்திற்கேற்பக் குருவாயிலாகத் தீக்கை செய்வித்துப் பரமேசுவரன் முக்தி அருளுகின்றான். இது மிருகேந்திரத்திலும் நாராயணகண்டரின் உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மலபரிபாகம் எய்தப் பெறாதவர் வினைப்பயன் நுகர்தற்கேற்ற போகங்களை இறைவன் ஊட்டுகின்றான்.

பாசம் : நால்வகைப்படும். அவை மலம், கன்மம், மாயை, திரோதாயி என்பனவாம். சைவாகமங்களில் பாசம் ஐவகைப்படும் என்று கூறப்படுதலின், நான்கு வகையாவது எங்ஙனம் எனின் கூறுவாம். சிவதத்துவம் என்றும் விந்து என்றும் கூறப்படுகின்ற ஐந்தாவது பாசம் வித்தியேசுவரபதம் என்ற அபர முத்திநிலையை அடைவிக்கும் பாசமே ஆதலின் அதை விடுத்தோம் என்கிறார் ஆசிரியர். ஆகவேதான் தத்துவப் பிரகாசமும். மிருகேந்திரமும் பாசம் நான்கெனப் பகர்கின்றன. முதலாவது 'பிராவிருதி' எனப்படுவது, 'சூழ்ந்து மறைப்பது' என்பது அதன் பொருள். அதுவே ஆணவமாகும். அரிசியைச் சூழ்ந்து மறைக்கும் உமிபோல்வது, செம்பைச் சூழ்ந்து மணக்கும் களிம்பு போல்வது. இரண்டாவது 'பலம்' இதுவே திரோதான சக்தி எனப்படுவது, மூன்றாவது 'கர்மம்'. இது வித்தும் முளையும்போல் அநாதி பிரவாஹமாய் வருவது. நான்காவது 'மாயை'. இது மூலப்பிரகிருதியை உணர்த்தும். எந்த ஒன்றில் உலகம் பிரளயத்தில் ஒடுங்குகிறதோ (மாதி), எந்த ஒன்றினின்று சிருட்டியில் தோன்றுகிறதோ (ஆயாதி) அதுவே (மா + யா) 'மாயா' என வழங்குகிறது. இக்கருத்து சௌரபேயத்தில் கூறப்பட்டுள்ளது.

முப்பொருள் உண்மையே பொதுவாகக் கூறப்படுகின்ற போதிலும், பதி, ஞானம், அவித்யை, பசு, பாசம், பாசநீக்கம் என்ற ஆறு பிரிவுகளில் சைவ தர்சனம் இங்கே சுருங்கிய முறையில் கூறப்பட்டுள்ளது எனக் கூறி முடிக்கின்றார் மாதவாசாரியர். *

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே"

— திருநாவுக்கரசர்

பழுவேட்டரையர்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்

(பகுதி—3)

சிறு பழுவூர்த் திருவாலந்துறைத் திருக்கோயில் கிழக்கு நோக்கியது. கர்ப்பஇல், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நடராஜர் மண்டபம், அலங்கார மண்டபம் என்னும் பிரிவுகளை உடையது. அலங்கார மண்டபத்துக்குக் கிழக்குப் பக்கத்தில் அம்மன்கோயில் தெற்கு நோக்கிய சந்நிதியுடன் திகழ்கின்றது. முதற்பிராகார வாயிலில் ஒரு கோபுரமும், இரண்டாம் கோபுர வாயிலில் ஒரு கோபுரமும் ஆக இரண்டு கோபுரங்கள் இருக்கின்றன. அர்த்த மண்டபத்து வாசலடியில் உள்ள துவார பாலகர் ஒவ்வொருவரும் இரண்டு கைகளையுடையராய் இருக்கின்றனர். கர்ப்ப இல்லின் மேற்குப்புறத்து நடுச் சுவரில் இலிங்கோற்பவர் இருக்கின்றனர்.

கோயிலைக் கட்டியவர்

இக் கோயிலைக் கருங்கல்லால் கட்டியவர் **பழுவேட்டரையர் மறவன் கண்டனூர்** ஆவர். இச்செய்தி, 'ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரி பன்மற்கு யாண்டு 15-ஆவது குன்றக் கூற்றத்துப் பிரமதேயம் சிறு பழுவூர்த் திருவாலந்துறை மகாதேவர்க்கு உத்தராயணம் பற்றின அயன் சங்கிராந்திக்கு ஆடி அருளா மங்கல நாட்டு மங்கலத்து மங்கலமுடையான் கௌசியன் மாறனேன் ஆடியருள வைத்த நெய் நாராயத்தால் ஐந்நாழியால் ஆடு அஞ்சு **ஸ்ரீ கோயிலெடுப்பிச்ச பழுவேட்டரையர் மறவன் கண்டனூர்** அருளால் எடுப்பித்த மாறபிரான் வைத்ததிது. இவனே திருவாலந்துறை நல்லூர்க் குளத்தில் மாண்டேரிப் படிக்கு நடுவே......மாக்காணி நிலமும் நிச .. " என்னும் இக்கோயிலில் மகா மண்டபத்தின் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

கோயில் கட்டிய காலம்

இக்கோயிலைக் கருங்கல்லால் கட்டிய மறவன் கண்டனூர் கோப்பர கேசரி வர்மரின் 9-ஆம் ஆட்சியாண்டில் பூதற்குடியான திருவாலந்துறை நல்லூரில் நிலத்தை விலைக்குவாங்கி, வேட்கோவர், ஆராதனை செய்யும் பிராமணர், நந்தவனம் இறைப்பார், காளம் ஊதுவார், திருமெழுக்கிடுவார், திருப்பள்ளித் தாமம் பறிப்பார், திருப்பதியம் பாடுவார் உள்ளிட்ட இக்கோயில் பணியாளர்களுக்குப் பங்கு செய்து கொடுத்துள்ளனர். இங்குக் குறித்த பரகேசரி வர்மர் முதற் பராந்தக சோழர் ஆவர். இக்கோயிலில் உள்ள முதற் பராந்தக சோழரின் 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவரை மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மர் என்றே குறிப்பிடுகின்றது. இம் முதற் பராந்தக சோழர் கி.பி. 907 முதல் கி.பி. 955 வரை ஆண்டவர். இம் மன்னரது எட்டாவது ஆட்சியாண்டில் பழுவேட்டரையர் விக்கிரமாதித்தர் தேவியார் காமன்கோவியார் ஆலந்துறை மகாதேவர்க்குச் சந்திர சூரியர் உள்ளவரை ஒரு பிடி நெய் அட்டுவதற்குச் சிறு பழுவூர்ச் சபையார் வசம் பன்னிரண்டு ஆடுகளைக் கொடுத்துள்ளனர். இவைகளினால் கி.பி. 907 + 8 = 915-ஆம் ஆண்டிற்கு முன்னரே இக்கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது என்பது உறுதியாகின்றது. எனவே இதுபொழுதுள்ள இக்கோயில் கட்டப்பட்டுள்ள காலம் இற்றைக்கு 1049 ஆண்டுகளுக்கு முன்னராகும்.

கல்வெட்டுக்கள்.

இக் கோயிலில் சோழ மன்னர்களில் முதற் பராந்தக சோழன், முதலாம்

இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவன் முதலானோர் காலங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளன்றி மல்லராசர் தனுயக்க உடையார் முதலானோர் கல்வெட்டுக்களும் இருக்கின்றன.

பழுவேட்டரையர்கள் நிவந்தங்கள்.

முதலாம் இராசராச சோழரின் மூன்றாம் ஆட்சியாண்டில், அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் மகளார், விக்கிரமசோழ இளங்கோவேளார் தேவியார் திருவாலந்துறை மகாதேவர்க்கு நகரக் கல்லால் நூற்றுத் தொண்ணூற்று முக்கழஞ்சரை நிறையுள்ள வெள்ளிக் கலசம் ஒன்றையும், நூற்றுத் தொண்ணூற்றிரண்டு கழஞ்சு நிறையுள்ள வெள்ளி மண்டை ஒன்றையும் கொடுத்துள்ளனர். இம்மன்னனது ஏழாவது ஆட்சியாண்டில் அடிகள் பழுவேட்டரையன் கண்டன் மறவனார் தேவியடிகள் திருவாலந்துறை மகாதேவர்க்குத் திருவமுதுக்கு, போது இருநாழியாக மூன்று போதைக்கும் அரிசி அறுநாழிக்கும் பதக்கு நெல் வைத்துள்ளனர். இப்பதக்கு நெல் வருவாய்க்கு நிலம் வாங்கி அளித்திருந்தனர்.

முதலாம் இராச ராச சோழரின் மூன்றாம் ஆட்சியாண்டில் அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார், திருவாலந்துறை மகாதேவர்க்குப் பொன் இருபது கழஞ்சே ஆறு மஞ்சாடி நிறையுள்ள இரண்டு பட்டங்களையும், பொன் ஐங்கழஞ்சே மூன்று மஞ்சாடி நிறையுள்ள பொற்பூ ஐந்தையும், பொன் நாற்பது கழஞ்சு நிறையுள்ள மூன்று பட்டங்களையும், பொன் பூக்கள் ஐந்தையும் வைத்துள்ளனர்.

A. R. E. 1895 : 100—122
A. R. E. 1926 : 225—263
S. I. I. Vol XIII : 171, 188, 209, 210, 229
S. I. I. Vol V

கோப்பரகேசரி வர்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரின் (கங்கை கொண்ட சோழர்) எட்டாவது ஆட்சியாண்டில் அடிகள் பழுவேட்டரையர் பெண்டாட்டி வீராணன் ஒற்றியூர், திருவாலந்துறை மகாதேவர்க்குச் சித்திரை விஷுவுக்கும், ஐப்பசி விஷுவுக்கும், உத்தராயணத்துக்கும், தட்சிணாயனத்துக்கும் திருமஞ்சனம் ஆடி அருளி, பெருந்திரு வமுது செய்தருளுகைக்கு ஐம்பது காசை, சிறு பழூவூர்ச் சபையாரிடம் கொடுத்துள்ளனர். இக் காசுக்கு ஆண்டுதோறும் வந்த வட்டி, கீரன் இலக்குவன் மரக்காலால் நெல் முப்பதின் கலம் கொண்டு, சிறு பழூவூர்ச் சபையார் இவைகளை நடத்தி வந்தனர்.

கோப்பரகேசரி பன்மரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் **அடிகள் பழுவேட்டரையின் கண்டன் சுந்தர சோழன்**, திருவாலந்துறை மகாதேவர்க்கு இரவும் பகலும் எரிய நாராயத்தால் நிசதம் உழக்கு நெய் எரிக்க நூற்றெண்பது சாவா மூவாப் பேராடுகளைக் கொடுத்துள்ளான். இவனே நிலை இரண்டு, செப்புக்குடம் ஒன்று இவைகளையும் இட்டுள்ளான்.

திருப்பணிகள்

இக் கோயிலில் தனுயக்க உடையார் மண்டபம் ஒன்று இருக்கின்றது. அது மல்லரசர் தனுயக்கரால் கட்டப்பட்டது. விழாக் காலங்களில் இறைவரை இம்மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து திருவமுது செய்விப்பதற்கும், திருவிளக்கு எரிவதற்கும் ஆக, பூஞ்சுரக்குடி என்னும் ஊரை, சர்வமானியமாக தனுயக்க உடையார் இக் கோயிலுக்குக் கொடுத்துள்ளனர்.

இக்கோயில் திருக்குளத்துக்கும், பெருவழிக்கும் மேல்பால் உள்ள மண்டபத்தைச் செய்வித்தவர் இரவிமணியன் செம்பியதரையன் ஆவார். இச்செய்தி, "இத்திருமண்டபம் செய்வித்தான் வெண்கனூரில் காணி உடையார், செம்பியம் உடையார் இரவிமணியம் செம்பியதரை

யன்'' என்னும் அம் மண்டபத்தின் வட பாலுள்ள மூன்ருவது தூணில் உள்ள கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

அரியலூர் மழவராயர்

"யோகவனீஸ்வரசுவாமிக்கு உச்சிக் காலத் திருவிளக்குக் கட்டளைக்கு, அரசு நிலையிட்ட ரெங்கப்ப மழவராய பண்டாரத்தார் ஏலாக் குறிச்சியில் இலுப்பைத் தோப்பு ஒன்றை அளித்துள்ளனர்.

இச்செய்தி, பரிதாபி வருஷம் ஆவணி மாதம் 22-ஆம் தேதி திருப்பழுவூர் யோகவனீஸ்வர சுவாமிக்கு உச்சிக்காலத் திருவிளக்குக் கட்டளைக்கு ஏலாக்குறிச்சியிலுப்பை மரம், மாமரம், மாவடை, மரவடை உள்பட தோப்பு அரசு நிலையிட்ட ரெங்கப்ப மழவராய பண்டாரத்தார் அவர்கள் உபயம். இந்த தருமத்துக்கு யாதாமொருவன் விகாதம் பண்ணினுகில் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான்'' என்னும் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. **மாவடை**—கிராமத்தில் கால்நடை அடையும் இடம். **மரவடை**—மரத்திற்குரிய வரி.

பிறர் அளித்துள்ள நிவந்தம்.

கோப்பரகேசரிபன்மரின் பதினைரும் ஆட்சியாண்டில் திருவாலந்துறை மகாதேவர்க்கு உத்தராயண சங்கிராந்தியின் பொழுது திருவமுதுக்குக் குத்தல் அரிசி குறுணியும், நெய்யமுது நாழியும், தயிரமுது குறுணியும், கறியமுதும், கணவதியார்க்குப் பங்குனித் திருவோணத்தின் பொழுது அவல் அமுது தூணியும், தேங்காய் பத்தும், சர்க்கரை பதின் பலமும் இத்தனைக்குமாக, இத் தேவதானம் வேட்டமக்குடி வன்னிச் செய் மயக்கிச் செய்வித்தான் ஸ்ரீ காரியம் ஆராய்ந்த மாறபிரான் நம்பி, முதற் பராந்தக சோழரோடு, பாண்டியனுர் முப்படை கொணர்ந்து வெள்ளூரில் பொருத பொழுது, பழுவேட்டரையர் கண்டன் அமுதனுர் இறந்துபட, அவர்க்கு வீர ஸ்ரீ உண்டாவதன் பொருட்டு, பொய்கைக் குறுவிடத்து பரதூருடையான் நக்கன் சாத்தன் திருவாலந்துறை மகாதேவர்க்கு சந்திராதித்தவல் எரிய நிசதப்படி நாராயத்தால் உழக்கு நெய்க்கு முப்பது சாவா மூவாப்பேராடுகளை வைத்துள்ளான். இவனே, பழுவேட்டரையர் கண்டன் அமுதனுர் திரு நட்சத்திரம் புனர்பூசத்தின்பொழுது திங்கள் தோறும் இரு நாழி நெய் ஆடி அருள ஆடுகளைக் கொடுத்துள்ளான். இவை முதற் பராந்தக சோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்தன. இங்குக் குறித்த பழுவேட்டரையர் கண்டன் அமுதனுர் சோழர் படை வீரர்களில் ஒருவர் ஆவர்.

முதற் பராந்தக சோழரின் முப்பத்தாரும் ஆட்சியாண்டில் சிறுபழுவூர்த் திருவாலந்துறை மகாதேவர்க்கு, இந்தஊர் உடையான் சாத்தன் திருவாரடிகள் கல்லுவித்த திருமஞ்சனக் கிணறு ஏற்றமிட்டு இதன் கீழை நந்தவனம் திருத்திச் சந்திர சூரியர் உள்ளவரை இறைப்பதாகவும், கோயிலார், ஷை திருவாரடிகளிடம் பொன் பெற்றனர். இச் செய்தி மறவனீச் சரத்துக் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

மறவனீச்சரம்

இக் கோயில் திருவாலந்துறை மகாதேவர் கோயிலுக்குத் தென்கிழக்கில் மிக அண்மையில் இருக்கின்றது. கிழக்கு நோக்கிய சந்நிதியை உடையது. இது பொழுது கர்ப்பஇல், அர்த்த மண்டபம் என்னும் இருபகுதிகளை உடையதாய் உள்ளது. கோயில் இன்னும் சில ஆண்டுகளில் முற்றிலும் இடிந்துவிடக்கூடிய நிலையில் உள்ளது. இக் கோயில் இக்காலம் பசுபதீச்சரம் என்னும் பெயருடன் திகழ்கின்றது. அர்த்த மண்டபத்தில் அம்மன் தெற்கு நோக்கி எழுந்தருளுவிக்கப்பட்டிருக்கின்றனர். அர்த்த மண்டபத்தின் வாயிலடியில் ஒரே ஒரு துவார பாலகர் இரண்டு கைகளுடன் இருக்கின்றனர்.

இங்குள்ள கல்வெட்டுக்கள்

இத்திருக் கோயிலில் எட்டுக் கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளுள் ஏழு கல்வெட்டுக்கள் கோப்பரகேசரி வர்மனுகிய முதற்பராந்தக சோழன் காலத்தவை. (A.R.E. 1926: 216-224).

இத்திருக்கோயிலைக் கட்டியவர். பழுவேட்டரையர் மறவன் கண்டனுர் ஆதல் வேண்டும். இவர் முதற் பராந்தக சோழன் காலத்தில் இருந்தவர். இவரே திருவாலந்துறைக் கோயிலைக் கட்டியவர்.

இவர் சிறு பழுவூர்த் திருவாலந்துறைக் கோயிலுக்கு முதற் பராந்தக சோழரின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் பூதற்குடியான திருவாலந்துறை நல்லூர் நிலத்தில், சிறு பழுவூர்த் திருவாலந்துறை மகா தேவர் கோயில் பணியாளர்க்கு நிலத்தைப் பங்கு செய்து கொடுத்த கல்வெட்டில், "மறவனீச்சரத்துத் தேவர்க்கு நந்தா விளக்கு எரிக்கப் பங்கு இரண்டு என்று குறித்துள்ளனர்.

—(தொடரும்)



சென்னை மாநில ஆக்டிங் கவர்னர் மேதகு ஸ்ரீ பி. சந்திரா ரெட்டியார் அவர்கள், சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலுக்கு வருகை தந்த நிகழ்ச்சி (3-11-64).

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தொலைவில்லிமங்கலம் சேர்ந்த எம்பெருமானார் அவ்வூரைக் கண்ணை அகலவிழித்து நோக்கினார். "நோக்கும் பக்கமெல்லாம் கரும்போடு செந்நெலோங்கு செந்தாமரை" யாய், அவ்வூர் தோன்றிய காட்சியைக் கண்டு வியந்தார். ஊரிலே எங்கும் வேதவொலி. விழாவொலி, வேள்விப் புகை. திருமகள் மகிழ்ந்து இருந்து வாழும் அம்பதியிலே தேவபிரானாக நின்றும், அரவிந்த லோசனனாக வீற்றிருந்தும் ஸேவை சாதிக்கும் எம்பெருமான்களை ஸாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டார். அரவிந்தலோசனின் விழித்தாமரைகளில் தேக்கிடும் கருணை மதுவைத் தம்மனமெனும் வண்டுகள் தேக்கிடும்படி கண்ணெனும் முகவையால் மொண்டு பருகினார். மழை பெய்தாலொக்கும் கண்ணநீர்கள் சொரிதர, சிந்தை தம் வயமின்றித் தம் மணிக்கொள் வாசகமும் மணிவண்ணன் நாமமேயாய் மெல்ல மெல்ல அங்கு நின்றும் கால் பெயர்த்தார்.

அங்ஙனம் பெயர்த்தவர்; நம்மாழ்வார் பராங்குச நாயகியாய்த் தன் கோல்வளை நெஞ்சத் தொடக்கமெல்லாம் பாடற்றொழிய இழந்து பல்வளையார்முன் பரிசழிந்த மாயக்கூத்தன் திருப்பதியான திருக்குளந்தை சென்றடைந்தார். அங்கே ஆச்ரிதர்களைப் பரிசழித்த அவன் வென்றி அவ்வூர் மாடந்தோறும் கொடிகட்டிப் பறக்க எழுந்தருளியிருக்கும் சோரநாட்டியனைக் கிட்டி ஸேவித்தார். அவன் மாயத்திலே ஆழ்ந்தார். பின் ஒருவாறு சிந்தை தேறி அங்கு நின்றும் பாலர்கள் குழுவின் விளையாட்டொலியும், பண்டிதர் குழுவின் வேதவொலியும் தம்முள் மயங்கி யொலிக்கும் ஒலி எப்போதும் மாறாத தலமான தென்திருப்பேரைபுக்கார். வள்ளை இணைகளிலே வான்சுடர் இரண்டு தூங்கி யசைவது போன்று காதுகளிலே நீண்ட மகரக்குழைகள் அசைந்தாட எழுந்தருளியிருக்கும் மகர நெடுங்குழைக்காதனை விழுந்து வணங்கி அவனழகிலே ஈடுபட்டுத் தம் நெஞ்சைப் பறிகொடுத்தார். வேறு வேறுருவும் செயலும் கொண்டு வையத்தை ஊழிதோறூழி காத்து நிற்கும் முகில் வண்ணப் பெருமான் தன் திருவடிகளிலே ஞாலமும் கடலும் விசும்பும் சிறீதாம்படி பெருகிய காதலுடையராய் அம்முழங்கு சங்கக் கையனது மாயத்து ஆழ்ந்தார்.

பின்னர் அங்கு நின்றும் மெல்லத் தம்மை வாங்கி மேற்குநோக்கிப் பயணமாய்ப் பெருமான் திருநாமச் சுவையினும் மாறன் திருப்பேர் இனிமை மிகுந்ததாகக் கண்டு சுவைத்துத் தேவு மற்றறியாராய்த் திகழ்ந்த ஸ்ரீ மதுரகவி திருவவதாரம் செய்த திருக்கோளூரை நெருங்கினார். அப்போது அவ்வூரினின்று வந்துகொண்டிருந்த பெண் ஒருத்தி உடையவர் திருவடிகளிலே தெண்டனிட்டு நின்றாள். அவர் அவளை நோக்கி 'பெண்ணே! எங்கு நின்றும் வருகிறாயம்மா?' என்று வினவ, அவளும் "ஸ்வாமீ! திருக்கோளூரினின்றும் சென்று கொண்டிருக்கிறேன்" என விடையிறுத்தாள். எம்பெருமானார் அம்மா! "திண்ணம்! என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே" என்றல்லவா ஆழ்வார் அருளினார்- எல்லார்க்கும் புகும் ஊர் உனக்குப் போகும் ஊராய் விட்டதா? என்று சற்று நெகிழ்ந்த முறையிலே கேட்டார்.

அப்பெண் உடையவரை சற்று ஏங்கிய நோக்கால் முகநோக்கி, "ஸ்வாமீ எத்தனை பெரிய கேள்வியை எளியேனிடம் கேட்டுவிட்டீர்கள், நான் என்ன அழைத்து வருகின்றேன் என்றேனே அக்ரூரரைப் போலே; அஹம் ஒழித்து நின்றேனே விதுரரைப் போலே; தேகத்தை விட்டேனே ருஷிபத்னியைப் போலே; தசமுகனைச் செற்றேனே பிராட்டியைப் போலே; தாய்க் கோலம் செய்தேனே அநசூயையைப் போலே,

தந்தை எங்கே என்றேனோ துருவனைப் போலே; பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே; ஏதேனும் என்றேனோ குலசேகரரைப் போலே; அவன் தெய்வம் என்றேனோ மண்டோதரியைப் போலே; அஹம் வேத்மி என்றேனோ விசுவாமித்திரனைப் போலே; இனிதொன்று வைத்தேனோ சபரியைப் போலே; இங்கும் உண்டென்றேனோ பிரகலாதனைப் போலே; இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப் போலே; இருகையும் விட்டேனோ த்ரௌபதியைப் போலே... என்று இது போன்று கிட்டத்தட்ட எண்பது வார்த்தைகளை அடுக்கி "ஸ்வாமீ! இவர்களில் ஒருவருடைய ஞானத்திலே ஒரு பகுதியேனும் அடியேனுக்கிருந்தால் திருக்கோளூரில் விடைகொண்டிருக்கலாம். அவ்வித ஞானம் லேசமும் அடியேனுக்கில்லையே. முயல் புழுக்கை வரப்பிலே கிடந்தாலென்ன? வயலிலே கிடந்தாலென்ன?" என்று விண்ணப்பித்து நின்றாள். எம்பெருமானார் வெலவெலத்துப் போனார். போகும் பெண் பாடே இதுவானால் புகுந்து தங்கியிருக்கும் மற்றையோர் தன்மை எதுவாயிருக்கும் என்று எண்ணி, மகிழ்ந்தது அவர் திருவுள்ளம். அவளுடைய ஆத்மபரிபக்குவத்தை மிகவும் மெச்சியவராய், உடையவர் தம்மை யார் என்று அறிமுகப் படுத்திக்கொள்ளவே, அப்பெண் மனம் பதறி மீட்டும் அவர் திருவடிகளிலே விழுந்து 'ஸ்வாமி! அடியாளுடைய வெறுங்கலத்து ஓசையை மன்னித்தருள வேண்டும் என்று பணிந்து நிற்க, உடையவரும் 'அம்மா! உன்னுடைய தெளிந்த ஞானம் என்னை உலுக்கிவிட்டது. இன்று நாம் உன்னுடைய அதிதியாய்ப் பிக்ஷை யேற்போம்" என்ன அப்பெண்ணும் பெரும் பேறு பெற்றவளாகப் பூரித்து உடையவரையும் சீடர்களையும் தன் திருமாளிகைக்கு எழுந்தருளப்பண்ணி அவர்களுக்கு அமுதளிக்கும் பேறு பெற்று மகிழ்ந்தாள். அங்கே உடையவர் "யோகணைவான் பொய் யுறக்கனைச் சாய்ந்து வாழ்வில் எய்த்தவர்க்குச் சேமமாக வைத்த மாநிதியாக எழுந்தருளியிருக்கும் வனப்பிலே தம்மைப் பறிகொடுத்து நெடுங்கண்கள் பனிமல்க நின்று ஸேவித்து, மாறன் திருவடி நிலையான மதுரகவி யாழ்வாரையும் வணங்கி, செல்வம் மல்கியவன் கிடந்த திருக்கோளூரை அரிதிலே பிரிந்து புறப்பட்டார். அப்பெண்ணுக்குத் தம் போனகசேடமும். ஸ்ரீபாத தீர்த்தமும் அருளிச் சிஷ்யையாய் ஏற்றார்.

திருமாமகள் மலிந்திருந்து வாழ்ந்ததாகவும், செல்வம் மல்கி அவன் கிடந்ததாகவும் ஆழ்வார் உளம் களித்துப் போற்றிய தொலைவில்லி மங்கலமும் திருக்கோளூரும் இன்றுள்ள நிலையை வைகுண்ட ஏகாதசி யன்றொரு நாளாவது ஸேவிக்கும் செல்வவந்தரான பக்தர்கள் பார்த்திருப்பர். அவ்வூர்களில் எம்பெருமான் திருக்கோயில்கள் இருக்கும் நிலையைக் கண்டும் ஆழ்வார் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் அவர்கள் ஏன் ஒரு முயற்சியும் செய்யவில்லை என்பது ஒரு பெரிய புதிராகவே இருக்கின்றது. அறநிலைய அதிகாரிகளும் பணம்படைத்த அன்பர்களும் ஆழ்வார் வாக்கைப் பயனுடைத்தாக்க வகை வழி காண வேண்டும் என்பது அடியேனுடைய பிரார்த்தனை.

கோளூர்ப் பெண்ணின் வரலாறும் அவள் கூறிய 81 வார்த்தைகளும் திருவாய் மொழிப் பிள்ளை அருளிச் செய்ததாக வானமாமலை பெரிய ஜீயர் அருளிச் செய்தார் என்று பன்னீராயிரப்படி குருபரம்பரை கூறும். அவ்வார்த்தைகளிலே எம்பெருமானார் பாஷ்யம் அருளினமை, அமுதனார் அந்தாதி பாடியது, பட்டர் செயல்கள் முதலியனவும் வருதலின், இந்நிகழ்ச்சி பட்டர் வாலிபராய் நின்று வாதிட்ட காலத்தே நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும், அது உடையவரின் வாழ்வு நாளிலே கடைசியில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. அப்படியாயின் உடையவர் இப்போது கூறப்படும் ஸ்தல யாத்ரைக்குப் பின் மீண்டும், அவர் இத்திசைக்குப் போந்திருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. பெரியோர்கள் தெளிவுபடுத்தப் பிரார்த்திக்கின்றேன்.

திருக்கோளூரினின்றும் உடையவர் திருக்குருகூர் நகருக்குப் பயணமானார். ஸ்ரீ வைஷ்ணவர்கள் எதிர்கொண்டு வரவேற்றார்கள். மணிமாட நீடு திருக்குருகூரை, சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு திருக்குருகூரை, கொக்கலர் சோலையும் தாழை வேலியும் வளம்கொள் தண் பணைகளுமாய் விளங்கும் திருக்குருகூரை, பிற தலங்களைப்போல

வழுவித்துச் சொல்லத் தேவையின்றி உண்மையிலேயே தண் பொருனை வலம்வரும் திருக்குருகூரை வலம் வந்து நோக்கினர் உடையவர். இவ்வூரன்றோ கூடஸ்தரான குலபதியை அருளியது என்று பூரித்தார். இவ்வூரன்றோ தத்துவ பரதத்துவங்கள் விளங்க எம்பெருமான் நின்றவிடம் என்று வியந்தார். அவர் உள்ளத்தின் ஓட்டம்,

இதுவோ திருநகரி ஈதோ பொருநல்
இதுவோ பரமபதத் தெல்லை—இதுவோதான்
வேதம் தமிழ்செய்து மெய்ப்பொருட்கு முப்
பொருளாய்
ஓதும் சடகோபன் ஊர்.

என்ற அமுதொழுகு பாடலாகப் பரிணமித்தது. சித், அசித் ஈச்வரன் என்ற மூன்று தத்துவங்களின் உண்மையை விளக்கிய சதுமறைப் புரோகிதனைத் தந்த ஊரல்லவா! முரண்பட்ட பல பகுதிகளைக் கொண்டு படிப்பார் எளிதில் ரஸிக்க முடியாத வேதங்களின் சாரத்தைப் பிழிந்து காட்டி அவ்வேதங்களை அனைவர்க்கும் இனிக்கும் படி செய்த ஏந்தலைப் பெற்ற நகரல்லவா? பரதத்துவ உண்மையைத் தருக்கச் சுழல் மூலமின்றி பரதத்துவமே தெளிவிக்கத் தான் கண்டு உலகுக்கும் காட்டிய பரம தார்மிகரைப் பெற்ற திவ்ய தேசமல்லவா? குலபதியின் பிறப்பிடத்தே குலக்கொழுந்து குதூகலித்தல் இயல்பு தானே! அத்திரு நகர்ப் பெயரை யாருக்கேனும் இட்டு அழைக்கவேண்டும் என்ற ஒரு அவா அவர் மனத்தே அரும்பியது.

கோயிலை வலம் வந்தார். கொடியணி கோபுர வாசல் உள்புக்கார். ஆழ்வாரின் திவ்யமங்கள வடிவே தன்நெஞ்சு நிறையப் பெற்றவராய் "கண்ணிநுண் சிறுத்தாம்பை" அநுஸந்தித்த வாறே சென்று திருப்புளி யாழ்வாரை வலம் வந்து, குறைவேதம் கொண்ட கோணல் பார்வையர்தம் கோணல்களை நிமிர்த்துத் தெளிந்த உண்மையைப் போதித்த நிறைஞான முத்திரை நிமிர்ந்த திருக்கையும், பரதத்துவ உண்மையைத் தெள்ளத் தெளிந்த மொழியிலே திருவருள் செய்த திருப்பாவையையும், நாட்டுக்காகத் தாம் மன்றுடி, பரதத்துவம் தந்த மயர்வறுமதி நல ஒளியும், 'பொலிக! பொலிக! பொலிக! போயிற்று வல்லுயிர்ச்சாபம்' என வாழ்த்தி அவ்வாழ்த்து பலிதமாகும் என்று "கலியும் கெடும்" என்ற உறுதிகூறித் தம் தீர்க்க த்ருஷ்டியிலே 'உலகுயிரனைத்தும் மாதவன் பூதங்களேயாய்ப் பண்தான்பாடி நின்றுடிப் பரந்து திரிகின்ற கட்கினிய காட்சியைக்கண்டு "கண்டோம்! கண்டோம்!! கண்டோம்!!! கண்ணுக்கினியன கண்டோம்!" என்று தம் உள்ளம் பெற்ற நிறைவைத்தேக்கி ஸேவிப்பார்க்கு நம்பிக்கை யொளி வீசிநிற்கும் திருமுக மண்டலமுமாய், ஞாலத்தே அறியாமை யிருள்விளக்கும் அதிசய அருக்கனாய் அமர்ந்து ஸேவை ஸாதிக்கும் சடகோபனது மங்கள வடிவின் முன்பே அடிமுடியாக விழுந்து கிடந்தார். மெல்ல எழுந்து அம் மெய்ஞ்ஞானக் கனியைக் கண்களாலே சுவைத்து இன்புற்று நின்றார். ஆழ்வாரும் தம் தீர்க்க திருஷ்டி பலிதமாகத் தோன்றிய பண்புடைய கருவி இவர் என்பதைத் தெளிந்தவராய் இவருக்குப் பரியட்டம் மாலை முதலிய ப்ரஸாதித்துத்தம் செம்மாபாதபொற்பும் தலைசேர்த்தருளினர். அத்திருவடி நிலைகளைச் சிரமேற்ற உடையவர் அத்திருவடி நிலைகளாகவே தாம் என்றென்றும் இருக்கவேண்டும் என்ற தம் அவாவை வெளியிட அனைத்து ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஆழ்வார் திருவடிகளுக்கு அதுவரை இருந்த ஸ்ரீ மதுரகவிகள் என்ற திருநாமத்தை மாற்றி ஸ்ரீ ராமாநுஜம் என்று புதிய நாமகரணம் செய்வித்தனர்.

பின்னர் ஆழ்வார்க்கு உத்தேச்யரான ஆதிப்பிரான் ஸன்னிதிக்கு எழுந்தருளினர். அங்கே தன் பரத்வம் தோன்றக் குன்றம்போல் ஆழி பொலிந்துநிற்கும் ஆதிப்பிரானை அடிதொழுது அவர் அருளப்பாடு பெற்று மாலை திருப்பரிவட்டம் ப்ரஸாதம் முதலியன ஸாதிக்கப்பெற்று அவ்வூரிலே சிலகாலம் தங்கினர்.

அங்நகரிலுள்ள அனைவரும் அவர் திருவடிகளை ஆச்ரயித்து க்ருதார்த்தராயினர். ஒருநாள் ஈரங்கொல்லிச் சலவையாளர் ஒருவர் இவர் திருவடிகளிலே சேவித்து நின்றார்.

—(தொடரும்)

களத்தூர்க் கல்வெட்டுக்கள்

டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., Ph.D.

செங்கற்பட்டிற்குத் தெற்கில் ஏறத்தாழ எட்டுக்கல் தொலைவில் பொன் விளைந்த களத்தூர் அமைந்துளது. ஒத்திவாக்கம் புகைவண்டி நிலையத்தில் இறங்கி இவ்வூரை அடைதல் வேண்டும். ஒத்திவாக்கம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்காக ஒரு கல் தொலைவில் களத்தூரைச் சேர்ந்த **முன்குடுமி ஈசர் கோவில்** உள்ளது. அது ஊரின் வடகிழக்கில் தனியே அமைந்துள்ளது. அதைச் சுற்றிலும் தெருக்களே இல்லை. ஒத்திவாக்கம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்குத் திசையில் ஏறத்தாழ மூன்று பர்லாங் தொலைவில் **திருவானைக் கோவில்** உள்ளது. களத்தூரில் **ஆதிபுரீசர் கோவில்** என்னும் பெயரில் வேறொரு சிவன் கோவில் உண்டு. இம் மூன்று கோவில்களில் உள்ள **கல்வெட்டுக்கள்** களத்தூரின் பண்டைநிலையையும் மக்களது சமயப்பற்றையும் வேறு பல அரிய செய்திகளையும் நமக்குத் தெரிவிக்கின்றன. அவற்றை இங்குக் காண்போம்.

முன்குடுமி ஈசர் கோவிலில் இருபது கல்வெட்டுக்களும், ஆதிபுரீசுவரர் கோவிலில் நான்கு கல்வெட்டுக்களும், திருவானைக் கோவிலில் பதினாறு கல்வெட்டுக்களும் உள்ளன. இக்கல் வெட்டுக்கள் அனைத்தும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தை ஆண்ட **பல்லவர், சோழர், விஜய நகர வேந்தர்** முதலியோர் ஆட்சி ஆண்டுகளில் வெளியிடப்பட்டவைகளாகும்.

இன்று முன் குடுமி ஈசர் கோவில் என்று கூறப்படுவது பண்டைக் காலத்தில் **'பெருந்திருக் கோயில்'** எனப் பெயர் பெற்றது; இன்று ஆதிபுரீஸ்வரர் கோயில் என்பது அக் காலத்தில் **அருவீசுவரம்** எனப்பட்டது; இன்று திருவானைக் கோவில் எனப்படுவது அக்காலத்தில் **திரு ஆலக் கோவில்** எனப்பட்டது; இன்று அக்கோயில் சிவனார் பெயர் திருவாலீசுவரர் என்பது. ஆயின், அவரது பழம் பெயர் **திரு ஆலக் கோயிலுடைய மகாதேவர்** என்பது. அரசர்கள் அரசியல் அலுவலர், வணிகர், கோவில் பணிமக்கள், பொதுமக்கள் முதலியோர் கோவிலில் பலவகை விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள், பசுக்கள், நிலங்கள், காசுகள் முதலியவற்றை ஊரவையாரிடம் அல்லது கோவில் ஆட்சியாளரிடம் அல்லது கோவில் குருக்களான சிவப்பிராமணரிடம் ஒப்புவித்தல் வழக்கம்; இவ்வாறே கோவில் வழிபாட்டிற்கும். விழாக்கள் முதலியவற்றிற்கும் நிலத்தையும், பணத்தையும் கொடுப்பது வழக்கம்; கடவுளர் திருவுருவங்களை எழுந்தருளச்செய்து அவற்றின் பூசை விழாக்களுக்காக நிலத்தையோ காசையோ கொடுப்பதும் உண்டு. இத்தகைய அறங்கள் என்றும் நடைபெறுவதற்காகவே கோவில் சுவர்க்கற்களில் வெட்டப்பட்டுள்ளன. அக் கல்வெட்டுக்களில் அவை வெட்டப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசர் பெயர்களும், அவர்தம் வீரச் செயல்களும், அக் கல்வெட்டுக்கள் எழக் காரணமான அறங்கள் பற்றிய விவரங்களும், பொறிக்கப் படுதல் அக்கால வழக்கம். இனிக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் விவரங்களை இங்குக் காண்போம்:

அரசர்கள்

நந்தி வர்ம பல்லவன்	—கி.பி. 9 ஆம் நூற்றாண்டு
குலோத்துங்கன் I	—கி.பி. 1070 – 1120
விக்கிரம சோழன்	—கி.பி. 1118 – 1135
குலோத்துங்கன் II	—கி.பி. 1133 – 1150
இராசராசன் II	– கி.பி. 1146 1163
குலோத்துங்கன் III	– 1178 – 1218
விஜயகண்ட கோபாலன்	—கி.பி. 1246 – 1279

* இக்கட்டுரைக்கு உதவிய கல்வெட்டுக்கள்
A. R. E. 191 , Nos. 3:2—365 ;
A. R. E. 1932-33, Nos. 73-74 and 84– 7.

(மூன்றும் இராசேந்திரன் காலத்தவன்)
வீர கம்பண உடையார் கி.பி. 1364
விருப்பண்ண உடையார் கி.பி. 1398
இராசநாராயண சம்புவராயர்—கி.பி. 14 ஆம் நூற்றுண்டு
புக்கண உடையார் —கி.பி. 1404
சதாசிவராயர் —கி.பி. 1542—1565

நில அறம் :

(1) கோவில் பணிமக்களுள் கோவிலுக்கு **ஆடை** நெய்து வழங்கும் கைக்கோளருள் உடன் பிறந்தார் மூவர் பெருந் திருக் கோவில் வழிபாட்டிற்காக நில தானம் செய்தனர்.

(2) தாமல் கோட்டத்து வல்ல நாட்டு வழுதலை மாம்பாக்கத்து அம்மையொருத்தி சிறுதண்டலம் என்ற கிராமத்து நிலத்தைத் தானம் செய்தாள்.

(3) பெருந்திருக் கோவிலில் தேவரடியார் சிலர் பணி புரிந்தனர். அவருள் உடன் பிறந்தார் இருவர் அக் கோவிலுக்கு நிலதானம் செய்தனர். அவருள் ஒருத்தி **க்ஷேத்திரபாலர்** சிலையை அக் கோவிலில் வைத்தாள்.

(4) இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய அரசியல் செயலாளனை **அநபாய மூவேந்த வேளான்** களத்தூரிலும் களத்தூரைச் சுற்றிலும் இருந்த சில நிலங்களைத் திருமடை விளாகத்திற்கும் நந்தவனத்திற்கும் பயன்படத்தக்க முறையில் 'குலோத்துங்க சோழன் - **திருத்தொண்டத் தொகை நல்லூர்**' என்ற பெயரில் ஒன்று சேர்த்துப் பெருந்திருக் கோவிலுக்குத் தேவதானமாக வழங்கும்படி தொண்டைநாட்டுத் தலைவனை **தொண்டைமானுக்கு** ஆணை பிறப்பித்தான்.

(5) அதே கோவில் தேவரடியார் வெவ்வேறு நிலங்களைக் கோவிலுக்கு வழங்கினர். அவருள் ஒருத்தி விட்ட நிலத்தின் அளவு 1152 **குழி** ஆகும்.

(6) வீர நரசிங்கராயர் காலத்தில் **கல்பட்டு** என்ற சிற்றூர் பெருந் திருக்கோவிலுக்கு அறமாக விடப்பட்டது.

(7) விஜயகண்ட கோபாலன் காலத்தில் தான் பெருந்திருக் கோவிலில் **அம்மன் கோவில் கட்டப் பட்டது** ; அதனை நடைமுறைக்கு நிலம் விடப்பட்டது.

(8) அருவீசுவரத்தில் உள்ள **பைரவர் கோவிலுக்கு மோசிப் பாக்கம்** தானமாக விடப்பட்டது ; இது கி. பி. 16-ஆம் நூற்றுண்டு நிகழ்ச்சியாகும்.

(9) வீரகம்பண உடையார் திரு ஆலக் கோவிலுக்கு **உத்தம சோழ விளாகத்து** நிலங்களைத் தானம் செய்தார். அந்த கோவிலுக்குப் **புதுப்பாக்கத்து** நிலமும் தானம் செய்யப்பட்டது.

(10) பலர் ஒன்று சேர்ந்து அக் கோவிலிலுள்ள **சந்திரசேகரர்** சிலைக்குப் படையல் முதலியவற்றிற்காகச் **சிறுதண்டலம்** கிராமத்து நிலங்களை எழுதி வைத்தனர்.

(11) இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் **அரும்பாக்கத்து** நிலங்கள் '**அநபாய நல்லூர்**' என்ற பெயரில் கோவிலுக்கு விடப்பட்டன.

(12) அதே மன்னன் காலத்தில் வல்ல நாட்டு **நென்மலி** கிராமத்து நிலங்கள் சில 'குலோத்துங்க சோழன் — '**திருநீற்றுச் சோழநல்லூர்**' என்ற பெயரில் கோவிலுக்கு விடப்பட்டன.

(13) இராச நாராயண சம்புவராயர் காலத்தில் திரு ஆலக்கோவில் திருமடை விளாகமும் சுற்று நிலங்களும் அக்கோவிலின் வழிபாட்டிற்கும் பழுது பார்ப்பதற்கும் சர்வமான்யமாக விடப்பட்டன. அந்த மானியத்தைக் கோவில் அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்.

விளக்கு அறம்

அக்காலத்தில் கோவில்களில் எரிக்கப்பட்ட விளக்குகள் பலவகைப்பட்டன ;

காலை மாலைச் சந்தி நேரங்களில் எரிக்கப்பட்ட விளக்கு **சந்தி விளக்கு** எனப்பட்டது; எப்பொழுதுமே அணையாமல் எரிக்கப்பட்ட விளக்கு **நந்தா விளக்கு** எனப்பட்டது. இரவு நேரங்களில் குறிப்பிட்ட கால அளவில் எரிக்கப்பட்ட விளக்குகளும் வழக்கில் இருந்தன.

ஒரு விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு, அரைக்கால் விளக்கு என்று பலவகை அளவுகளைக்கொண்டு விளக்குகள் பெயர் பெற்றன. கோவிலுக்குச் செய்யும் அறங்களுள் விளக்கெரிக்கும் அறமே மிகச் சிறந்தது என்பது நம் முன்னோர் கருத்து. தம் நலனுக்காகவும், தம் வீட்டார் நலனுக்காகவும், அரசன் நலனுக்காகவும், செய்த குற்றத்திற்குத் தண்டனையாகவும், மக்கள் கோவில்களில் விளக்கெரித்து வந்தனர். இங்ஙனம் விளக்கறம் செய்பவர் ஆடுகள், பசுக்கள், எருமைகள், பணம் இவற்றுள் ஒன்றைக் கோவிலாரிடம் ஒப்புவித்தல் வழக்கம். அவர்கள் அவ்வறத்தைத் தொடர்ந்து செய்து வருதல் மரபு. உள்ளூராரும் வெளியூராரும் இத்தகைய அறங்களைச் செய்தனர்.

(1) திரு **மயிலார்ப்பில்** (மயிலாப்பூர்) மாடவீதிப் பெருந்தெருவில் வாழ்ந்த வணிகன் ஒருவன் பெருந்திருக் கோவில் மகாதேவர்க்கு விளக்கெரிக்கப் பணம் தந்தான்.

(2) திருவொற்றியூர்த் தேவரடியாரான அரவிந்தவல்லி என்பவள் பெருந்திருக் கோவிலில் விளக்கெரிக்கப் பணம் தந்தாள். முன்பு சொல்லப்பட்ட வணிகன் விளக்குத் தண்டை வழங்கினான்.

(3) அதே கோவிலைச் சேர்ந்த தேவரடியார் இருவர் இரண்டு விளக்குகள் எரிக்கப் பணம் உதவினர்.

(4) வாணியன் ஒருவன் ஒரு விளக்கெரிக்கப் பணம் உதவினான்.

(5) களத்தூரில் வாழ்ந்த பிராமணன் ஒருவன் இரண்டு விளக்குகள் எரிக்கப் பணம் தந்தான்.

(6) அருவீசுவரம் கோவிலில் உத்தமன் வருகையன் என்பவன் ஒரு சந்தி விளக்கு வைத்தான்.

(7) அதே கோவிலில் பைரவமூர்த்தியின் சிறு கோவிலில் விளக்கெரிக்க நிலம் விடப்பட்டது.

(8) வெண்குன்றக் கோட்டத்துக் குவளையைச் சேர்ந்த பாரசிரன் தழுவக் குழைந்தான் ஆளுடையான் திரு ஆலக் கோவிலுக்கு விளக்கு தானம் செய்தான்.

(9) முன்பு கூறப்பட்ட மயிலார்ப்பில் வணிகன் இக் கோவிலுக்கும் விளக்குத் தண்டு வழங்கினான்.

(10) ஊற்றுக் காட்டுக் கோட்டத்து ஆற்றூரைச் சேர்ந்த ஒருவன் ஒரு விளக்கு எரிக்க நான்கு பசுக்களை வழங்கினான்.

(11) இக் கோவிலைச் சேர்ந்த கைக்கோளருள் ஒருவன் அரை நந்தா விளக்கு எரிக்க 15 பசுக்களை உதவினான்.

(12) இக் கோவிலுக்கு வடக்கேயுள்ள மலைமீது விளக்கெரிக்க இரண்டாம் இராசராசனது இருபத்தாறும் ஆட்சியாண்டில் (கி. பி. 1171-இல்) **கரிகால சோழத் தமிழதரையன்** என்பவன் நிலம் வழங்கினான்.

பிற அறங்கள்:

(1) முன்பு கூறப்பெற்ற திருவொற்றியூர்த் தேவரடியாள் அரவிந்தவல்லி பெருங்கோவிலில் சண்டிசர் சிலையை எழுந்தருளச் செய்தாள்.

(2) அருளாளப் பெருமாள் என்ற இராசராச **விழுப்பரையன்** தன் தாயின் நலனுக்காகப் பெருந்திருக் கோவிலில் அம்மன் கோவிலைக் கட்டினான்.

(3) அருவீசுவரமுடைய மகாதேவர் கோவிலில் உய்ய வந்தாள் செம்பொன் என்பவள் இறைவன் திருமுழுக்குக்காகக் கோவில் எல்லையுள் கிணறு எடுப்பித்தாள். இது கி. பி. 13-ஆம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகும்.

(4) கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டின் பெரும் பகுதியை ஆண்ட மல்லிநாதன் இராசநாராயண சம்புவராயர் என்பவன் திரு ஆலக்கோவிலுக்குப் பதினைந்து பசுக்களை வழங்கினான்

பொதுச் செய்திகள்:

(1) களத்தூர் ஊரவர் கோவிலாட்சியையும் கவனித்தனர்.

(2) அக்காலத்தில் கோவில்களில் விளக்கெரிக்க நெய்யே வழங்கப்பட்டது. அதனை அளக்கப் பயன்பட்ட படியின் பெயர் **இராசகேசரி நாழி** எனப்பட்டது. இராசகேசரி, பரகேசரி என்பவை சோழர் வைத்திருந்த பட்டங்கள். 'இராசகேசரி' என்னும் பட்டம் தந்தைக்கு இருப்பின், மகன் 'பரகேசரி' என்ற பட்டத்தைத் தாங்குதல் வழக்கம், இராஜகேசரிவர்மன் என்ற பெயர், பிற்காலச் சோழப் பேரரசை உண்டாக்கின ஆதித்த சோழனையும், தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய இராசராசனையும் குறிக்க வழங்கப்பட்டது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது.

(3) இரண்டாம் குலோத்துங்கனின் அரசியல் செயலாளன் அநபாய மூவேந்த வேளான் எனப்பட்டான். '**அநபாயன்**' என்பது இரண்டாம் குலோத்துங்கனுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகும். தொண்டைமான் என்பவன் தொண்டை நாட்டு அதிகாரி. அரசன் தொண்டை நாட்டில் செய்த அறங்கள் இவன் வழியாகவே செய்யப்பட்டன என்பது இரு கல்வெட்டுக்களால் தெரிகின்றது.

(4) திரு ஆலக்கோயில் ஒரு குழுவினர் ஆட்சியில் இருந்தது.

(5) சோழர்க்குப் பின்பு கோவில் அறங்கள் சிதைந்தன. இந்நாடு விசயநகர வேந்தர் ஆட்சிக்கு உட்படப் புக்கராயர் மகனான **வீரகம்பண உடையார்** காரணராய் இருந்தார். அவர், வழிபாட்டிற்கும் பழுது பார்க்கவும் நிலம் இல்லாத கோவில்களுக்குப் பல ஊர்களை வழங்கினார். அவ்வீரரே திரு ஆலக்கோவில் வழிபாட்டிற்கும் பழுது பார்க்கவும் கி.பி. 1364-இல் நிலம் வழங்கினார்.

(6) பழைய சைவம்-பாசுபதம், லகுலீசபாசுபதம், காபாலிகம், பைரவம், மாவிரதம் என்று பலவகைப்பட்டது. லகுலீசபாசுபதம் - **காளாமுகம்** என்றும் பெயர் பெற்றது.

லகுலீசபாசுபதர் எனப்படும் காளாமுகர் குஜராத் நாட்டில் **காரோகணத்தில்** தங்கள் தலைமை ஆச்சாரிய பீடத்தை உடையவர்கள். அவர்கள் ஏறத்தாழக் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே தமிழகத்தில் இருந்து வந்தனர். காளாமுகர் வட இந்தியாவிலும் தக்கணத்திலும் பரவிப் பல மடங்களை ஏற்படுத்திக்கொண்டனர். அவற்றுள் **கோமடம்** என்பது ஒன்று. அம்மடத்துத் துறவிகளான **சைலராசி பண்டிதர், ஞானராசி பண்டிதர்** என்பவர் களத்தூர் ஆலக்கோவிலையடுத்த மடத்திலிருந்து சமயத் தொண்டு செய்தனர் என்பது திரு ஆலக்கோவில் கல்வெட்டுக்களால் தெரிகின்றது. அக்கோவில் வடபுறச் சுவரில் **பரஞ்சோதி பண்டிதர்** என்ற காளாமுக ஆச்சாரியரின் சிலை இன்றும் உள்ளது.

(7) களத்தூருக்கு 'கங்கை கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம்' என்ற பெயரும் இருந்தது. கங்கைகொண்ட சோழன் என்பவன் முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012-1044) ஆவன். அவன் கங்கை வரையில் படையெடுத்துச் சென்று கங்கை நீரைக் கொண்டு வந்தவன் ஆதலால் 'கங்கை கொண்ட சோழன்' எனப்பட்டான். நான்கு வேதங்களிலும் வல்லவர் சதுர் வேதிகள் எனப்பட்டனர். அவருக்கு வழங்கப்பட்டவூர் 'சதுர்வேதி மங்கலம்' எனப்பட்டது.

(8) தேவர் அடியாள் ஒருத்தி **சண்டேசர்** சிலையைக் கோயிலுள் எழுந்தருளச் செய்தாள் என்பது முன்பு கூறப்பட்டதன்றோ? சண்டேசர் என்பவர் நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர். சிவபெருமான் அவரது பக்தியின் சிறப்பை மதித்து அவரைத் தாம் வாழும் கோவில்களுக்கு மேலாளர் பதவியில் அமர்த்தினர் என்று பெரியபுராணம் பேசுகிறது. அதனால் ஒவ்வொரு கோயிலிலும் கருவறைக்கு இடப்புறத்தில் அவரது சிறிய கோயில் அமைந்துள்ளது. கடவுள் சார்பில் கோவில் அறங்கள் அனைத்தையும் பெறுபவர் அவரே. ஆதலால் கோவில் பத்திரங்கள் அவர் பெயரிலேயே அமைந்திருக்கும்.

(9) இன்று ஒவ்வொரு சிவன் கோயிலிலும் அம்மனுக்குத் தனிக்கோயில் உண்டு. ஆயின். கி.பி. 10-ஆம் நூற்றுண்டுக்கு முன்பு வரையில் அம்மனுக்குத் தனிக்கோயல் இல்லை. அதனுற்றான் பெரும்பாலான கோயில் அறங்கள் சுவாமிக்கென்றே அமைந்துள்ளன. களத்தூர்ப் பெருந்திருக் கோயிலிலும் மூன்ரும் இராசராசன் காலத்திற்ருன் **அம்மன் கோயில் புதிதாகக் கட்டப்பட்டது** என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

நாட்டுப் பிரிவுகள்

தொண்டை நாடு இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. **கோட்டத்தின் உட்பிரிவு நாடு எனப்**பட்டது. ஓர் ஊர் இன்ன நாட்டு இன்ன கோட்டத்தது என்னும் விவரம் கல்வெட்டுக்களில் வெட்டப்பட்டது. கீழ்வருவன இவற்றை வளக்கும்:

(1) களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டுக் களத்தூர்.

(2) களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டு உழலூர் என்ற இராசராச நல்லூர்.

(3) தாமல் கோட்டத்து வல்ல நாட்டு வழுதலை மாம்பாக்கம்.

(4) வெண்குன்றக் கோட்டத்துக் குவளை.

(5) ஊற்றுக் காட்டுக் கோட்டத்து ஆற்றூர்.

(6) செம்பூர்க் கோட்டத்துப் பட்டின நாட்டுக் கொடுவூர்.

(7) சோழர் காலத்துக் '**கோட்டம்**' என்ற நிலப்பகுதியின் பெயர், சோழர்க்குப் பின்வந்த விசயநகர வேந்தர் காலத்தில் '**சீர்மை**' என வழங்கப்பட்டது. அவர்கள் காலத்துக் கல்வெட்டு ஒன்றில்—'களத்தூர்ச் சீர்மையிலுள்ள மோசிப்பாக்கம்' என்பது காணப்படுகிறது.

ஊர்கள்

மேலே கூறப்பெற்ற கல்வெட்டுக்களுள் கீழ்வரும் ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன.

திருமயிலார்ப்பில் (இன்றைய மயிலாப்பூர்). சிறு தண்டலம். பாழிப்பாக்கம், ஒட்டிப்பாக்கம், (இன்றுள்ள ஒத்திவாக்கம்), கல்பட்டு. உத்தமசோழ விளாகம் (இவ்வூர் இன்று உத்தம சோழபுரம் என்றும், விளாகம் என்றும் இரண்டு சிற்றூர்களாக மாறியுள்ளது), புதுப்பாக்கம், நரியன்சேரி, களத்தூரைச் சுற்றியுள்ள சிற்றூர்களைச் சேர்ந்த நிலப்பகுதி 'களத்தூர்ப் பற்று' எனப் பெயர் பெற்றது.

அரசியல் அலுவலர்

(1) சோழப் பேரரசர் ஆட்சியில் இருந்த சிற்றரசரும் அரசாங்க உயர் அலுவலரும் தங்கள் இயற் பெயருடன் தங்கள் அரசன் பெயரையும் அலுவற் பெயரையும் சேர்த்து வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தமை கல்வெட்டுக்களால் தெரிகிறது. 'அநபாயன்' என்பது இரண்டாம் குலோத்துங்கனுடைய சிறப்புப் பெயர்களுள் சிறந்தது. அவனது அரசாங்கச் செயலாளன் 'அநபாய மூவேந்த வேளான்' எனப்பட்டான். அவனது அலுவற் பெயர் **திரு மந்திர ஓலை**; அரசருடைய ஆணைகளை ஓலைகளில் எழுதி விடுப்பவன் என்பது பொருள்.

(2) விசயநகர வேந்தர் காலத்தில் அரசாங்க உயர் அலுவலர் வேறு பெயர்கள் பெற்றனர். அவற்றுள் '**வாசல்**' என்பது ஒன்று. களத்தூர்க் கல்வெட்டு ஒன்று. '**வாசல்**' ராயப்ப நாயகர் என்பவரைக் குறிக்கிறது. இங்கு 'வாசல்' என்பது அரசவை. அரசவையில் சிறப்பு அலுவலன், அதாவது, அரசாங்கச் செயலாளன் 'வாசல்' எனப்பட்டான்.

மக்கட் பெயர்கள்:

களத்தூர்க் கல்வெட்டுக்களில் காணப்படும் ஆண்பாற் பெயர்களையும் பெண்பாற் பெயர்களையும் கீழே காண்க; காக்கு நாயகன், ஆளுடைய நாயகன், மல்லநந்தை, பரமேசுவரன், வீமராயி ராவுத்தர், (இது ஒரு நாயகரின் பெயர்; இவர் மகன் ஈரப்ப நாயகன்), உத்தமன் வடுகையன், பாரசிவன் தழுவக் குழைந்தான் ஆளுடையான், மல்லிநாதன் இராச நாராயணன், வேணுவுடையான் புண்டரிகன், அரவிந்தவல்லி, **பொன்னி**; இவள் அரசியல் அதிகாரியின் மகளாதலால் '**பொன்னியார்**' எனப்பட்டாள்.

களத்தூர்க் கோயிற் காட்சிகள்.





திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில், சென்னைத் திருவேட்டீச்சுரன்பேட்டைக் கோயிலில் நடைபெற்ற பாவை மாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் திரு M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L., அவர்கள் தலைமையுரை நிகழ்த்துதல் (7-1-65).

மாயூரம் ஸ்ரீ மயூரநாதர் கோயிலில் நடைபெற்ற பாவை மாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் திரு M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தல், (31-1-65).



திருவிடைமருதூர்க் கோயிலின் சிறந்த காட்சி

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras 34, Printed at Manorama Press 39, M. J. B. St, Madras-5.